பக்கங்கள் - 40
விலை - 40ரூபா

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 283 ஆவணி 22 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 08 செப்ரெம்பர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

## ரணிலை மெச்சி நன்றி கூறுகிறேன்

### இப்படிச் சொன்னார் சுமந்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம், செப். 8
கடந்த நான்கு ஆண்டுகளில் என்ன நடந்தது, ஒன்றும் நடக்கவில்லை என்று சொல்கிறவர்களுக்கு, இந்தக் கட்டடங்கள் பதில் சொல்லும். இவற்றைச் செய்யும் தலைமை அமைச்சரை மெச்சுவதுடன், அவருக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ் 37

## நகர மண்டபம் நல்லூரை போன்று அழகாக அமையும்

### ரணில் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், செப். 8
நாங்கள் அடிக்கல் நட்ட யாழ்ப்பாண நகர மண்டபம் மிக அழகிய மண்டபமாக அமையும். நல்லூரைப் போன்று அழகாக அமையும். இது வெறும் கட்டடம் அல்ல. யாழ்ப்பாண நகரை அபிவிருத்தி செய்வதன் முதல் கட்டம் இதுவாகும். இவ்வாறு 37

## ஓமந்தையில் வாள்வெட்டு

### 6பேருக்கு காயம்

வவுனியா, செப். 8
வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாணிக்கர் வளவு பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் 6 பேர் காயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
மாணிக்கர் வளவைச் சேர்ந்த இரு தரப்புக்கு இடையில் நேற்றுமுன்தினம் சிறு முரண்பாடு ஏற்பட்டுள்ளது.
அதன் தொடர்ச்சியாக நேற்று இரவு வீட் 35

## வெளிவாரிப் பட்டதாரிகள் ரணிலுடன் நேற்று சந்திப்பு

யாழ்ப்பாணம், செப். 8
பட்டதாரிப் பயிலுநர் நியமனத்தின்போது புறக்கணிக்கப்பட்ட வெளிவாரிப் பட்டதாரிகள், யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் சந்தித்துப் பேச்சு நடத்தினர். தமக்கும் நியமனம் வழங்குமாறு அவர்கள் 37 கோரிக்கை விடுத்தனர்.

# முன்வைத்த காலை பின்னால் எடுக்கேன்

### சஜித் நேற்றுச் சூளுரை



கொழும்பு, செப்ரெம்பர் 8
குறுக்கு வழியில் ஒருபோதும் ஆட்சியதிகாரத்தை பெற்றுக்கொள்ள மாட்டேன். அதேபோன்று அரச தலைவர் வேட்பாளராக களமிறங்கவுள்ள தீர்மானத்தில் இருந்து சிறிதேனும் பின்வாங்கவும் மாட்டேன். ஐக்கிய தேசியக் கட்சிக்காக சேவைகள் செய்துள்ள என்னை ஆதரிப்பதில் தலைமைத்துவம் தயக்கம் கொள்ளும் பின்னணி அறியப்படவில்லை என்று அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். 37

## அல்லைப்பிட்டி விபத்தில் பெண் சாவு

யாழ்ப்பாணம், செப். 8
கப் ரக வாகனம் வீதியைவிட்டு விலகியதால் ஏற்பட்ட விபத்தில் வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்தார்.
இந்தச் சம்பவம் தீவகம் அல்லைப்பிட்டிச் சந்தியில் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்றது.
சம்பவத்தில் யாழ்ப்பாணத்தின் பிரபல வர்த்தகர் ஒருவரின் வாகனமே விபத்துக்குள்ளாகியது. அவரது உறவினரான வயோதிப்பெண்ணே அதிர்ச்சியில் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித் 35



யாழ்ப்பாண நகர வீதிகளை இரட்டை அடுக்குப் பேருந்து நேற்று அலங்கரித்தது. என்டர்பிரைஸ் சிறிலங்கா கண்காட்சிக்காக கொண்டு வரப்பட்ட இந்தப் பேருந்தை பெருமளவானோர் ஆர்வத்துடன் பார்த்து மகிழ்ந்தனர். (ஒ.5)

## இருளின் பேய் மீண்டும் தலை தூக்குகிறது யாழ்ப்பாணத்து மக்களே ஒன்று சேருங்கள்

### என்டர்பிரைஸ் கண்காட்சியில் தேர்தல் பரப்புரை

யாழ்ப்பாணம், செப். 8
இருளின் பேய் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளது. யாழ்ப்பாணத்து மக்களே நாட்டைக் கட்டியெழுப்ப ஒன்றுசேருங்கள் என்ற கோரிக்கை நேற்று நடைபெற்ற என்டர்பிரைஸ் சிறிலங்கா தேசியக் கண்காட்சியில் முன்வைக்கப்பட்டது.
யாழ்ப்பாணத்தில் என்டர்பிரைஸ் சிறிலங்கா தேசியக் கண்காட்சி நேற்று மாலை 4.30 மணிக்கு ஆரம்பமானது. 35

## வடக்கில் மட்டும் மக்கள் கொல்லப்படவில்லை தெற்கிலும் ஏராளமானோர் கொல்லப்பட்டனர்

### யாழில் கூறினார் சம்பிக்க ரணவக்க

யாழ்ப்பாணம், செப். 8
வடக்கில் மட்டும் மக்கள் படுகொலை செய்யப்படவில்லை. தெற்கிலும் ஏராளமான இளையோர் படுகொலை செய்யப்பட்டனர். இலங்கை மக்கள் தங்களின் நாட்டிலேயே ஒற்றுமையுடனும் நல்லிணக்கத்துடனும் வாழ நடைமுறை சாத்தியமான முயற்சிகளை நாம் முன்னெடுக்க வேண்டும் என்று மேல் மாகாணம் மற்றும் மாநகர அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க 37

## டிப்பரிலிருந்து இறங்கியவர் அதனுள் சிக்குண்டு சாவு

### கிளிநொச்சியில் சம்பவம்



கிளிநொச்சி, செப். 8
கிளிநொச்சி, முரசுமோட்டைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் குடும்பத் தலைவர் உயிரிழந்துள்ளார்.
டிப்பர் வாகனத்தில் ஏறி சாரதியுடன் பேசி 35

## தேர்தல் காலத்திலாவது யாழ்ப்பாணம் மீது கரிசனை காட்டுவதையிட்டு சந்தோசம்

### ரணிலை போட்டுத் தாக்கிய ஆளுநர் ராகவன்

யாழ்ப்பாணம், செப். 8
தேர்தல் காலத்திலாவது யாழ்ப்பாணம் மீது கரிசனை காட்டுவதையிட்டு சந்தோசம் அடைகின்றேன் என்று வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் கூறினார். யாழ். 37

## மானிப்பாயில் வீட்டாரை தாக்கி நகை, பணம் நேற்றுக் கொள்ளை

யாழ்ப்பாணம், செப். 8
இணுவில் வீதி மானிப்பாய் பகுதியில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் வீட்டின் முன் பக்கம் 35

# ஹேமசிறி, பூஜித மீது கொலைக்குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 8

முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள பொலிஸ் மாஅதிபர்பூஜிதஜயசுந்தரஆகியோர்மீதுகொலைமற்றும்கொலைச் சதி குற்றச்சாட்டுகள் சுமத்தப்படவுள்ளதாக, சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஹேமசிறிபெர்னாண்டோமற்றும் பூஜித ஜயசுந்தர ஆகியோருக்கு கொழும்புதலைமை நீதிவான் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட பிணையை மீளாய்வு செய்யக் கோரி, கொழும்பு மேல்நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்த விசாரணைகளில் சட்டமா அதிபர் தரப்பில் முன்னிலையான பிரதி சொலிசிற்றர் ஜெனரல் திலீப பீரிஸ், ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும்பூஜிதஜயசுந்தரஆகியோர் மீது, கொலை மற்றும் கொலைச் சதிக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படவுள்ளன என்று தெரிவித்தார்.

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தாக்குதல்கள் குறித்து. இவர்கள்இருவருக்கும்அரசபுலனாய்வு சேவையால் திரும்பத் திரும்ப எச்சரிக்கைகள் விடுக்கப்பட்ட போதும், உரிய நடவடிக்கை எடுக்கத் தவறினர் என்றும், பிரதி சொலிசிற்றர் ஜெனரல்திலீப பீரிஸ், கூறினார்.

பொலிஸ் மா அதிபருக்கு 131 தடவைகளும், முன்னாள்பாதுகாப்புச் செயலருக்கு 97 தடவைகளும், புலனாய்வு எச்சரிக்கைகள், அரச புலனாய்வுஅமைப்புகள்வழங்கப்பட்டுள்ளன.

இந்தஎச்சரிக்கைகளைகவனத்தில் கொள்ளாமல், கொலைகள் இடம்பெறுவதற்கு காரணமாக இருந்துள்ளனர் என்ற அடிப்படையிலேயே இவர்களுக்கு எதிராக கொலை மற்றும் கொலைச் சதி வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும், பிரதி சொலிசிற்றர் ஜெனரல்திலீபபீரிஸ்தெரிவித்துள்ளார். (ஒ.5)



## புதிய பேருந்து நிலையக் கட்டடத்தை பார்வையிட்டார் ரணில்

யாழ்ப்பாணம், செப். 8

யாழ்ப்பாணத்தில்92மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுவரும் பேருந்து தரிப்பிடக் கட்டடத்தைதலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுப்பார்வையிட்டார்.

யாழ்ப்பாணத்துக்குநேற்று வருகை தந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, மற்றும் அமைச்சர்சம்பிக்கரணவக்கமு.ப 10.45 மணியளவில் யாழ்ப்பாணம் முனீஸ்வரன் வீதியில், புல்லுக்குளத்துக்குமுன்பாகஅமைப்பட்டுவரும்பேருந்துதரிப்பிடக் கட்டடத்துக்கு வருகை தந்தனர்.

அவர்களை யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இ.ஆனல்ட் மற்றும் மாநகரசபை ஆணையாளர் த.ஜெயசீலன் ஆகியோர் வரவேற்றனர். அவர்களுடன் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்றஉறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் த.சித்தார்த்தன் ஆகியோரும் நின்றிருந்தனர்.

மேல்மாகாண மற்றும் நகரஅபிவிருத்திஅமைச்சால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் 'இனிய நகரம்' அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 92 மில்லியன் ரூபா செலவில் பேருந்து தரிப்பிடம் அமைக்கப்படுவதோடு, முனீஸ்வரன் பாதையும்சீரமைக்கப்பட்டு வருகிறது.

முனீஸ்வரன் பாதையின் சீரமைப்புவேலைகள்முடிவுறாதநிலையில்பேருந்து தரிப்பிடத்துக்கான கட்டத்தை மட்டும்ரணில்விக்கிர மசிங்க பார்வையிட்டார். அது தொடர்பான விளக்கங்களும் அவருக்கு வழங்கப்பட்டிருந்தன. (ஒ.5,21,105)

## இலங்கைக்கு வந்தது பங்களாதேஷ் கப்பல்

கொழும்பு, செப்.8

பங்களாதேஷ் கடற்படை கப்பல் ஒன்று நான்கு நாள் பயணம் ஒன்றை மேற்கொண்டு கொழும்புத் துறைமுகத்துக்கு நேற்று வந்துள் ளது.

'சோமுத்ரா அவிஜான்' என்றழைக்கப்படும் இக் கப்பலுக்கு இலங்கை கடற்படையினரால் வரவேற்பளிக்கப்பட்டது. நல்லெண்ண அடிப்படையில் வருகைத்தந்த குறித்த கப்பலின் அதிகாரிகளுடன் இலங்கை கடற்படை அதிகாரிகள் விரிவான கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

நான்கு நாள் உத்தியோக பூர்வ பயணத்தின்போது, நாட்டிலுள்ள பிரபலமான இடங்களைப் பார்வையிடுவதற்கும் விளையாட்டு மற்றும் கலாசார நிகழ்வுகளில் பங்குகொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளன. (எ)

## புலனாய்வுஅதிகாரியை கொழும்பில்காணவில்லை

கொழும்பு, செப். 8

அரச புலனாய்வு பிரிவில் பணியாற்றி வந்த பொலிஸ் அதிகாரி ஒருவரைக் காணவில்லை என்றுஅவரின்மனைவி நாராஹேன்பிட்டிபொலிஸ்நிலையத்தில்நேற்று முன்தினம்முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இரவு தனது மகனுக்கு அலைபேசி மூலம் அழைப்பை மேற்கொண்டு, தான் வீட்டுக்கு வருவதற்கு தாமதமாகும் என்று அறிவித்துள்ளதாகவும், அதன் பின்னர் அவர் வீடு திரும்பவில்லை எனவும், அவரது மனைவி தெரிவித்துள்ளார். (ஒ.5)

## அடுத்த அரச தலைவரிடம் அமைச்சுக்கள் இருக்காது

### ஆனால் அரசின் தலைவராக இருப்பார் என்கிறார் ஜயம்பதி

கொழும்பு, செப். 8

19 ஆவது திருத்தச்சட்டத்துக்குஅமைவாகஅடுத்து வரும் அரச தலைவரிடமிருந்து அமைச்சுக்கள் மட்டுமே இல்லாது போயுள்ளதாகவும், எனினும்அரசின் தலைவராக அவரே தொடர்ந்துக் காணப்படுவார் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்ரமரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில், நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகசந்திப்பிலேயேமேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டில் தற்போது நடைமுறையில் இருக்கும் 19 ஆவதுதிருத்தச்சட்டத்துக்கு அமைவாக, தற்போதுள்ள அரச தலைவருக்கும் அடுத்த அரச தலைவருக்கும் இடையில் பல்வேறு வித்தியாசங்கள்காணப்படுகின்றன.

அரசதலைவருக்கானஅதிகாரங்களை எடுத்துக் கொண்டால், அடுத்து ஆட்சி பீடமேறும் அரச தலைவருக்கு அமைச்சுக்கள் வழங்கப்படாது. பாதுகாப்பு அமைச்சுக்கூட அவரின்கீழ்இருக்காது. அமைச்சுக்கள்இல்லாதுபோனால், அவருக்குக் கீழ் எந்தவொரு திணைக்களங்களும் இருக்காது.

அந்தளவுக்குஅவருக்கான அதிகாரங்கள் குறைக் கப்பட்டுள்ளன. எனினும், ஏனைய அதிகாரங்கள் அவருக்குஅப்படியேதான் இருக்கும்.

உதாரணமாக, அரசதலைவர்தான்அரசின்தலைவராகவும் அமைச்சரவையின் தலைவராகவும் செயற்படுவார். அமைச்சுக்களுக்கான செயலர்களை நியமிப்பது, அகற்றுவது போன்ற அதிகாரங்கள் அவரிடம் இருக்கும். அத்தோடு, முப்படைகளின் தளபதியாகவும்அரசதலைவர் தொடர்ந்து இருப்பார். இவற்றில்எந்தவொருமாற்றங்களும் நிகழப்போவதில்லை-என்றார். (ஒ.5)

# யாழ். நகர மண்டபத்துக்கு அடிக்கல் நட்டார் ரணில்





யாழ்ப்பாணம், செப். 8

வடகிலுள்ள ஒரேயொரு மாநகர சபையான யாழ்ப்பாண மாநகர சபைக்குரிய நிரந்தரக் கட்டடத்தை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு யாழ்ப்பாணம் மாநகர மைதானத்தில் நேற்று இடம்பெற்றது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தார்.

யாழ்ப்பாண மாநகர சபை கட்டடம், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம் தற்போது அமைந்துள்ள இடத்துக்கு அருகில் இருந்தது. போர்க்காலத்தில் இராணுவத்தினரால் மாநகர சபைக் கட்டடம் தரைமட்;டமாக்கப்பட்டது. அதன்பின்னர் நல்லூரில் மாநகர சபை அலுவலகம் இயங்கி வருகின்றது. மாநகர சபைக்கு புதிய கட்டடம் அமைப்பதற்கு மகிந்த அரசின் காலத்தில், அப்போது அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தாவால் அடிக்கல் நடப்பட்டது. இருப்பினும் நிதி ஒதுக்கீடுகள்எவையும்மேற்கொள்ளப்படாததால் கட்டடம் அமைக்கப்படவில்லை.

இந்த நிலையில் 2 ஆயிரத்து 350 மில்லியன் ரூபா செலவில் யாழ்ப்பாண நகரத்துக்கான கட்டடம் அமைக்கப்படவுள்ளது. 4 ஆண்டுகளில் இது முழுமைபெறும். மேல்மாகாண மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சால்நடைமுறைப்படுத்தப்பட்டுவரும்இனியநகரம்அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இதற்கான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அடிக்கல்நடும்நிகழ்வில்தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் பட்டலி சம்பிக்க ரணவக்க, இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சோ.சேனாதிராசா, ஈ.சரவணபவன், த.சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன்ஆகியோரும்,யாழ்ப்பாணமாநகர முதல்வர் இ. ஆனோல்ட், யாழ்ப்பாணமாவட்டச்செயலர் ந. வேதநாயகன், மாநகரசபைஆணையாளர் த.ஜெயசீலன்ஆகியோரும்கலந்து கொண்டனர். (ஒ.5,21,105,ரி)


அபான்ஸ் எலைட் காட்சியறைகள் தினமும் இரவு 9.00 மணிவரை திறந்திருக்கும்.
உங்கள் பழைய பிரிட்ஜின் பழைய கம்பிரெஸர்
மின்சாரத்தை
சாப்பிடுகிறது
வெளித்தோற்றம் பார்ப்பதற்கு பளபளப்பாக இருந்தாலும் உங்கள் பிரிட்ஜின் கம்பிரெஸர் ரொம்ப பழசாக இருக்கலாம். அதனால் நீங்கள் இன்றே புத்தம் புதிய கம்பிரெஸர் கொண்ட LG குளிர்சாதனப் பெட்டிக்கு மாறுங்கள். மாதா மாதம் வீண் விரயமாக நீங்கள் செலுத்தும் பணத்தை சேமித்திடுங்கள்.
இப்போது புத்தம் புதிய இன்வெர்டர் லீனியர் தொழில்நுட்பத்துடன் வரும் LG குளிர்சாதனப் பெட்டிகளின் கம்பிரெஸர் 42% வரை மின்சாரத்தை சேமிக்கிறது.
LG
Life's Good
மின்சாரத்தை சேமிக்கும்
INVERTER LINEAR COMPRESSOR
10 YEAR WARRANTY
Inverter Linear Compressor
R600a
வட்டியில்லா 18 மாதம் கொடுப்பனவு
மின்சாரத்தை 42% வரை சேமிக்கிறது
Door Cooling
ரூ.84,990 இலிருந்து
பிஸ்டன் டைப்
இன்வெர்டர் லீனியர் கம்பிரெஸர்
இன்வெர்டர் லீனியர் கம்பிரெஸர் சாதாரண கம்பிரெஸரைப் போல் 4 இடங்களில் மோதாமல் ஒரு இடத்தில் மாத்திரம் மோதுவதால் தேவையற்ற செயன் முறைகளை தவிர்த்து மின்சாரத்தை அதிகமாக சேமிக்கிறது.
டோ கூலிங்
டோ கூலிங் தொழில்நுட்பம் மூலம் விரைவாக குளிரூட்டப்படுவதால் அதிகமாக மின்சாரம் சேமிக்கப் படுவதோடு, குளிர்சாதனப்பெட்டி முழுவதும் ஒரேயளவு சமச்சீரான குளிர் காற்றை வெளியேற்றி குளிர்சாதனப் பெட்டியின் புத்துணர்ச்சியை பேணுகிறது.
Hygiene Fresh+
காற்றினால் உணவு அசுத்தமாவதை வடிக்கட்டிகளின் மூலம் 5 படிமுறைகளில் 99.9% வரை அகற்றி சுத்தம் செய்கிறது. குளிர்சாதனப்பெட்டியில் உள்ள காற்றை தூய்மைப்படுத்துகிறது.
±0.5°c
லீனியர் கூலிங்
±0.5 °C குளிர்சாதனப்பெட்டி வெப்பநிலையின் ஏற்ற இறக்கங்களை ஒருசீராக நடைமுறைப்படுத்தி உணவின் புத்துணர்ச்சியை நீண்ட நாட்களுக்கு பராமரிக்கிறது. சாதாரண குளிரூட்டலை விட புத்துணர்ச்சியை நீண்ட நாட்களுக்கு பேணுகிறது.
டிரெக்ட் கூல்
நோ புரொஸ்டி
பனி படியாது
எந்தவொரு வகையிலும் பனிப்படியாத காரணத்தினால் உணவுகளிலுள்ள புத்துணர்ச்சி மிகவும் சிறந்த முறையில் பேணப்படுகிறது. பனிக்கட்டிகளை உடைப்பதற்கு தேவையற்ற விதத்தில் சிரமப்பட தேவையில்லை.
*நிபந்தனைகள் உண்டு
0115999000
Buy Abans.com
நாடளாவிய அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ள முடியும்.
Abans


EVEREADY
SUPER HEAVY DUTY
EVEREADY®
FOR LIFE
நீண்ட கால
சக்தி
IMPORTED & DISTRIBUTED BY
Millers
Established 1854
121, Biyagama Road, Kelaniya.
Tel: 011 2904400
millers@millerslimited.com

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

புதிய யுகத்துக்கான
ஊடகப் பயணத்துக்கு நீங்கள் தயாரா???




"ஊடக ஆளுமைகளுக்கான தேடல்"
[ செயலமர்வும் வேலைவாய்ப்பும் ]
பயிற்சியும், சர்வதேசத் தரம் வாய்ந்த சான்றிதழும், உடன் வேலைவாய்ப்பும் உங்களுக்காக!

ஆர்வமுள்ளோர் 10.09.2019 க்கு முன்னர் தபால் மூலமோ
அல்லது மின்னஞ்சல் ஊடாகவோ விண்ணப்பியுங்கள்.

ஊடக ஆளுமைகளுக்கான தேடல்
"உதயன்"
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

: tamilsmartmedia@gmail.com



**வாடகைக்குண்டு**
ஹையஸ் வான் வியாபார விநியோக வகையில் ஏற்றவாறு சாரதியுடன் நாள் வாடகைக்கு உண்டு.
**077 980 4315**



அத கோடிபதி
ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 724
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2019.09.07
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 87,565,465/-
வெற்றி இலக்கங்கள்
04 60 61 74 N
விசேட வெற்றி இல.
6324

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3232
திகதி: 2019.09.07
சனிக்கிழமை
பச்சை
SATURDAY FORTUNE
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து
16 21 34 42 L
போனஸ் இலக்கம்
19
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட்
59,444,765/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778


# அறிவித்தல்

வற்றாப்பளை கண்ணகி அம்மன்
ஆலய பரிபாலனசபை
பொதுக்கூட்டம்

**காலம் : 22/09/2019**
**நேரம் : மு.ப. 09.00மணி**
**இடம் : ஆலய வளாகம்**

**வாக்காளர் குழாமிற்காக உள்ளீர்ப்பு செய்யப்பட்டவர்களும்**
ஆலய அபிஷேக உபயகாரர்களும் கலந்துகொள்ளலாம்.

வற்றாப்பளை,
முள்ளியவளை

செயலாளர்
வற்றாப்பளைக் கண்ணகி அம்மன்
ஆலய பரிபாலனசபை


www.esoft.lk
TVEC APPROVED CENTRE
PEARSON
A Pearson Assured organisation



நாட்டின் மிகவும் பிரசித்தி பெற்ற
இரட்டை டிப்ளோமா
யாழில் எம்மிடமிருந்து மட்டுமே..!
PEARSON (UK) சான்றிதழ்
IT மற்றும் ஆங்கிலம்
வார நாட்களாயின் – 4 மாதங்கள் வார இறுதி நாட்களாயின் – 6 மாதங்கள்
வகுப்பு நாட்கள்
14 SEP 2019
16 SEP 2019

ஏனைய சர்வதேசத்தரம் வாய்ந்த டிப்ளோமாக்கள்
- Diploma in Business Management
- Diploma in Hardware & Networking
- Diploma in Computerized Accounting
- Diploma in Software Engineering
- Diploma in Web Engineering
- Diploma in Auto CAD
- Diploma in Graphic Designing
- Diploma in Business English
- Diploma in Academic English
- Diploma in Hospitality Management

முதலாம் டிப்ளோமாவிற்கு 25% கட்டணச்சலுகை
இரண்டாம் டிப்ளோமாவிற்கு 50% கட்டணச்சலுகை
மொத்த செலவு ரூ. 17,125

HOTLINE 021 7 572 572
ESOFT METRO CAMPUS
No. 137, K.K.S Road, Jaffna | Tel.: 021 222 4142
SRILANKA'S ONLY PEARSON PLATINUM AWARD WINNER PEARSON ANNUAL AWARDS 2018
40 Branches Island-wide | Sri Lanka's Largest Private Sector Higher Education Network | www.esoft.lk



NEW SCIENCE WORLD
**NEW SCIENCE WORLD DAY CLASSES**

**PAST PAPERS AND MODEL PAPERS**

## இரசாயனவியல்
**Dias**
திங்கள், செவ்வாய்
4.00pm - 6.00pm

## பௌதீகவியல்
**R.குகன்**
சனி, ஞாயிறு
7.30am - 9.30am

## இணைந்த கணிதம்
**S.S செந்தில்ராஜ்**
செவ்வாய், புதன், வெள்ளி
2.00pm-3.30pm

**ஆரம்பம்: 09.09.2019 Monday**

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்




வவுனியா, செப். 8
வவுனியா தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் நிர்வாகத் தெரிவுநேற்றுஇடம்பெற்றது. இராஜேஸ்வரன் போட்டியின்றி மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார்.

வவுனியா தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் 21ஆவது ஆண்டு பொதுக்கூட்டமும், நிர்வாகத் தெரிவும் சங்கத்தின் தலைவர் ரி.கே. இராஜேஸ்வரன் தலைமையில்வவுனியா றோயல் கார்டின் மண்டபத்தில்நேற்றுஇடம்பெற்றது.

தலைவர் பதவிக்கு மீண்டும் இராஜேஸ்வரனின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டது. பிறிதெவரும் பரிந்துரை செய்யப்படாததை அடுத்து, அவர்ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.


நிகழ்வில் விருந்தினர்களாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்சிவசக்திஆனந்தன், வடமாகாணசபை முன்னாள்உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், செ.மயூரன், மாவட்டச் செயலர் எம்.கனீபா, நகரசபை உறுப்பினர்களான க.சந்திரகுலசிங்கம், சு.காண்டீபன், வர்த்தகச் சங்கத் தலைவர் ச.சுஜன், முச்சக்கரவண்டிச்சங்கத்தலைவர்ரவீந்திரன் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நிகழ்வுக்கு பீப்பிள்ஸ் லீசிங் கம்பனி அனுசரணைவழங்கியிருந்தது டன், அதன் ஊழியர்களால்விழிப்புணர்வுநாடகம் ஒன்றும் அரங்கேற்றப்பட்டிருந்தது. (ம-110)

## தேர்த் திருவிழா

முல்லைத்தீவு,செப்.8
முல்லைத்தீவு நெடுங்கேணி மாமடுச்சந்தி அருள்மிகு சிறி வெள்ளைப்பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆலய பெருந்திருவிழா கடந்த 31 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.(ஐ-222)



### சிறப்புற இடம்பெற்றது

# ஒட்டுசுட்டான் பிரதேச பண்பாட்டு பெருவிழா

முல்லைத்தீவு, செப். 8
ஒட்டுசுட்டான்பிரதேசபண்பாட்டுப்பெருவிழாஒட்டுசுட்டான்பிரதேசசெயலர் அகிலன் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.





நேற்றுமுன்தினம்பிற்பகல்3மணியளவில்இந்த விழா இடம்பெற்றது. ஒட்டுசுட்டான் முதன்மைச் சந்தியில் இருந்து, பண்பாட்டு கலை நிகழ்ச்சி அணிவகுப்புடன் ஊர்திப் பவனி இடம்பெற்றது. ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் சிறந்த கலைஞர்களுக்கு பண்டாரவன்னியன் நினைவுச் சின்னம் முல்லைத்தீவு மாவட்டச் செயலரால் வழங்கப்பட்டது. நிகழ்வில்ஒட்டுசுட்டான்தான்தோன்றீஸ்வரர் ஆலயபாடல்இறுவெட்டும்இடம்பெற்றது. (ம-213)

## சிறப்புத் தேவையுடையோரின் கலந்துரையாடல் கிளிநொச்சியில்

கிளிநொச்சி, செப். 8
கிளிநொச்சிமாவட்டச்செயலக பயிற்சிமண்டபத்தில்மாவட்டச் செயலகத்தின் ஒழுங்கமைப்பில் பிரிஸ்டோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் சிறப்புத் தேவையுடையவர்களுக்கான கலந்துரையாடலொன்று அண்மையில் இடம்பெற்றது.

மேற்படி கலந்துரையாடல் சிறப்புத் தேவையுடையவர்களின் நான்கு பிரதேசமட்ட அமைப்புக்களின் (கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி) நிறுவன செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

சிறப்புத் தேவையுடையவர்களுக்கான சாரதி அனுமதிப் பத்திரம், அவர்களுக்கான மேலதிக கொடுப்பனவு வழங்கல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள்தொடர்பில்கலந்துரையாடப்பட்டது. (ம-6)



## வெடுக்குநாறி ஆலயத்தில் ஒலி பெருக்கிக்கு அனுமதி

வவுனியா,செப்.8
வவுனியா, வெடுக்குநாறி ஆதி இலிங்கேஸ்வரர் ஆலயத்தில்ஒலிபெருக்கி பாவனைக்கானஅனுமதி வழங்கபட்டுள்ளது. சர்ச்சைக்குரியநெடுங்கேணி வெடுக்குநாரிமலை ஆதி இலிங்கேஸ்வரரின் வருடாந்த பொங்கல் விழா தற்போது ஆரம்பமாகி இடம்பெற்று வருகிறது.

இந்நிலையில் பொங்கல் நிகழ்வின் முதல்நாள் அங்கு வருகை தந்த நெடுங்கேணி பொலிஸார் ஆலயத்தில் ஒலி பெருக்கி பாவனை மேற்கொள்ளவேண்டாம் என்று கண்டிப்பான உத்தரவை விதித்திருந்தனர்.

மேலும், ஆலய வளாகத்தை துப்புரவாக்கி யமைக்கும், ஆலயத்துக்கு செல்லும் முதன்மை வீதியை சீரமைப்பதற்கும் பொலிஸார் தடை விதித்திருந்தனர். இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பாகநெடுங்கேணிபொலிஸாருக்கு ஆலயத்தின் நலன் விரும்பிகள் சார்பில் தொடர் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. அத்தோடு, வவுனியாவில் அமைந்துள்ள தொல்பொருள் திணைக்களத் துக்கும் ஆலயத்தின் நிர்வாகம் சார்பில் கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, ஆலயத்தில் ஒலி பெருக்கி பாவனையை மேற்கொள்வதற்குஅனுமதிக்குமாறு தொல்பொருள் திணைக்களத்தால் நெடுங்கேணி பொலிஸாருக்கு கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-110)

## தீப்பிடித்து எரிந்தது பயணிகள்பேருந்து

வவுனியா,செப்.8
பயணிகளை ஏற்றிவந்த தனியார் பேருந்து ஒன்று திடீரென தீப்பிடித்து எரிந்தது. இந்தச் சம்பவம் வவுனியா பம்பைமடுப் பகுதியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றது. பேருந்தில் ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டதாகத்தெரிவிக்கப்பட்டது. பேருந்தில் இருந்தபயணிகள் எவ்விதக் காயங்களும் மின்றி தெய்வாதீனமாக காப்பற்றப்பட்டனர். இந்த தீ விபத்தை அடுத்து அந்தப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது. (ஐ-ரி4)



## ஆண்டான்குளம்பாலத்தை சீரமைக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு,செப்.8
முல்லைத்தீவு, குமுழமுனை ஆண்டான் குளம் ஆற்றுப் பாலத்தைச் சீரமைத்துத் தருமாறு குமுழமுனை மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



ஆண்டான்குளம் பாலத்துக்கு அப்பால், கால் நடைகள், விவசாய நிலங்கள் என்பன காணப்படும் நிலையில், இந்தப் பாலத்தைக்கடந்து செல்வதில் அந்த மக்கள் பலத்த இடர்பாடுகளுக்கு உட்படுகின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், ஆண்டான் குளம் பாலம் மிக மோசமான முறையில் சேதமடைந்திருப்பதால், பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்கின்றோம்.

மழைக் காலங்களில் அந்தப் பாலத்தை கடந்து செல்வதென்பதுமிகவும்கடினமானவிடயம்., குறிப்பாக மழைக் காலங்களில்அந்தப்பாலத்தைக்கடந்து, சுமார் 4 கிலோ மீற்றர் தூரத்துக்கு மேல் நடந்து செல்கின்றோம்.

மழைக்காலங்களில் பாலத்தைக் கடக்கும்போது, ஆற்றினுள் விழுகின்ற அபாயம்கூட இருக்கின்றது.

பயிர்ச் செய்கைக் காலங்களில் பயிர்ச் செய்கைக்கான உள்ளீடுகளைகொண்டுசெல்வதிலும், பின் அறுவடைக் காலங்களில், அறுவடைகளை எடுத்துச் செல்வதில் பெரும் இடர்பாடுகளுக்கு நாளாந்தம் முகங்கொடுக்கின்றோம்.

எனவே எமது இடர்பாடுகளைத் தீர்க்கும்பொருட்டு, மிக விரைவில் மழைக்கு முன்னர் ஆண்டான் குளம் பாலத்தைச் சீர்செய்து தருமாறு உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுகின்றோம் - என்றனர். (ஐ-246)

# 12 கட்சிகள், 2 சுயேச்சைகள் அரச தலைவர் தேர்தலில் போட்டி

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, செப். 8

இந்த ஆண்டு இறுதியில் நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்கு, 12 அரசியல் கட்சிகளும், 2 சுயேச்சைகளும் விருப்பம் வெளியிட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் தேர்தலில் போட்டியிட விருப்பம் கொண்டுள்ளதாக, 12 அரசியல் கட்சிகள் எழுத்து மூலம் ஆணைக் குழுவுக்கு அறிவித்துள்ளன. அத்துடன், இரண்டு நாடாளு மன்ற உறுப்பினர்களும், சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடவுள்ளதாக ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளனர்., என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் எதிர்வரும் அரச தலைவர் தேர்தலை முன்னிட்டு ஊடகங்கள், சமூக ஊடகங்களுக்கு சில விதிமுறைகளை அறிமுகப் படுத்த தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. தேர்தல்களின்போது நடைபெறும் வெறுக்கத்தக்க பேச்சுக்களைத் தவிர்ப்பதற்காக இந்த விதிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஒ.5)



# நடைபவனி

கொடிகாமம், செப். 8

நல்லூர் கந்தன் ஆலயத்திலிருந்து மட்டக்களப்பு கொககட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் வரை நடைபவனியொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 12ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதி வரையில் இந்த நடைபவனி இடம்பெறவுள்ளது.

இலங்கை முதலுதவிச்சசங்க இந்து சமயத் தொண்டர் சபையால் யாழ்ப்பாண சின்மய மிசன் சுவாமிகளின் ஆலோசனைக்கமைய இந்த நடைபவனியைமேற்கொள்ளவுள்ளனர்.

நாட்டில் நிரந்தர சாந்தி, சமாதானம் நிலவ வேண்டியும், இனங்களுக்கிடையே பேதங்கள் நீங்கி ஒற்றுமை வளர வேண்டியும் இந்த நடைபவனி மேற்கொள்ளப்படவுள்ளது. (ம-9,159)

# கந்தபுராண படிப்பு நிறைவு

யாழ்ப்பாணம், செப். 8

யாழ்ப்பாணம், நீர்வேலி தெற்கு சிறிமுருகையா கோவிலில் இடம்பெற்று வந்ததொடர்கந்தபுராண படிப்பின்நிறைவுநிகழ்வு நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 9 மணிக்கு அபிசேகம், பூசை வழிபாடுகள் இடம்பெற்று மதியம் மகேஸ்வர பூசையும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-17)

# அதிபர் விடுதிதிறப்பு

கொடிகாமம், செப். 8

யாழ்ப்பாணம், சாவகச்சேரிமகளிர்கல்லூரியில் அமைக்கப்பட்ட அதிபர் விடுதி நாளை திங்கட்கிழமை 8.30 மணிக்கு அதிபர் திருமதி ல. முகுந்தன்தலைமையில்திறந்து வைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ சரவணபவன், சிறப்புவிருந்தினராக தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக கல்விஅபிவிருத்திபிரதிக் கல்விப்பணிப்பாளர்திருமதிசிவத்திரைசிவநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். அண்மையிலுள்ளபாடசாலை சிறந்தபாடசாலைதேசிய வேலைத் திட்டத் தின் கீழ் இந்த விடுதி அமைக்கப்பட்டது. (ஐ-159)

# முள்ளியவளை வித்தியில் திறன் வகுப்பறை

முல்லைத்தீவு, செப். 8

முல்லைத்தீவு, முள்ளியவளை, தமிழ்வித்தியாலயத்துக்கு திறன் வகுப்பறை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனால் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் இந்தத் திறன் வகுப்பறை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

குறித்த வகுப்பறையை துரைராசா ரவிகரன் நேற்று முன்தினம் சென்றுபார்வையிட்டார்.

இதில்கரைதுறைப்பற்று பிரதேசசபைஉறுப்பினர் சி. லோகேஸ்வரனும் கலந்திருந்தமைகுறிப்பிடத்தக்கது. (ம-246)

# கழிவுச் சேகரிப்புத் தொடர்பில் தென்மராட்சியில் அறிவுறுத்தல்

சாவகச்சேரி, செப். 8

தென்மராட்சிகல்விவலயப்பாடசாலைகள்மற்றும்முன்பள்ளிகள் போன்றவற்றில் சேரும் உக்கக்கூடிய உக்க முடியாதமற்றும்பொலித்தீன்பாவனைப்பொருள்களை தனித்தனியாகச் சேகரிக்குமாறு சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பில்:

பொதுமக்கள் கூடும் இடங்களில் மூன்று வகையான கழிவுத்தொட்டிகள்வைக்கப்பட்டுள்ளநிலையில் பொதுமக்கள் அனைத்துக் கழிவுகளையும் ஒரு தொட்டியில் போடுவதைக் காணமுடிகிறது. இதனால் அவற்றைத் தரம் பிரிப்பதில் தொழிலாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குவதால் ஒவ்வொரு வர்ணத்தில் உள்ள கழிவு தொட்டிகளில் உரிய கழிவுகள் போடப்பட வேண்டும்.

இதேவேளை, சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட உணவு கையாளும் நிலையங்களில் சேரும் கழிவுகள் மூன்று வகைத் தொட்டிகளில் காணப்படும் பட்சத்தில் மட்டுமே அவை அப்புறப்படுத்தப்படும்.

மழைக்காலம் ஆரம்பித்துள்ளதால் பாடசாலைகளில் கண்ட இடங்களிலும் குப்பைகளைப் போடாமல் உக்கக் கூடிய உக்கமுடியாத மற்றும் பொலித்தீன் பாவனைப் பொருள்களை அந்தந்தத்தொட்டிகளில் இடப்படவேண்டும் - என்றுள்ளது. (ம-9)

# சடலத்தை பொறுப்பேற்க பொலிஸார் கோரிக்கை

சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டிகிறிஸ்தவசேமக் காலையின் பின்பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில்மீட்கப்பட்ட ஆணின்சடலத்தை உரியவர்கள் பொறுப்பேற்க வேண்டும் என்று சாவகச்சேரி பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 13ஆம் திகதி சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி கிறிஸ்தவ சேமக்காலை அருகில் தூக்கில் தொங்கிய நிலையில்பொலிஸாரால்மீட்கப்பட்ட ஆணின் சடலம், அடையாளம் காண்பதற்காக சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்தது. பின்னர் அடையாளம்காண்பதற்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டது. யாழ். போதனா மருத்து வமனையின் சட்ட மருத்துவ அதிகாரி மூலம்உடற்கூற்றுப்பரிசோதனைமேற்கொண்டு அறிக்கை தாக்கல் செய்யுமாறும் அடையாளம் காண எவரும் முன்வராத பட்சத்தில் 21 தினங்களின்பின்னர்சடலத்தைஅரசசெலவில்அடக்கம் செய்யுமாறும்சாவகச்சேரிநீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டிருந்தது. நீதிமன்றம் குறிப்பிட்ட அவகாசத்தின் இறுதித் திகதி இன்றாகும். எனவே சடலத்தை உரியவர்கள் பொறுப்பேற்குமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-9)

# மின் தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 8

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்தமின்விநியோகமார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும்பராமரிப்புவேலைகளுக்காகவடக்கின்பலபகுதிகளில் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரையாழ்ப்பாணம்வல்லை, உடுப்பிட்டி, பொக்கணை, தொண்டமானாறு, மயிலியதனை, சிதம்பரா, அக்கரை, வளலாய், மூத்த விநாயகர் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, சென்பீற்றர்ஸ்தேவாலயம், வேலக்கை பிள்ளையார் கோவிலடி, அட்டகிரி, குளப்பிட்டி, வராகி பாடசாலை, சாவற்காடு, காக்கைதீவு, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, முள்ளியான், கீவில், தாளையடி, மருதங்கேணி, செம்பியன்பற்று, மாமுனை, குடாரப்பு, தாளையடி ஐஸ்தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் மன்னார் மாவட்டத்தில் பெரியகுஞ்சுக்குளம், பெரிய முறிப்பு, தேக்கம், நானாட்டான் பிரதேசசபை ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)





# பெண் முயற்சியாளர்களின் உற்பத்திப்பொருள் காட்சி!

கிளிநொச்சி, செப். 8

பெண்சிறுகைத்தொழில்உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சி கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்றது.

கண்காட்சி கிளிநொச்சி சந்தை வளாகத்தில் காலை 9.30 மணியளவில் ஆரம்பித்தது.

கரைச்சி, பூநகரி பிரதேசத்தில் பெண்கைத்தொழிலாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் இதன்போது காட்சிப்படுத்தப்பட்டதுடன் விற்பனையும் செய்யப்பட்டன. (ம-6)

## பேச்சு நடத்தி முன்னேற்றம் காண்பதே எங்கள் நோக்கம்

ஐ.ம.சு.கூ. பொதுச் செயலர் தெரிவிப்பு



கொழும்பு, செப்.8
பேச்சு நடத்தி முன்னேற்ற கரமான வழியில் செல்ல வேண்டும் என்பதுதான் எமது நோக்கம் என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், சிறிலங்கா பொது மக்கள் முன்னணிக்கும் இடையிலான தேர்தல் கூட்டணி தொடர்பான 8 ஆவது சுற்றுப் பேச்சு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்தப் பேச்சுக்கள் ஒருவேளை தோல்வியில் முடிந்தால் மாற்று ஏற்பாடு ஒன்றை மேற்கொள்ளும் வகையிலேயே சுதந்திரக் கட்சியின் சார்பாக வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படுவார் என்று அறிவித்துள்ளோம். அதற்கான எழுத்துமூலமான அறிவித்தலையும் நாம் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு வழங்கியுள்ளோம். ஆனால், அதுதான் இறுதித் தீர்மானம் என்று எம்மால் கூறமுடியாது- என்றார். (எ)

## ஐ.தே.கவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் அனைவருடனும் பேச்சுக்கு ஏற்பாடு

வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு



கொழும்பு, செப்.8
ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் அனைத்துத் தரப்பினரிடமும் தொடர்ந்து பேச்சு முன்னெடுப்போம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:

ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளராக தலைமை அமைச்சர் ரணில் மட்டுமல்ல எவர் களமிறங்கினாலும் தேர்தல் பெறுபேறு அவர்களுக்குத் தோல்வியாகவே அமையும். எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் வெற்றிக்காக நாடு தழுவிய ரீதியில் தேர்தல் பரப்புரைகளை ஒன்றிணைந்து மேற்கொள்ளவுள்ளோம்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களை ஒன்று திரட்டி அரசுக்குக் குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராகப் பேரணி ஒன்றையும் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நடப்பு அரசு ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதாரக் கொள்கை ஆகிய இரு விடயங்களுக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் தரப்பினருடன் பேச்சை முன்னெடுத்துப் பலமான அரசு ஒன்றை உருவாக்குவதே முதன்மை எதிர்பார்ப்பாகக் காணப்படுகின்றது - என்றார். (எ)

## எதிர்கால தலைமுறைக்காக களமிறங்க கருவும் தயாராம்

கொழும்பு, செப்.8
நாட்டின் எதிர்கால தலைமுறையினருக்காக அர்ப்பணிப்புடன் செயற்படத் தயாராக உள்ளேன் என்று சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

சிவில் சமூக ஆர்வலர்களுடன் நேற்று முன்தினம் நடத்திய சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தற்போது இடம்பெறும் அதிகாரப் போராட்டத்தில் அங்கம் வகிக்க விரும்பவில்லை. ஆனாலும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் அரச தலைவர் வேட்பாளராக வருவதற்கான கோரிக்கையை முன்வைப்பார்களாயின் அவை தொடர்பில் ஆராய்வேன்.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் களமிறங்கும் எந்தவொரு வேட்பாளருக்கும் ஏனைய கட்சிகளினதும் அமைப்புக்களினதும் ஆதரவு மிகவும் அவசியமாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

## சஜித் களமிறங்குவது உறுதி:

ஹரின் தெரிவிப்பு

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவை களமிறக்குவதில் உறுதியாக உள்ளோம் என்று அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். இது தொடர்பான இறுதிக் கலந்துரையாடல் ஒன்று இன்று சஜித் பிரேமதாசவுடன் இடம்பெறவுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்மானத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களின் ஆதரவு கிடைத்துள்ளது என்றும், ஐக்கிய தேசியக் கட்சியின் கீழ் மட்ட தொண்டர்களின் ஆதரவு தற்போது, பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசாவுக்கு கிடைத்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ)

## ஐ.தே.கவை தேற்கடிப்பதே முக்கியமான எதிர்பார்ப்பு

டளஸ் அழகப்பெரும தெரிவிப்பு



கொழும்பு, செப்.8
ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியைத் தோற்கடிப்பதேமது இருகட்சிகளதும் எதிர்பார்ப்பாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கும் இடையிலான தேர்தல் கூட்டணி தொடர்பான 8ஆவது சுற்றுப் பேச்சு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டிலுள்ள சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான சிந்தனையுடனே உள்ளனர். அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து பயணிக்க வேண்டும் என்று சிந்திக்கவில்லை. அதனால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான பலமான கூட்டணியுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இணையும் என்ற நம்பிக்கை உள்ளது-என்றார். (எ)

## சுதந்திரக் கட்சியின் தீர்மானம் ஐ.தே. கட்சிக்குச் சாதகமாகாது

அபேவர்த்தன எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, செப்.8
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தீர்மானம் ஐ.தே. கட்சிக்கு ஒருபோதும் சாதகமாக அமையாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கொழும்பில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அண்மையில் நடைபெற்ற சுதந்திரக் கட்சி மாநாட்டில், அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா வெளிப்படுத்திய கருத்தின் ஊடாக அந்தக் கட்சி தனியான ஒரு வேட்பாளரை களமிறக்காது என்ற நம்பிக்கை உள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியில் அரச தலைவர் வேட்பாளராக யார் நிறுத்தப்பட்டாலும், சுதந்திரக் கட்சியை ஆதரிக்கும் இடதுசாரி மக்கள், அவர்களுக்கு ஒருபோதும் ஆதரவு வழங்கமாட்டார்கள். சுதந்திரக் கட்சி எடுக்கும் தீர்மானம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சாதகமாக ஒருபோதும் அமையாதென்பது உறுதி- என்றார். (எ)

## அரச தலைவராக தெரிவானால் அறநெறி மாணவருக்குச் சீருடை

சஜித் பிரேமதாச தெரிவிப்பு

கொழும்பு, செப்.8
நாட்டின் அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டால் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாகச் சீருடை வழங்கப்படும் என்று அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

புத்தளம் தேர்தல் தொகுதியின் பல பிரதேசங்க ளிலும் அறநெறி பாடசாலைகளை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வுகளில் அமைச்சர் சஜித் பிரேமதாச நேற்று முன்தினம் கலந்துகொண்டார். அதன்பின்னர் நடந்த மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எதிர்வரும் நவம்பர் மாதம் அல்லது டிசெம்பர் மாதத்தில் அரசியலில் புதிய திருப்புமுனையேற்படும். அறநெறிப் பாடசாலைகளில் கற்கும் சிறுவர்களுக்கு, இலவசச் சீருடை வழங்குதற்கும், பகல் உணவு வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்படும். இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதா? இல்லையா? என்பதை நான் தீர்மானிக்க முடியாது. அது உங்களிடம்தான் உள்ளது-என்றார். (எ)

## சின்னத்தை முன்னிலைப்படுத்தி முரண்படுகின்றது சுதந்திர கட்சி

செஹான் சேமசிங்க குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.8
எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவை 2015ஆம் ஆண்டு தலைமை அமைச்சராக்குவோம் என்று சுதந்திரக் கட்சியினர் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. மொட்டுச் சின்னத்தை முன்னிலைப்படுத்தி முரண்பாடுகளை ஏற்படுத்தச் சுதந்திரக் கட்சி முயற்சிக்கின்றது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் கூட்டணியமைத்து இணைந்துகொள்வது தொடர்பில் ஒருபுறம் பேசிக் கொள்கின்றது. மறுபுறம் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் விதமாகவும் கருத்துக்களை வெளிப்படுத்திக் கொள்கின்றது.

உண்மையில் இணைந்து கொள்வதற்கு பேச்சு இடம்பெறுகின்றதா அல்லது இணக்கமாக செயற்படுகின்றோம் என்று வெளியில் காண்பித்துக் கொள்கின்றார்களா என்ற சந்தேகம் காணப்படுகின்றது - என்றார். (எ)

# முஸ்லிம் மக்களை தாக்கியவர்களே அவர்களிடம் வாக்குக் கேட்கின்றனர்

## சஜித் பிரேமதாச தெரிவிப்பு



கொழும்பு, செப்.8

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னர், முஸ்லிம் மக்களின் மதத் தலங்களையும், அவர்களது சொத்துக்களையும் சேதப்படுத்தியவர்கள் தற்போது முஸ்லிம் மக்களிடம் வெட்க மற்று வாக்குக்கேட்க முனைகின்றனர். இதை உண்மையான முஸ்லிம் மக்கள் ஒருபோதும் அங்கீகரிக்கமாட்டார்கள்.

இவ்வாறு வீடமைப்பு, நிர்மாணத் துறை மற்றும் கலாசார அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலை அடுத்து முஸ்லிம் மக்கள் வசிக்கும் பிரதேசங்களில் நடத்தப்பட்ட வன்முறைச் சம்பவத்தால் சேதமடைந்த பள்ளிவாசல்களைச் சீரமைப்பதற்கான நிதி கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புத்தளத்தில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை அடுத்து இன ரீதியிலான மோதல்களை தோற்றுவிக்கும்வகையில் செயற்பட்ட இனவாதிகள், அவர்கள் எதிர்பார்த்த இலக்கை அடைந்து கொள்ளமுடியாதுபோனது. நாட்டையும் மக்களையும் நேசிக்கும் பெரும்பாலான சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் நாடு தீப்பற்றி எரியும் நிலையை ஏற்படுத்தவிடாமல் தடுத்ததை நினைவுபடுத்த வேண்டியுள்ளது.

இலங்கையின் அரசமைப்பின் 9ஆவது பிரிவில் பௌத்த மதத்துக்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. அதைப் பாதுகாப்பதும் எமது அனைவரதும் பொறுப்பாகும். அது மட்டுமல்ல 14 ஆம் பிரிவில் அதே போன்று ஏனைய மதங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள பாதுகாப்பையும், உரிமையையும் வழங்க வேண்டும் என்பதில் நான் உறுதியான நிலைப்பாட்டுடன் இருக்கின்றேன். புத்தபிரான் போதித்த தர்மத்துக்கு அமைவாக சகலரும் சமமாக வாழ வேண்டும் என்ற நிலைப்பாட்டை நாம் எம்மில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

சத்தியத்தைப் புரிந்துகொள்ளும் காலம் தற்போது ஏற்பட்டுள்ளது. யதார்த்தத்தை புரிந்து அனைவரும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டியுள்ளது. மத ரீதியானதும் இன ரீதியானதுமான அடிப்படைவாதச் செயற்பாடுகளுக்கு எமது நாட்டில் இனி இடம் கொடுக்க முடியாது.

நாட்டில் ஏதாவது வடிவில் மதங்களுக்குள்ளும், நாட்டுக்குள்ளும் அடிப்படைவாதம் எங்காவது காணப்படும் என்றால், அதை ஒழித்தே ஆக வேண்டும். இதுமட்டுமல்லாமல் பயங்கரவாதத்துக்கும் இனி எமது நாட்டில் இடம்கொடுக்க முடியாது என்பதை சுட்டிக்காட்டுகின்றேன். எவ்வாறு பௌத்த விகாரைகளை நாங்கள் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கின்றோமோ அதேபோன்று எமது நாட்டிலுள்ள அனைத்து ஏனைய மதத் தலங்களையும் நாம் பாதுகாப்பதற்கான உறுதியை வழங்குகின்றேன் - என்றார். (எ)

# சு. கட்சியுடைய ஆதரவு நிச்சயமாக கிடைக்கும்

## கோத்தபாய நம்பிக்கை

கொழும்பு, செப்.8

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவு தனக்குக் கிடைக்கும் என்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கும் இடையே தேர்தல்கூட்டணிதொடர்பான 8ஆவது சுற்றுப் பேச்சு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது. அந்தக் கட்சியின் ஆதரவு எனக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# சகலரையும் சமத்துவமாகக் கருதும் அரசமைப்பே உருவாக்க வேண்டும்

## பச்சிலைப்பள்ளி தவிசாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, செப். 8

சகல இனங்களையும் சமத்துவமாகக் கருதுகின்ற அரசமைப்பே உருவாக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார் பச்சிலைப்பள்ளி தவிசாளர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் சோரன்பற்று பிள்ளையார் ஆலய மடப்பள்ளிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

ஜனநாயகப் பண்புகளைக்கொண்ட நாட்டில் குறித்த ஒரு மதத்தை முன்னுரிமைப்படுத்தியோ அல்லது அந்த மதத்துக்குச் சார்பாகவோ அந்த நாட்டினுடைய அரசமைப்புக் காணப்படக்கூடாது. அவ்வாறு ஒரு மதத்துக்கு சார்பாக அந்த நாட்டினுடைய அரசமைப்புக் காணப்படுமாக இருந்தால், அங்கு ஏனைய மதங்களை பின்பற்றுவதற்கு முழுமையான சுதந்திரம் இருக்காது என்பதே யதார்த்தம். எனவே இந்த நாட்டினுடைய அரசமைப்பு முற்றாக மாற்றப்பட்டு, சகல இனங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சகல மதங்களையும் சமத்துவமாக கருதக்கூடிய வகையில் அது திருத்தப்பட வேண்டும் - என்றார். (ம-6)



## நில அளவைத் திணைக்களத்தில்

# சிங்கள அலுவலர்களின் நியமனம் காணி அபகரிப்பின் பின்னணியா?

## சிவமோகன் எம்.பி கேள்வி



கொழும்பு, செப். 8

நில அளவை திணைக்களத்தில் சிங்கள அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை முல்லைத்தீவு மாவட்டத்தில் காணி அபகரிப்பின் பின்னணியா என்று கேள்வி எழுப்பியுள்ளார் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதுவரைகாலமும் வேலையற்ற தமிழ் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு எம்மால் விடப்பட்டுவந்தது. அதற்கு எவ்விதத்திலும் தலைசாய்க்காத அரசு, இப்பொழுது தமிழ் பிரதேசமான முல்லைத்தீவில் நில அளவையாளர் அதிகாரிகளாக 35 சிங்களவர்களை நியமித்திருப்பது முல்லைத்தீவு மாவட்டத்தில் காணி அபகரிப்பின் பின்னணியா? என்ற சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது.

இது ஒட்டுமொத்தமாக காணி அமைச்சின் கீழ் வரும் விடயம், வழமையாக இராணுவம்தான் பொதுமக்களின் காணிகளை சட்டத்துக்கு முரணாக சுவீகரிப்புச் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தது. அப்படியான நடவடிக்கைகளின் போது மக்கள் போராட்டங்களை நடத்தி காணி அபகரிப்புக்களைத் தடுத்து நிறுத்தினார்கள். அதில் முக்கியமானதாகக் கருதப்படுவது முள்ளிவாய்க்கால் கிழக்கில், வட்டுவாகல் சந்தியில் அமைந்துள்ள கோத்தபாய கடற்படை முகாம் பரவலாக்குவதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை. அவற்றை கையகப்படுத்தும் நடவடிக்கையில் இறங்குவதற்காக பல தடவைகளில் நில அளவைத் திணைக்களத்தினர் இராணுவப் பாதுகாப்புக்களுடன் அழைத்து வரப்பட்ட பொழுது மக்கள் போராட்டங்களை மேற்கொண்டு காணி சுவீகரிப்பைத் தடுத்து நிறுத்தினார்கள்.

எனவே இந்த நிகழ்ச்சி நிரலின் பின்னணியிலா தற்பொழுது சிங்கள அதிகாரிகளை நில அளவையாளர்களாக நியமித்திருக்கிறார்கள் என்ற சந்தேகம் வலுவாக எழுகின்றது.

இந்த விடயங்களில் அரசு உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும். எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் தமிழர்கள் கண்களை மூடிக் கொண்டு, தமக்கு வாக்களிப்பார்கள் என்று ரணில் தரப்பினர் நம்பிவிடக்கூடாது. குறித்த 35 அலுவலர்களையும் நீக்கிவிட்டு, பதிலாக தமிழ் இளைஞர்களை நியமிக்க வேண்டும் - என்றார். (ம-213)

### அதிபர் விடுதி திறப்பு

யாழ்ப்பாணம் அச்சுவேலிமத்தியகல்லூரியில் அமைக்கப்பட்ட அதிபர் விடுதி நாளை திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு அதிபர் சி.கிரிதரன் தலைமையில் திறந்துவைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்மாவை. சோ.சேனாதிராசா கலந்து சிறப்பிக்க வுள்ளார்.

அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் இந்த விடுதி அமைக்கப்பட்டது. (ஐ)

# புதிய இலச்சினையோடு அநுர தேர்தலில் களமிறங்கத் திட்டம்

கொழும்பு, செப்.8

தேசிய மக்கள் சக்தியின் அரச தலைவர் வேட்பாளரான மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க புதிய இலச்சினையில் அரச தலைவர் தேர்தலில் போட்டியிடவுள்ளார்.

புதிய முன்னணி, புதிய அரசியல் கட்சியாக மாற்றப்பட்டு அதற்குப் புதிய இலச்சினையும், நிறமும் வழங்கப்படவுள்ளது என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பான பேச்சு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, தேசிய மக்கள் சக்தியின் பரப்புரைப் பணிகள் இன்று முதல் நாடு முழுவதும் ஆரம்பிக்கப்பட உள்ளது என்றும் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணி களமிறங்கியுள்ள நிலையில், அண்மையில் அரச தலைவர் வேட்பாளர் அறிவிப்பு காலி முகத்திடலில் இடம்பெற்றது. பெருந்திரளான மக்கள் முன்னிலையில் அந்தக் கட்சியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருந்தார். (எ)

சூரியகாந்தி

# எட்டாப்பழம் புளிக்கும்!


## அரச தலைவர் தேர்தலில் சு.கவின் நிலை

ஸ்டோஸ்வாமி

அரச தலைவருக்கும் தலைமை அமைச்சருக்கும் இடையில் தொடரும் பிடுங்குப்பாடுகள் கடந்த வாரத்தில் மீண்டும் ஒரு தடவை வெளிப்பட்டிருக்கிறது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 68ஆவது வருடாந்த மாநாடு கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நடைபெற்றிருந்தது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நடந்த அந்த நிகழ்வில், முன்னாள் அரச தலைவர் சந்திரிகா உட்பட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். மற்றையதொரு அரச தலைவரை ஆட்சியில்அமர்த்துவதற்குஇலங்கையருக்குவாய்ப்பளிக்கும் தேர்தல் ஒன்று இந்த வருட இறுதியில்அமையவுள்ள நிலையில், அந்தத் தேர்தலில் தமதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பில் தெளிவான ஒரு முடிவுஎதனையும் தெரிவிக்காமல் அந்த மாநாடுநிறைவடைந்திருக்கிறது.



சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் முன்னாள் தலைவரான மகிந்த ராஜபக்ச அதிலிருந்து பிரிந்து சென்று சிறிலங்கா பொது மக்கள் முன்னணி கட்சியைத்தோற்றுவித்து, அந்தக்கட்சியின் தலைமைத்துவத்தைஏற்றுக்கொண்டபின் நடந்த முதலாவது மாநாடு இது என்பதால், சுதந்திரக் கட்சியின் இந்த ஆண்டுக்கான வருடாந்த மாநாடு முக்கியத்துவம் பெற்றிருந்தது. இதனைத் தவிர, சிறிலங்கா பொது மக்கள் முன்னணி தரப்பினரால் அறிவிக்கப்பட்டிருக்கின்ற வேட்பாளருக்குப் பின்னால் வால்பிடிக்கும் சூழல் ஒன்றுக்கான சாத்தியப்பாடு அதிகமாகத் தென்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் உத்தியோகபூர்வ நிலைப்பாடொன்றும் அங்கு (மாநாட்டில்) தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.




**சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வாக்கு வங்கியில் கணிசமான அளவு சிறிலங்கா பொது மக்கள் முன்னணிக்குப் பின்னால் போய்ச் சேர்ந்துவிட்ட நிலையில், எதிர்கொள்ளப்படவிருக்கும் அரச தலைவருக்கான தேர்தல் ஒரு வகையில், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தரப்பினருக்கு எட்டாப் பழமாக மாறிவருவதாகவே தெரிகிறது.**

**மதிப்பிழக்கும் நிலையில் சுதந்திரக் கட்சி**

கடந்த ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் தோல்வியடைந்திருந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி, அதன்பிற்பாடுமெல்ல மெல்லத் தனது மதிப்பை இழந்து வருகின்றது. சிறிலங்காசுதந்திரக்கட்சியின் கணிசமான உறுப்பினர்கள் மகிந்தவின் பக்கம் தாவிக்கொண்டிருக்கின்றனர். அதற்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவேண்டியஅளவில்அந்தக் கட்சியின்சிறுதொகைஉறுப்பினர்கள் மகிந்த தரப்பினருடன் உறவு வைத்து வருகின்றனர். மீதிப்பேரே சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் மைத்திரிபாலவின் பின்னால் உள்ளனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வாக்கு வங்கியில் கணிசமான அளவு சிறிலங்கா பொது மக்கள் முன்னணிக்குப் பின்னால் போய்ச்சேர்ந்துவிட்ட நிலையில், எதிர்கொள்ளப்படவிருக்கும் அரச தலைவருக்கான தேர்தல் ஒரு வகையில், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தரப்பினருக்கு எட்டாப்பழமாக மாறி வருவதாகவே தெரிகிறது.

**இரண்டாவது முறை போட்டியிடுவதற்கான அறிகுறி**

2015ஆம் ஆண்டில் நடந்த அரச தலைவருக்கானதேர்தலில்பொது எதிரணிகளின் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றியீட்டிய மைத்திரிபால சிறிசேன, தான் ஒருதடவையே அரச தலைவராகப் பணியாற்றுவேன் என ஆரம்பத்தில் சொல்லி வந்திருந்தார். எனினும் பிற்பட்ட காலத்தில், ‘நான் ஓயப்போவதில்லை’, ‘நான் முடிக்க வேண்டிய பணிகள் நிறைய இருக்கின்றன' என்றெல்லாம் கூறிவந்த அவர், ஒரு பதவிக்காலத்துடன் இளைப்பாறப்போவதாகக் கூறியதில்லை.

மைத்திரிபாலசிறிசேனவுக்குமீண்டும் அரசதலைவர்தேர்தலில்போட்டியிடும் எண்ணம் இருப்பதாகவே நம்பப்பட்டு வந்தது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி தரப்பின் துமிந்ததிசாநாயக்காதமது அரசதலைவர் வேட்பாளர் மைத்திரிபாலவே என அடிக்கடி கூறி வந்திருந்தார். எனினும் அவர் பக்கம் வெற்றியடைய மறுத்த ஒக்ரோபர்26குழப்பம்மற்றும்தடுக்கத் தவறிய உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் என்பன மைத்திரிபால சிறிசேனவைக் களமிறக்கும் களமிறங்கும் கனவில் மண்ணை வாரி இறைத்திருந்தது.

**முடிவின்றி தொடர்ந்த பொது மக்கள் முன்னணியுடனான பேச்சுக்கள்**

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை உள்ளடக்கிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக 2015ஆம் ஆண்டுப்பொதுத்தேர்தலில் நாடாளுமன்றினுள் நுழைந்த மகிந்தராஜபக்ச, ஒன்றிணைந்தஎதிர்க் கட்சித் தரப்பினரை வெற்றிகரமாகக் கையாண்டுதன்வசம்வைத்திருந்தார். கடந்த மாதம் 11ஆம் திகதி சிறிலங்கா பொது மக்கள் முன்னணியின் தலைமையை அவர் ஏற்றுக்கொண்ட நிலையில், கட்சியின் ஒழுக்க விதிகளை மீறியதற்காக அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவோ, அவருடைய நாடாளுமன்றஉறுப்பினர்மற்றும்எதிர்க்கட்சித் தலைவர் பதவி என்பவற்றைப் பிடுங்கவோ ஆர்வம்காட்டவில்லை. மாறாக, அவரால்அறிவிக்கப்பட்டிருக்கும்அரச தலைவர் வேட்பாளருக்கு ஆதரவளிப்பதற்கானபேச்சுக்கள்பலசுற்றுக்களாகத் தொடரப்பட்டிருந்தன. எனினும் அது வெற்றியடைந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**மாகாண சபைத் தேர்தல்களை முந்தவைக்க எடுத்த முயற்சி**

அரச தலைவருக்கான தேர்தல் அறிவிப்புக்கான காலம் நெருங்கி வருவதைத் தமக்குப் பாதகமான ஒன்றாக நோக்கிய அரச தலைவர் உள்ளிட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தரப்பு, மாகாணசபைத்தேர்தலைஅரசதலைவர் தேர்தலுக்கு முன்பாக நடத்துவதற்கு ஆர்வம் காண்பித்திருந்தது. குறித்த விடயம் தமக்குச் சாதகமான சூழலையும்எதிர்த்தரப்புக்குநெருக்கடியையும் கொடுக்கும் என்னும் நம்பிக்கையுடன் அது தொடர்பில் உச்ச நீதிமன்றத்தின் நிலைப்பாடு கோரப்பட்டிருந்தது. எனினும் அந்த முயற்சி இப்போது தோல்வியைத் தழுவியிருக்கிறது. எல்லை நிர்ணய அறிக்கை இல்லாமல் பழைய முறையில் மாகாண சபைத்தேர்தலைஅரசதலைவர்நடத்த முடியாது என்பதை உச்சநீதிமன்றம் கடந்த வாரத்தில் அரச தலைவருக்கு அறிவித்திருக்கிறது.

அரச தலைவருக்கான தேர்தலுக்கு முகங்கொடுப்பதில் ஏற்படும் சங்கடத்தைத் தவிர்ப்பதற்காகச் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் எடுத்த முயற்சிகள் தவிடுபொடியாகிய நிலையில், திராட்சைப்பழத்துக்குஆசைப்பட்டநரி அதைப்பிடுங்குவதில்ஏற்பட்டஇக்கட்டு இடைஞ்சல் காரணமாகப் புளிப்புத் தன்மையைக் காரணம்காட்டி அந்தப் பழத்தைப் பிடுங்காது விலகியதாகச் சிறுவர் கதையுண்டு. அதேபோன்ற தளம்பல்நிலைக்குஇப்போதுவந்திருக்கிறது சிறிலங்கா சுதந்திரக்கட்சி. அந்த நிலவரம், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் 68ஆவது வருடாந்த மாநாட்டில் அரச தலைவர் ஆற்றிய உரையில் அப்பட்டமாக தெரிந்திருந்தது. அடுத்துத் தெரிவு செய்யப்படப்போகிற அரச தலைவர் வெறும் பொம்மை என்று சாரப்படும் வகையில் மைத்திரிபாலவின் உரை அமைந்திருந்தது.


**குழப்பத்தை வெளிக்காட்டிய அரசதலைவரின் உரை**

கொழும்பு, சுகததாசஉள்ளகஅரங்கில் கூடியிருந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களை நோக்கிக் கையசைத்து உரைநிகழ்த்திய அரச தலைவர், எதிர்வரும்அரசதேர்தலில்தெரிவு செய்யப்படப்போகிறவர் 19ஆம் திருத்தச் சட்டத்தின் காரணமாக அதிகாரம் இழந்த ஒருவராகவே இருப்பார் எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

பாதுகாப்பு அமைச்சைக் கூடத் தம் வசம் வைத்துக்கொள்ள முடியாத கையாலாகத்தனம் அரச தலைவரிடம் காணப்படுவதைச் சுட்டிக்காட்டிய மைத்திரிபால, தலைமைஅமைச்சரிடம் அதிகாரப் பலம் சென்றடைவதாக வெதும்பியிருக்கிறார்.

2020 ஆம் ஆண்டுத்தேர்தலில்ஆட்சியைக் கைப்பற்றும் வகையில் தாம் தமது பலத்தை ஒழுங்கமைக்கப்போவதாகத் தெரிவித்திருக்கும்மைத்திரிபாலசிறிசேன, தமது உரையில் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட தரப்பினர் மீது சேற்றை வாரியிறைக்கத் தவறியிருக்கவில்லை. தேர்தல் நடத்துவதற்கான அறிவிப்பு விரைவில் வரலாம் என்று எதிர்பார்க்கப்படும் அரச தலைவருக்கான தேர்தலை எதிர்கொள் வதில் சிக்கலை எதிர்கொண்டிருக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தரப்பு, பேச்சுக்கள் தோல்வியுறும் பட்சத்தில் தமது தரப்பிலிருந்து ஒருவரைக் களத்தில் இறக்கும் என்று ஆருடம் தெரிவிக்கப்படுகிறது. அந்த முயற்சி நிறைவேற்று அதிகாரமற்ற அரச தலைவரை இலக்கு வைத்ததாக அமையும்என்பதைவிடவாக்குகளின் சிதறலை இலக்கு வைத்ததாக அமையும் என்பதே யதார்த்தம்.






# மகிந்த வழங்கிய வரத்தை பயன்படுத்த தவறும் ரணில்

சந்திரசேகர ஆசாத்

பொதுமக்கள் முன்னணியின் மகாநாடு கொழும்பு சுகததாச உள்ளரங்கில் அண்மையில் இடம்பெற்றது. அதில் முன்னாள் அரச தலைவரும் தற்போதைய எதிர்க் கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ச உத்தியோகபூர்வமாக அதன் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார். பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராக முன்னாள் பாதுகாப்புச் செயலரும் தனது சகோதரருமான கோத்தபாய ராஜபக்சவை அன்றே அறிவித்தார் அவர். இந்த அறிவிப்பை பொதுமக்கள் முன்னணியினர், இனவாதிகள், சில பௌத்த பிக்குகளின் அமைப்புகள் என இனவாதத்துடன் செயற்படும் தரப்பினர் பெரும் ஆரவாரத்துடன் வரவேற்றனர். கோத்தபாய ராஜபக்ச அதிகாரத்தில் இருந்திருந்தால் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் இடம்பெற்றிருக்காது என்ற கோசத்துடன் பரப்புரை செய்வதுடன் அதற்கேற்ற வகையில் நடவடிக்கைககளிலும் இறங்கினர்.

### கோத்தா குறித்து உருவாக்கப்படும் பிம்பம்

இலங்கையில் உள்நாட்டுப்போரை முடிவுக்குக் கொண்டு வந்த நாயகனாக கோத்தபாயவை முன்னிறுத்தும் வகையில் அவரின் ஆதரவாளர்கள் செயற்படுகின்றனர். அதேவேளையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதானிகள் சிலரும் அவர் பக்கம் தாவியுள்ளனர். கோத்தபாய ராஜபக்ச வெற்றி பெறக் கூடிய ஒரு வேட்பாளர் என்ற பிம்பம் திட்டமிட்ட வகையில் ஒரு சிலரால் மக்கள் மத்தியில் உருவாக்கும் முயற்சிகள் இடம்பெறுகின்றன. திஸ்ஸ விதாரண, வாசுதேவ நாணயக்கார போன்றவர்கள் ஆரம்பத்தில் கோத்தாவின் தெரிவுக்கு எதிர்ப்பைத் தெரிவித்த போதிலும் தற்சமயம் அடக்கி வாசிக்கவும், ஊசலாடவும் தொடங்கிவிட்டனர்.



### கோத்தா மீதான வெறுப்பு

ஜனநாயக விரும்பிகள் கோத்தபாயவை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. அவ்ரது சர்வாதிகாரப் போக்கும், இராணுவ மயப்பட்ட நடவடிக்கைகளும், ஒடுக்குமுறைகளுக்குத் தயங்காத தன்மையும் நாட்டின் புத்திஜீவிகள் மத்தியிலும் சட்டம், ஒழுங்கு நிலவ வேண்டும் என எதிர்பார்ப்பவர்கள் மத்தியிலும் அவர் மீது வெறுப்பை ஏற்படுத்தியுள்ளன. போர்க் காலத்தில் அவரின் வழிகாட்டலில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித குலவிரோத நடவடிக்கைகள், வெள்ளை வான் கடத்தல்கள், காணாமல் ஆக்கப்பட்டமை, ஊடக ஒடுக்குமுறைகள், வெலிக்கடைச் சிறைச்சாலைப் படுகொலைகள் என அரச படைகளின் பயங்கரவாத நடவடிக்கைகள் அவர் மீது மக்களுக்குப் பெரும் அச்ச உணர்வையே ஏற்படுத்தியுள்ளன. இத்தகைய அச்சம் காரணமாகவோ என்னவோ அவர் மீதான எதிர்ப்புணர்வு அதிகளவில் வெளிப்படுத்தப்படவில்லை. ஆனால் இந்த அச்சம் தேர்தலில் அவருக்குச் சாதகமான நிலையை ஏற்படுத்தக் கூடும் என எதிர்பார்க்க முடியாது.

### சி.சு.காவின் மூத்த உறுப்பினர்கள் எதிர்ப்பு

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள மூத்த உறுப்பினர்கள் கோத்தபாய மீது எதிர்ப்புணர்வு கொண்டவர்களாகவே விளங்குகின்றனர். இவரிடம் அதிகாரம் போனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மெல்ல மெல்ல அழிந்து தனது முதன்மை இடத்தை இழந்துவிடும் என்ற அச்சம் அவர்களிடம் உண்டு. அப்படியான ஒரு நிலமை உருவாவதைத் தடுப்பதற்குச் சந்திரிகா, மகிந்த அமரவீர போன்றவர்கள் முழுமூச்சுடன் செயற்படுவார்கள் என்பதை நம்பலாம். ஒரு சில தீவிர இன, மதவாத சக்திகளைவிடக் கோத்தபாயவுக்கு பெரும் மக்கள் ஆதரவு கிடைக்கக் கூடிய வாய்ப்புக்கள் இல்லை என்று நம்பலாம்.

### மகிந்தவின் நிலைப்பாடு

கோத்தபாய அதிகாரத்துக்கு வந்தால் தனது சில கனவுகள் சிதையும் என்ற அச்சம் மகிந்தவுக்கு உண்டு. நாமல் ராஜபக்சவை நாட்டின் தலைவராக்கும் வகையிலேயே மகிந்த திட்டமிட்டு நகர்வுகளை மேற்கொண்டிருந்தார். கோத்தபாயவின் கையில் அதிகாரம் போனால் அது கேள்விக்குள்ளாகும். மகிந்தவின் புதல்வர்களான ரோஷித ராஜபக்ச, யோசித ராஜபக்ச ஆகியோர் கோத்தபாய மீது அதிருப்தி கொண்டிருப்பதாகவும் அவர்கள் பரப்புரைப் பணிகள் தொடர்பாக முன்வைத்த ஆலோசனைகளைக் கோத்தபாய ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் செய்திகள் வெளியாகின. இப்படியான சில விடயங்களைப் பார்க்கும் போது கோத்தபாய ராஜபக்ச பலவீனமான அல்லது பலவீனப்படக்கூடிய ஒரு வேட்பாளர் எனத் தெரிய வருகிறது. எனவே கோத்த ராஜபக்சவைப் பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளராக நியமித்தமையை ஐக்கிய தேசியக் கட்சிக்கு மகிந்த வழங்கி வரமென்றே கருத வேண்டியுள்ளது.

### ஜே.வி.பிக்குக் கணிசமான வாக்குகள் கிடைக்கும்

ஐக்கிய தேசியக் கட்சியின் ஏகாதிபத்திய சார்புக் கொள்கைக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்ட தேசியவாத சக்திகள், இடதுசாரிகளின் ஆதரவாளர்கள் கடந்த காலங்களில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கே ஆதரவு வழங்கி வந்தனர். மகிந்தவுக்கு எதிராக மைத்திரியை முன்கொண்டு வருவதில் முன்னின்று செயற்பட்டார்கள். அவர்களின் கொள்கைக்கு நெருக்கமானவராக ஜே.வி.பி. வேட்பாளர் அநுர குமார திசநாயக்க களமிறங்கியுள்ளார்.

எனவே அவர்களின் வாக்குகள் ஜே.வி.பி. பக்கம் திரும்பும். ஜே.வி.பி. தேர்தலில் வெற்றிபெற முடியாவிட்டாலும் கணிசமான வாக்குகளைப் பெறலாம். எனவே பொதுமக்கள் முன்னணி எதிர்பார்க்கும் மக்களினதும், இளைஞர்களினதும் வாக்குகள் கோத்தபாயவுக்கு முழுமையாகவோ பெருமளவிலோ கிடைக்க வாய்ப்பில்லை. எனவேதான் கோத்தபாய ராஜபக்சவைக் களமிறக்கியது மகிந்த ராஜபக்ச ஐக்கிய தேசியக் கட்சிக்கு வழங்கிய வரம் என்ற கருத்து பலப்படுகின்றது.

### ஐ.தே.க. முனைப்புடன் செயற்படவில்லை

மகிந்த வழங்கியுள்ள கோத்தபாய என்கிற வரத்தைத் தமக்குச் சாதகமாக்குவதில் ஐக்கிய தேசியக் கட்சி முனைப்புடன் செயற்படுவதாகத் தெரியவில்லை. தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் வெறுப்புக்கு உட்பட்டவர் கோத்தபாய என்பது ஒளிவு மறைவற்றது. ஆனால், அந்த வெறுப்புணர்வை ஒன்றிணைத்து அதைப் பலமான சக்தியாக உருவாக்குவது தொடர்பாக இதுவரை உருப்படியாக எந்தவொரு நடவடிக்கையையும் ஐ.தே.க. எடுக்கவில்லை. சிங்கள மக்கள் மத்தியிலுள்ள ஜனநாயக சக்திகளையும் பொருளாதார வளர்ச்சியை நேசிக்கும் சக்திகளையும் அரவணைத்து முன் செல்லும் முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை. இவை எல்லாவற்றையும் விட உட்கட்சிப் பூசலே இப்போது ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மேலெழுந்து நிற்கிறது. அதாவது கட்சியின் மத்திய குழு, செயற்குழுக் கூட்டங்களில் பேசி முடிவெடுக்க வேண்டிய விடயங்கள் மேடை ஏற்றப்படுகின்றன. அவை ஆர்ப்பாட்டங்கள் பேரணிகளாகவும் பரிணமிக்கின்றன.

### சஜித் பிரேமதாசவின் செயற்பாடுகள்

தானே ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்த அரச தலைவர் வேட்பாளர் என்ற வகையில் பரப்புரைகளை மேற்கொண்டு வருகிறார் அமைச்சர் சஜித் பிரேமதாச. கட்சியின் பல முக்கியஸ்தர்கள் உட்படப் பலர் சஜித்துக்கு ஆதரவான பரப்புரையை மேற்கொள்கின்றனர். நீண்டகால அரசியல் அனுபவமும் அரசியல் தந்திரோபாயத்தில் வல்லவர் எனவும் கருதப்படும் மங்கள சமரவீரகூட சஜித்துக்கு ஆதரவாகப் பரப்புரைகளை மேற்கொள்கின்றார். இன்னொரு சாரார் ரணில் விக்கிரமசிங்கவே அரச தலைவர் வேட்பாளர் என்கின்றனர். யார் அரச தலைவர் வேட்பாளர் என அறிவிக்காத ரணில் விக்கிரமசிங்க, அதை ஐ.தே.க. தலைமையிலான கூட்டணியே முடிவு செய்யும் எனத் தெரிவித்து வருகிறார். இன்னொரு சாரார் சபாநாயகர் கருஜெயசூரியவை வேட்பாளராக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளனர். கோத்தபாயவைத் தமது வேட்பாளராக அறிவித்து ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பெரும் வரத்தை மகிந்த வழங்கியுள்ள நிலையில், அதைச் சரிவரப் பயன்படுத்த முனையாது, தமக்குள் உட்பூசல்களை ஏற்படுத்தி வருகின்றனர் ஐக்கிய தேசியக் கட்சியினர்.



# சுற்றுலாவிகளின் நகர் பாங்கொக்!

அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் தாய்லாந்தின் தலைநகரமான பாங்கொக் தொடர்ச்சியாக 4ஆவது முறையாக முதலிடத்தைத் தக்கவைத்துள்ளது.

உலகின் தலைசிறந்த 10 சுற்றுலா நகரங்கள் எது? என்று ஆராய 200 நகரங்களை இலக்காகக் கொண்டு ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதில் அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் தாய்லாந்தின் தலைநகரமான பாங்கொக், தொடர்ச்சியாக 4ஆவது முறையாக முதல் இடத்தை தக்கவைத்தமை தெரியவந்துள்ளது. அங்கு ஆண்டுக்கு 2 கோடியே 28 லட்சம் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களை பரிஸ், லண்டன் நகரங்கள் தம்வசப்படுத்தி உள்ளன. நான்காவது இடத்தில் சிங்கப்பூரும், ஐந்தாவது இடத்தில் கோலாலம்பூரும் உள்ளன.

**'பொற்கோபுரங்களின் இருப்பிடம்...'**



# வெள்ளையர்களின் துர்க்கனவாகியவர் ரொபேர்ட் முகாபே

சிம்பாப்வேயின் தேசபிதா என்று வர்ணிக்கப்படும் ரொபேர்ட் முகாபே நேற்றுமுன்தினம் காலமானார். அவருக்கு வயது 95.

1924ஆம் ஆண்டு முகாபே பிறந்தார். தனது 30ஆவது வயதுக்குப் பின்னர் வெள்ளையர்களின் ஆதிக்கத்துக்கு எதிராக குறிப்பாக பிரிட்டி ஷாருக்கு எதிராக முகாபே போராடினார். கொரில்லா தாக்குதலைத் தமது தெரிவாகக் கொண்டு பிரிட்டனுக்குப் பெரும் அச்சுறுத்தல் கொடுத்தன அவரது படைகள். 1980ஆம் ஆண்டு சிம்பாப்வே சுதந்திரம் அடைவதற்கு முகாபே பெரும் காரணமாக இருந்தார்.

சிம்பாப்வே சுதந்திரம் அடைந்தது முதல். 2017ஆம் ஆண்டு வரையில் சுமார் 36 ஆண்டுகள் அந்த நாட்டின் ஆட்சித் தலைவராக முகாபே இருந்தார். 2017ஆம் ஆண்டு இராணுவப் புரட்சியின் மூலம் முகாபேயின் ஆட்சி வீழ்த்தப்பட்டது. அதன் பின்னர் சிங்கப்பூரில் உள்ள மருத்துவமனையொன்றில் சிகிச்சை பெற்றுவந்த முகாபே தனது 95ஆவது வயதில் நேற்றுமுன்தினம் காலமானார்.

**'ஆபிரிக்கப் போராளி...'**

ரவுண்ட் த வேள்ட்

பிரகாஸ்



# இந்தியா – ரஷ்யா கூட்டாக கப்பல் கட்டுவதற்கு முடிவு!

இந்தியாவும், ரஷ்யாவும் இணைந்து கூட்டாக கப்பல் கட்டும் தொழிலில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு உள்ளதாக புடின் தெரிவித்துள்ளார்.

இந்தியத் தலைமை அமைச்சர் மோடி ரஷ்யாவுக்குச் சென்றுள்ளார். அங்கு புடின், மோடி இருவரும் இரு தரப்புப் பேச்சுக்களில் ஈடுபட்டனர். இதையடுத்தே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

**'வலுப்பெறுகிறது இந்த உறவு...'**

### அமெரிக்க அதிபர் தேர்தலில்

# ட்ரம்புக்கு சரிவுநிலை

அமெரிக்க அதிபர் தேர்தலில், ட்ரம்புக்கு எதிராக வாக்களிக்க 52 சதவீத அமெரிக்கர்கள் முடிவு செய்துள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. அமெரிக்காவில் அடுத்த ஆண்டு அதிபர் தேர்தல் நடைபெற உள்ளது. தற்போது அதிபராக உள்ள டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிட உள்ளார். ஜனநாயக கட்சி சார்பில் ஜோ வால்ஷ் போட்டியில் இருப்பார் என்று செய்திகள் கூறுகின்றன.

இந்த நிலையில், அமெரிக்காவில் அடுத்த ஆண்டு நடைபெறும் தேர்தலில் எவருக்கு வாக்களிப்பீர்கள்? என்ற கேள்வியோடு சமீபத்தில் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது. அமெரிக்கத் தேர்தல் தொடர்பான கருத்துக் கணிப்புகளை வெளியிடும் ராஸ்முசன் என்ற நிறுவனம் இந்த கருத்துக் கணிப்பை நடத்தியது. 52 சதவீதமான மக்கள் ட்ரம்புக்கு எதிராக வாக்களிக்கவுள்ளனர் என்று கருத்துக்கணிப்பு கூறுகின்றது.

**'வீழ்கின்றார் ட்ரம்ப்...'**



# பகாமாஸில் டொரியன் தாண்டவம்



பகாமாஸ் நாட்டில் பேரழிவை ஏற்படுத்திய டொரியன் புயலுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 30ஆக அதிகரித்தது. கரிபியன் பகுதிகளில் மையம் கொண்டிருந்த டொரியன் புயல் போர்டோ ரிகோ, வெர்ஜின் தீவுகளைக் கடந்து, கடந்த வார இறுதியில் பகாமாஸ் நாட்டைக் கடுமையாகத் தாக்கியது. இதன் காரணமாக நாட்டின் வடக்குப் பகுதியில் இரண்டு நாள்கள் பலத்த காற்றுடன் தொடர்ந்து கன மழை பெய்து பேரழிவை ஏற்படுத்தியது. இதனால் தாழ்வான பகுதிகள் தண்ணீரில் மிதக்கின்றன. இதில் சுமார் 30 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று கருதப்படுகிறது. டொரியன் தற்போது வலுவிழந்து அமெரிக்காவைத் தாக்கத் தொடங்கியுள்ளது.

**'பாவம் பகாமாஸ்...'**

ந.லோகதயாளன்

# உயிர் மாய்ப்புகளை இல்லாதாக்குவோம்!




தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொள்பவர்கள் தடுப்பு தினமாகச் செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி அமைகிறது. இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் பின்னர் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உயிரை மாய்ப்பதற்கு முயற்சி செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதற்கு நீண்டகால இடப்பெயர்வு, குடும்பத் தலைவர்கள் போரில் கொல்லப்பட்டமை, பிள்ளைகள், உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டமை, தொடர்ச்சியான இழப்புகள், போதைப் பொருள் பாவனை, தென்னிந்திய சினிமாவும் நுண்கடன்களும் எனப் பல காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. இதில் வாழ்வாதாரத்துக்குப் போதிய வருமானம் இல்லாமையே முக்கிய காரணியாக இருக்கிறது.

**யாழ்ப்பாணத்தில் உயிர் மாய்ப்புகள்**

யாழ்ப்பாணக் குடாநாட்டில் 2013ஆம் ஆண்டில் இருந்து உயிர்மாய்ப்பதற்கு முயல்வோரின் எண்ணிக்கை குறைவதாக இல்லை என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைத் தரவுகள் தெரிவிக்கின்றன. அவற்றின் அடிப்படையில் 2013 ஆம் ஆண்டில் 714 பேரும், 2014ஆம் ஆண்டில் 640பேரும், 2015ஆம் ஆண்டில் 588பேரும் , 2016 ஆம் ஆண்டில் 578 பேரும் , 2017ஆம் ஆண்டில் 702பேரும் உயிரை மாய்க்க முயன்றுள்ளனர். 2018ஆம் ஆண்டில் 735 பேர் உயிரை மாய்க்க முயன்ற நிலையில் 150 பேர் சாவடைந்தனர். 585 பேர் காப்பாற்றப்பட்டுள்ளதாகப் போதனா வைத்தியசாலையின் புள்ளிவிவரம் தெரிவிக்கின்றது.

**வவுனியா, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களின் நிலை**

வவுனியா மாவட்டத்தில் 2017ஆம் ஆண்டில் 302பேரும், 2018ஆம் ஆண்டில் 289பேரும் உயிரை மாய்ப்பதற்கு முயன்றுள்ளனர். கிளிநொச்சியில் 2016ஆம் ஆண்டில் 270பேர் உயிரை மாய்ப்பதற்கு முயன்ற நிலையில் 40பேர்சாவடைந்தனர். 2017ஆம் ஆண்டில் 351பேர் உயிரை மாய்ப்பதற்கு முயன்ற நிலையில் 34 பேர் சாவடைந்தனர். 2018ஆம் ஆண்டில் 377பேர் உயிரை மாய்ப்பதற்கு முயற்சித்த நிலையில் 45 பேர் சாவடைந்துள்ளனர். 2019ஆம் ஆண்டின் முதல் 7 மாதங்களில் மட்டும் 191பேர் உயிரை மாய்ப்பதற்கு முயன்று 20பேர் சாவடைந்துள்ளனர். மன்னார் மாவட்டத்தில் 2017ஆம் ஆண்டில் 136 பேரும் 2018ஆம் ஆண்டில் 143 பேரும் உயிரை மாய்ப்பதற்கு முயன்ற நிலையில் 2017ஆம் ஆண்டில் இருவரும் 2018ஆம் ஆண்டில் 4 பேரும் சாவடைந்துள்ளனர். இவ்வாறு ஆண்டு ஒன்றுக்கு வடக்கு மாகாணத்தில் மட்டும் சராசரியாக சுமார் ஆயிரத்து 500 பேர் உயிரை மாய்ப்பதற்கு முயற்சிக்கும் நிலையில் அவர்களில் 300 பேர் வரையில் சாவடைகின்றனர்.



**மருத்துவத் தரப்புக்கூறும் காரணங்கள்**

போர்ப் பகுதியில் பணியாற்றியவரும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் தற்போதைய பணிப்பாளருமான சத்தியமூர்த்தியிடம் இது தொடர்பில் கேள்வியெழுப்பியபோது, வடக்குக் கிழக்கு மாகாண மக்கள் உயிரை மாய்ப்பதற்கு முயற்சிக்கின்றமை அதிகமாகவே கானப்படுகின்றது என்றார். இவர்கள் உயிரை மாய்ப்பதற்கு முயல்வதற்கான காரணங்களை தேடியபோது போரின் தாக்கமே முதன்மையாகவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். அதாவது குடும்பத்தின் மூத்த உறுப்பினர் சாவடைந்து அல்லது காணாமல் ஆக்கப்பட்ட நிலையில், அதனால் உண்டான சோகம், மன அழுத்தம், மீள முடியாத வறுமை அவர்களை உயிரை மாய்ப்பதற்குத் தூண்டுகின்றது. இதற்கு போதிய பரிகாரம் இன்றுவரை ஏற்படுத்தப்படவில்லை. இவ்வாறு பாதிப்படைந்தவர்களைப் பகட்டு வாழ்க்கையின்பால் ஈர்ப்பை ஏற்படுத்தி, ஏமாற்றிப் பகட்டு வார்த்தைகூறி நுண்கடன்களை வழங்குகின்றனர். கடனைப் பெற்று அதை அடைக்க முடியாதமையும் இந்த உயிர் மாய்ப்புகளுக்குக் காரணமாகவுள்ளது. தற்போது இங்கே காஒப்படும் அதிகரித்த போதைப் பொருள் பாவனை, அதனால் ஏற்படும் குடும்பச் சச்சரவு, மன விரக்தி என்பன உயிரை மாய்ப்பதற்குத் தூண்டுகின்றன. இந்தப் பாதிப்புடையவர்களை உடன் இனங்கண்டு உரிய முறையிலான சிகிச்சை வழங்காத தாமதமும் இதற்குக் காரணமாகவுள்ளது என்று மேலும் விவரித்தார் குடும்ப வன்முறை அல்லது குடும்பச் சண்டைகளின்போது ஒரு தரப்பை அச்சுறுத்துவதற்காகவும் இந்த உயிர்மாய்ப்புகள் இடம்பெறுவதாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

**சமூக அமைப்புகள் என்ன சொல்கின்றன?**

வடக்கில் உயிர் மாய்ப்புகள் அதிகரித்திருப்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அந்தக் காரணங்கள் தோற்றுவிக்கும் உயிர் மாய்ப்பு உந்துதல்களைத் தடுத்து நிறுத்துவதற்குச் சமூக அமைப்புக்களின் பணிகள் போதுமானவையாக உள்ளனவா? அவற்றின் பணிகளில் தொய்வு உள்ளதா? எனப் பல கேள்விகள் எழுகின்றன. சமூக அமைப்புக்களின் இது சார்ந்த பணியில் வேகம் போதாமையும் இருக்கத்தான் செய்கிறது. உயிரை மாய்ப்பதற்கு முயல்பவரை அறிந்து கொள்ள முடியாது எனினும் அதிலிருந்து காப்பாற்றப்பட்டவரையாவது அந்த மன நிலையில் இருந்து மீட்கவேண்டிய பொறுப்பு அனைவரிடத்திலும் உண்டு. மாறாகச் சிலர் இரண்டு, மூன்று தடவைகளுக்கு மேல் உயிர்மாய்க்க முயன்ற சம்பவங்களும் உள்ளன.

**தென்னிந்தியப் பாதிப்பு**

உள்நாட்டு நிலைமை போராலும், அதனால் ஏற்பட்ட இடர்களாலும் அல்லாடிக்கொண்டிருக்க, இதற்கு மத்தியில் தென்னிந்தியத் திரைப்படங்கள் சமூகத்தை நல்வழிப்படுத்துவதை விடவும் தவறான பாதைக்குத் தூண்டுவதை ஊக்குவிக்கின்றன. தொடர் நாடகங்களில், திரைப்படங்களில், வன்முறை, கொலைவெறி, போதைப்பொருள் பாவனையை ஒரு இலகு நடைமுறை போன்று கான்பிக்கின்றமை(இது அதைஊக்கப்படுத்துவதாகவே கண்டறியப்படுகின்றது) எனப் பல காரணங்களால் உயிர்மாய்ப்புகளை மக்கள் மனங்களில் விதைக்கின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டில் உளவளப் பணியில் ஈடுபடும் மாற்றம் அமைப்பின் பணிப்பாளரான பங்குத் தந்தை வின்சன் பற்றிக்கை இது தொடர்பில் குறிப்பிடும்போது, சமூகத்தில் உள்ள நேர்மறையான கருத்துக்கள் எதிர்மறையாகவும் தாழ்வு மனப்பான்மையும் ஏற்படும்போது உயிரை மாய்ப்பதற்கு முற்படுகின்றனர். நாட்டு நிலமை, பொருளாதாரச் சூழல், போதைப் பொருள் பாவனை என்பன இதற்கு உரமிடுகின்றன. நாம் இந்த அமைப்பின் ஊடாகப் போதைப் பொருளில் இருந்து விடுபடுவதற்கான பணிகளை இயன்றளவில் முதன்மைப் படுத்தி முன்னெடுத்து வருகின்றோம் என்கிறார். எது எவ்வாறிருப்பினும் செப்ரெம்பர் 10ஆம் திகதி மாத்திரம் இந்த 'உயிர்மாய்ப்பாளர்கள்' தினத்தைக் கடைப்பிடித்துவிட்டு நகராமல் உயிர்மாய்ப்பாளர்களின் அதிகரிப்பைக் குறைப்பதற்கு அனைவரும் தொடர்ந்து பங்காற்றுவதே சிறந்தது.

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர்.



கா.பர்வி

# இந்தியாவின் சந்திரயான்- 2

ஜூலை மாதம் 22ஆம் திகதியன்று இந்தியாவின் சென்னையில் உள்ள இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோவின் சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து சந்திரயான் 2 வின்கலத் தொகுப்பு நிலவு நோக்கி ஏவப்பட்டது. ஆரம்பத்தில் பூமியின் சுற்று வட்டப் பாதையில் சுற்றிக் கொண்டிருந்த சந்திரயான் 2, பிறகு அதில் இருந்து விடுபட்டு நிலவின் சுற்று வட்டப் பாதைக்கு மாறிப் பயணித்தது. அது நிலவின் சுற்றுவட்டப் பாதைக்குள் நுழைந்தது. நேரடியாக நிலவை நோக்கிப் பயணிக்காமல் இப்படிச் சுற்றுவட்டப் பாதையில் பல வாரங்கள் எடுத்துக் கொண்டு பயணிக்கும் தொழில் நுட்பம், எரிபொருளை மிச்சப்படுத்தும் நோக்கத்தோடு உருவாக்கப்பட்டது என்பது இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோவின் கருத்து. நிலவின் சுற்று வட்டப் பாதையில் சுற்றிக்கொண்டிருந்த குறித்த விண்கலத் தொகுப்பில் இருந்து பிரிந்த தரையிறங்கு கலன் நிலவின் மேற்பரப்பில் நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை 1.30 முதல் 2.30 மணிக்குள் தரையிறங்கும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அது நிகழவில்லை.

**தரையிறங்காத நிலையில் தொடர்பு துண்டிப்பு**

இந்தியாவின் நிலவுப் பயணத் திட்டமான இந்தச் சந்திரயான் 2 நிலவில் தரையிறங்கவில்லை. அது தரையிறங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக இந்தியத் தரப்புகள் குறிப்பிடுகின்றன. சந்திரயான் 2 விண்கலத்தின் சமிக்ஞை துண்டிக்கப்பட்டுவிட்டதாக இஸ்ரோ அறிவித்துள்ளது. முதல் கட்டத்தில் அதன் செயற்பாடு சிறப்பாக இருந்ததாகவும் பின்னர் தரைக் கட்டுப்பாட்டு நிலையத்துடனான அதன் தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டதாகவும் இஸ்ரோ தெரிவிக்கிறது. சந்திரனின் மேற்பரப்பில் இருந்து 2.1 கிலோமீற்றர் தொலைவில் இருந்த நிலையில், அதன் தொடர்பு துண்டிக்கப்பட்டதாக இஸ்ரோ மேலும் தெரிவிக்கிறது.

**இந்தியாவின் நிலவு முயற்சி**

அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகள் நிலவில் தரையிறங்கும் செயல்களை ஏற்கெனவே செய்திருந்தாலும் இந்தியாவுக்கு இது சவாலான பணிதான். இந்தியாவால் ஏவப்பட்ட விண்கலங்கள் நடுவானில் வெடித்துச் சிதறிய தோல்விச் சம்பவங்கள் கடந்த காலங்களில் தொடராகப் பதிவாகியிருந்தன. இந்தியாவைப் பொறுத்தவரை நிலவை நோக்கிய இந்த விண்கலப் பயணம் பெரியதொரு செயலே. விண்கல் தாக்கத்தால் மேடுகளும், பள்ளங்களும் நிறைந்த கரடுமுரடான பகுதியான நிலவின் மறுபாதிநோக்கியதாகவே இந்தச் சந்திராயன் 2வின் பயணம் அமைக்கப்பட்டது. தரையிறங்கும்முன் அந்தப் பகுதியை ஆராய்ந்து அதன்பின் தான் தரையிறங்கும் இடம் குறித்து முடிவெடுக்க முடியும். நிலவின் பரப்பை நோக்கி மிகவேகமாகச் செல்லும் இந்த விண்கலம் விநாடிக்கு 2 கிலோமீற்றர் அளவை அடையும் நேரத்தில் அதில் பொருத்தப்பட்டுள்ள 'விக்ரம் லேண்டரில்' இருக்கும் தொழில்நுட்ப இயந்திரம் சரியான எதிர் சக்தியைக் கொடுத்து அதன் வேகத்தை முழுதாக நிறுத்த வேண்டும். இது துல்லியமாக நடந்தால்தான் தரையிறங்குதல் சாத்தியம். இது 15 நிமிடங்களுக்குள் நடந்தாக வேண்டும். இந்த இறுதி 15 நிமிடங்கள்தான் மிகச் சவாலான நிமிடங்கள். இது வெற்றிகரமாக நடந்தால் லேண்டரிலிருந்து வெளிவரும் ரோவர் நிலவின் பரப்பில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும். தற்போது அது தடைப்பட்டிருக்கிறது.

**சந்திராயன் 2 திட்டம்**

இந்தியாவின் நிலவை நோக்கிய பயணம் என்கிற இலட்சியத் திட்டத்தின் ஒரு பகுதியான சந்திரயான்-2 விண்கலத்தில் மூன்று முக்கிய கலன்கள் உள்ளன. முதலாவதாகச் சுற்று வட்டக்கலன் நிலவின் சுற்றுவட்டப் பாதையில் சுற்றிவரும். இரண்டாவதாக, நிலவின் மேற்பரப்பில் தரையிறங்கும் கலன். மூன்றாவதாக, இந்தத் தரையிறங்கிய கலனில் இருந்து ரோவர் ஊர்தி வெளியேறும். செப்ரெம்பர் 7ஆம் திகதி அதிகாலை 1:30 - 2:30 மணி அளவில் லேண்டர் நிலவின் மேற்பரப்பைச் சென்றடையும் என்று தெரிவிக்கப்பட்டது. பின்னர் காலை 5:30 - 6:30 மணி அளவில்தான் நிலவின் தென் துருவப் பகுதியில் ரோவர் தரையிறங்கும் என்றும் இஸ்ரோ அறிவித்தது. அதன் பிறகு அதிலிருந்து சமிக்ஞை வரவில்லை என்றுள்ளது.


**சந்திரயான் 2 குறித்த இந்தியாவின் பெருமிதம்**


இந்தியாவின் கொடியைச் சந்திரயான் 2 கொண்டு சென்று நிலவில் இறங்குவதால் இந்தத் திட்டம் சிறப்புப் பெறுகிறது. இந்தியாவின் பெருமையாகவும் இது கருதப்படுகிறது என்று இந்திய ஊடகங்கள் இந்த நிலவுத் திட்டம் குறித்துப் பெருமிதமடைந்திருந்தன. அத்தோடு செவ்வாய் கிரகம் மற்றும் சிறு கிரகங்களில் விண்கலனை தரையிறங்க செய்கின்ற மற்றும் நிலவுக்கு மனிதனை அனுப்புகிற தொழில்நுட்ப வாய்ப்புகளை இது வழங்குவதாக அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டது. உலக நாடுகளில் எதுவும் இதுரை தடம் பதிக்காத நிலவின் தென்துருவத்தில் தரையிறங்கவிருக்கும் இந்த விண்கலச் சாதனை வெற்றிகரமாக நடந்தால் ரஷ்யா, அமெரிக்கா, சீனாவுக்குப்பின் நிலவில் தரையிறங்கிய நான்காவது நாடு என்ற பெருமையை இந்தியா அடையும் என்றும் இந்தியத் தரப்புகள் சுட்டிக்காட்டின.

**மோடியின் அனுதாபத் தெரிவிப்பு**

நிலவில் தரையிறங்கும் தறுவாயில் சந்திரயான் 2 விண்கலத்தில் இருந்து வந்த தகவல் துண்டிக்கப்பட்டதை அடுத்து, இந்தப் பெருமிதங்கள் அனைத்தும் தவிடுபொடியாகியுள்ளன. இந்த நிலையில், இது குறித்துக் கவலைப்பட வேண்டாம் என்று இந்தியாவின் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி தெரிவித்திருக்கிறார். "நாம் இதுவரை செய்தது ஒரு சின்ன விடயம் அல்ல. மிகப் பெரிய விடயம். தைரியமாக இருங்கள். நான் உங்களுடன் இருக்கிறேன். கவலைப்படாதீர்கள்" என்று அவர் இஸ்ரோ அதிகாரிகளிடம் தெரிவித்ததாக இந்திய ஊடகங்கள் தற்போது செய்தி வெளியிட்டிருக்கின்றன. எது எப்படியிருப்பினும் பூமியிலிருந்து புறப்பட்ட தருணத்தில் பூமியை எடுத்த ஒளிப்படமும், நிலவை நெருங்கிக் கொண்டிருந்த சமயத்தில் நிலவை எடுத்த ஒளிப்படமுமே தற்போதுவரை சந்திராயன் - 2 என்கிற இந்திய விண்கலத்தார் சாத்தியமாக்கப்பட்ட விடயமாக இருக்கிறது.

இந்தியாவின் கொடியைச் சந்திரயான்- 2 கொண்டு சென்று நிலவில் இறங்குவதால் இந்தத் திட்டம் சிறப்புப் பெறுகிறது. இந்தியாவின் பெருமையாகவும் இது கருதப்படுகிறது என்று இந்திய ஊடகங்கள் இந்த நிலவுத் திட்டம் குறித்துப் பெருமிதமடைந்திருந்தன.





# மக்கள் மனங்களில் புலிகளின் குரல் வானொலி

தேவநாயகம் தேவானந்த்

புலிகளின் குரல் வானொலி முன்னனுபவங்களோடும் முழுப் பலத்தோடும் ஆரம்பிக்கப்பட்ட வானொலியல்ல. அனுபவம் வாய்ந்த தொழில்முறை வானொலிப் பணியாளர்களோடு ஆரம்பிக்கப்பட்ட வானொலியாகவும் அதைக் குறிப்பிட முடியாது. தேவை கருதி எழுந்த வானொலி ஒரு விடுதலை இயக்கத்தின் கருத்தியல் உருவாக்கத்துக்கான அவசியத்தால் உருவாக்கப்பட்டது. இதன் அத்தனை செயற்பாடுகளையும் புதிதளித்தல் செயற்பாடாகவே கருத முடியும். முயன்று தவறி அதிலிருந்து கற்றுக்கொண்டு நகர்த்தப்பட்டதாகவே இதைக் குறிப்பிடமுடியும். கிடைக்கின்ற பொருள்களையும், நிலமைகளையும் பயன்படுத்திப் புலிகளின் குரல் கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்கள் ஈழ மண்ணில வெற்றிகரமாக ஒலித்திருக்கிறது எனலாம்.

**ஆளணித் தயார்ப்படுத்தல்**

புலிகளின் குரல் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் தமக்கான ஆளணியைத் தயார் செய்வதற்கு அப்போது யாழ்ப்பாணத்திலிருந்த வளவாளர்களைப் பயன்படுத்தியிருந்தார்கள். பயிற்சிப்பட்டறைகளை ஒழுங்கு செய்து பல வகையான பயிற்சிகளும் வழங்கப்பட்டன. இந்தப் பயிற்சிகளை வழங்குவதற்கு இலங்கை வானொலியில் பணியாற்றியவர்களையும் அதில் பணியாற்றிக் கொண்டிருந்தவர்களையும் பயன்படுத்தினார்கள். இதில் இலங்கை வானொலியில் புகழ் பெற்ற நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும், நாடக எழுத்தாளராகவும், நடிகராகவும் இருந்த பேராசிரியர் கா. சிவத்தம்பியின் பங்களிப்பு முக்கியமானது. இதே போல் இலங்கை வானொலியின் அறிவிப்பாளராகப்



பணியாற்றிய சண், அறிப்பாளர்களுக்குப் பயிற்சியளித்ததில் முக்கியமானவர். இலங்கை வானொலியல் பணியாற்றிக்கொண்டிருந்த இளையதம்பி தயானந்தா போன்றோர் புலிகளின் குரல் அறிவிப்பாளர்களைப் பயிற்றுவிப்பதற்காக உதவினார்கள். இதன் பின்னர் தமது பட்டறிவின் மூலமும் தாம் செயற்படுவதால் கிடைத்த அறிவு மற்றும் கற்றுக் கொண்ட பாடங்கள் மூலமும் புலிகளின் குரல் வானொலி சிறந்த அறிவிப்பாளர்களையும் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களையும் உருவாக்கியிருந்தது.

**தனித்துவ அடையாளத்தைப் பேணியது**

புலிகளின் குரலைப் பொறுத்தமட்டில் அதன் புத்தாக்கமான நிகழ்ச்சிகளுக்காக அது தனக்கான தனித்துவமான அடையாளத்தைப்பேணியிருக்கிறது எனலாம். புலிகளின் குரல் காலை, மாலை எனக் குறிப்பிட்ட நேரங்களில் மட்டும் ஒலிபரப்பப்பட்டது. கால 6.30 மணி தொடக்கம் 7 மணிவரையும் மாவீரர் வணக்கம், மாவீரர் எழுச்சிப்பாடல் மற்றும் செய்தியறிக்கை நடைபெறும். மாலையில் செய்தியறிக்கை முக்கியத்துவம் பெறும். இதில் இலங்கைச் செய்திகள், உள்ளூர்ச் செய்திகள், உலகச் செய்திகள் என்பன உள்ளடங்கின. உள்ளூர்ச் செய்தியில் புலிகளின் செய்திகள் அதில் களநிலவரங்கள் தொடர்பான செய்திகள் முக்கிய மானவை. இந்தச் செய்திகள் 'வோக்கிரோக்கி' மூலம் கிடைக்கப்பெறும் வீரச் சாவடைந்தவர்கள் விவரம் எத்தனை, இராணுவத்தினரின் சாவுகள் எத்தனை, அதில் எத்தனை பேரின் உடலங்கள் கைப்பற்றப்பட்டன, எத்தனை பேர் உயிருடன் பிடிபட்டார்கள் போன்ற விவரங்கள் கிடைக்கப்பெறும். அவற்றைச் செய்தியறிக்கையில் உடனுக்குடன் தெரிவிப்பார்கள். வெளிநாட்டுச் செய்திகளுக்கு ஆரம்பகாலங்களில் பொறுப்பாக இருந்தவர் ரூபன். அப்போது உலக வானொலிச் சேவைகள் தான் உலகச் செய்திக்கான மூலங்களாக இருந்தன. பி.பி.சி போன்ற ஆங்கில ஊடகச் செய்திகளைக்கேட்டு மொழிபெயர்த்து உலகச்செய்திகள் வழங்கப்பட்டன.

இதனைப் புலிகளின் குரல் பொறுப்பாளராக இருந்த பரதனின் தந்தையார் இராசநாயகம் மேற்கொண்டிருந்தார். பின்னர் தவநாதன் போன்றோர் மேற்கொண்டதாக அறிய முடிகிறது.

புலிகளின் குரல் வானொலியில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இவற்றில் பல நிகழ்ச்சிகள் வாராந்தம் ஒலிபரப்பப்படுபவையாக இருந்தன. இவை பல தரப்பானவர்களின் பங்களிப்பு மூலம் வெற்றி பெற்றிருந்தன. 'ஒரே வகைத் தன்மை' புலிகளின் குரல் வானொலியில் இருந்ததில்லை. சலிப்பூட்டும் புலம்பல்களையும் காணமுடியவில்லை. சினிமாப்பாடல் களை நம்பியிருக்கும் வர்த்தகத் தன்மையும் இதில் இருந்ததில்லை. மாறாகத் தனக்கான தனித்துவ அடையாளத்தைக் கொண்டிருந்தது. தற்போது பல்வேறு நவீன வசதிகள் வளங்களோடு வானொலிகள் எல்லாம் ஒரே மாதிரியான நிகழ்ச்சி களைக்கொண்டிருக்கின்ற சூழலில் இன்றைக்கு முப்பது வருடங்களுக்கு முன்னர் தனித்துவ அடையாளத்தை நிலை நிறுத்துவதென்பது கடினமானதாகும்.



**புலிகளின் குரலில் ஒலிபரப்பப்பட்ட நிகழ்ச்சிகளும் அவற்றின் தனித்தன்மைகளும்**

1. **உரைவீச்சு**: இது வாராந்தம் நடைபெறுகின்ற நிகழ்ச்சி. இதில் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் துறைசார்ந்த விற்பனர்கள் தங்கள் துறை தொடர்பான கருத்துக்களைப் பத்து நிமிடங்கள் வரை வழங்கிவந்தார்கள். உதாரணமாக, வரலாற்றுத் துறை சார்ந்தவர்கள் தமிழர் வரலாறு தொடர்பான ஆய்வு நிலைப்பட்ட கருத்தை இந்த நிகழ்ச்சியில் வழங்குவார்கள். இதேபோன்று தமிழ்த் துறை, நாடகத்துறை என்று பல்வேறு துறைசார்ந்தவர்களின் கருத்துக்கள் இந்த நிகழ்ச்சியில் இடம்பெறும்.

2. **இலங்கை மண்** : இது 1992 - 2002ஆம் ஆண்டு வரை நடைபெற்ற ஒரு தொடர் நிகழ்ச்சி. இராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டு அதை நவீன நோக்கில் வானொலிக்காக வழங்கிய நிகழ்ச்சியாகும். இதைப் பொன். கணேசலிங்கம் தொகுத்து வழங்கியிருந்தார். இவர் சிறந்த நாடகக் கலைஞரும் கூட. இவர் எழுதி நெறிப்படுத்திய 'சந்தனக்காடுகள்' நாடகம் பிரபல்யமானது. 2008ஆம் ஆண்டில் இவர், யாழ்ப்பாணத்தில் வைத்துச் சுடப்பட்டார்.

3. **குயிலோசை** : வடபகுதியில் காணப்பட்ட கிராமியக் கலை வடிவங்களை அறிமுகம் செய்வதான நிகழ்ச்சியாக இது அமைந்தது. கிராமியக் கலைஞர்களின் நேர்காணல்கள் அவர் தம் நிகழ்ச்சிகள் இதில் ஒலிபரப்பப்பட்டன. அத்தோடு கிராமங்கள் தோறும் சென்று கிராமியக்கலை களைக்களத்திலேயே ஒலிப்பதிவுசெய்து தொகுத்து வழங்கியிருந்தார்கள்.

4. **தளிர்கள் சிறுவர் நிகழ்ச்சி** : இந்த நிகழ்ச்சியும் வாராந்தம் நடத்தப்பட்ட நிகழ்ச்சியாகும். தெரிவு செய்யப்பட்ட சிறுவர்களைக் கலையகத்துக்கு அழைத்து அவர்களின் பாட்டு, கதை சொல்லுதல், பேச்சுக்கள் போன்றவற்றைப் பதிவு செய்து ஒலிபரப்பினார்கள். இதன் தொகுப்பாளராக இருந்தவர் கயல்விழி. நிகழ்ச்சிக்கான ஆலோசனைகளையும் ஒத்தாசைகளையும் வழங்கியிருந்தவர் கல்வியியலாளரும் நாடகருமான சிவானந்தன்.

5. **இளவேனில்** : இது இலக்கியம் சார்ந்த நிகழ்ச்சியாக ஒலிபரப்பானது. பல்கலைக்கழக மாணவர்கள் குரல் கொடுத்தார்கள். இந்த நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கியவர் பகீரதி. இவர் வணிகப்பட்டதாரி. இருப்பினும் தமிழ் இலக்கியத்திலிருந்த ஆர்வம்காரணமாக நிகழ்ச்சியைத் தொகுத்து அற்புதமாக வழங்கியிருந்தார்.

6. **கலைமஞ்சரி** : இது கவிதை நிகழ்ச்சி. கவிஞர் முருகையன் இந்த நிகழ்ச்சிக்காகக் கவிதைகளை எழுதிக் கொடுத்திருந்தார். இதுவும் வாராந்தம் நடைபெற்ற நிகழ்ச்சியாகும். அந்தக் கவிதைகள் இசையோடு வாசிக்கப்பட்டன.

7. **நலந்தானா** : உடல் நலம் தொடர்பான நிகழ்ச்சியாக வாராந்தம் நடைபெற்றது. நோய்கள் பற்றியும் அவற்றிலிருந்து பாதுகாப்பது பற்றியும் நோய் ஏற்படுவதற்கான காரணங்கள் போன்ற விடயங்கள் தெரிவிக்கப்பட்டன. இதை மருத்துவர் சீர்மாறன் தொகுத்து வழங்கினார். இது மிகப்பயனுள்ள நிகழ்ச்சியாகத் தொடர்ந்தது எனலாம்.

8. **களத்திலிருந்து** : இந்த நிகழ்ச்சி மாவீரர்கள் தொடர்பானதாகும். வீரச்சாவடைந்த மாவீரர்களின் தியாகம், அவர்கள் வீரச்சாவடைந்த சூழ்நிலை, வரலாறு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும். இது மிக உருக்கமான நிகழ்ச்சியாக அமைந்திருந்தது. தெரியாத பல விடயங்கள் தெரிய வந்திருந்தன. இது சங்க கால நடுகல் வழிபாடு போன்று இருந்தது எனலாம்.

9. **ஏர் முனை** : விவசாயிகளுக்கான நிகழ்ச்சி. விடுதலைப்புலிகள் தற்சார்பு பொருளாதாரம் பற்றிய சிந்தனையை வளர்த்தெடுப்பதில் அதிகளவு கவனம் செலுத்தினர். இதற்காகப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தை உருவாக்கிப் பல விவசாய முன்னேற்றப் பணிகளை மேற்கொண்டிருந்தனர். அதில் ஓர் அம்சமாக இந்த நிகழ்ச்சி அமைந்தது. இந்த நிகழ்ச்சிக்குத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பொறுப்பாக இருந்தது. இலங்கை அரசின் பொருளாதாரத் தடை வடபகுதிக்கு நடைமுறைப்;படுத்தப்பட்டிருந்த காலம் அது. அப்போது விவசாயம் செய்வதற்கு உரம் தட்டுப்பாடாக இருந்தது. அந்தக் காலத்தில் இந்த நிகழ்ச்சி ஊடாக இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

10. **உழைப்போம் உயர்வோம்** : சிறுகைத் தொழில் உற்பத்தி தொடர்பான நிகழ்ச்சியாக இது அமைந்தது. இதுவும் விடுதலைப் புலிகளின் பொருண்மிய மேபம்பாட்டு நிறுவனத்தின் நிகழ்ச்சியாக அமைந்திருந்தது. இந்த நிகழ்ச்சி பொருண்மிய மேம்பாட்டு பணியாளர்களாலே தயாரிக்கப்பட்டது. அவர்களே குரல் கொடுத்து இந்த நிகழ்ச்சியை நடத்தியிருந்தார்கள்.

மேலே சொன்ன பத்து நிகழ்ச்சிகளும் புலிகளின் குரல் வானொலியின் தனித்துவமான நிகழ்ச்சிகளுக்குச் சிறந்த உதாரணங்களாகும். புலிகளின் குரல் வானொலி தனக்கான தனித்துவமான நிகழ்ச்சிகளைத் தனது சமூகத்தின் ஆதரவுடன் சிறப்பாக ஒலிபரப்பி வந்திருக்கிறது. ஒரு விடுதலைக்கான வானொலிப் பண்பாட்டை உருவாக்கியிருந்தது.

தற்போது பெரும் வணிக முதலீடுகளோடு ஆரம்பிக்கப்பட்ட வர்த்தக வானொலிகள் பல்வகைத்தன்மை கொண்ட நிகழ்ச்சிகளை வழங்க முடியாமல் திண்டாடுகிற இந்தச் சூழலில் , முப்பது வருடங்களுக்கு முன்னர் குறைந்த வளங்கள், வசதிகளோடு பல்வகை நிகழ்ச்சிகளோடு மாற்று வானொலியாகப் புலிகள் குரல் ஒலிபரப்பாகியிருந்தமை வியப்பானது.

கட்டுரையாளர்:
மக்கள் இதழியல் இயக்கம் - யாழ்ப்பாணம்

# மறதியால் வந்த வினை

மிருசுவில் தமிழ்தாசன்

நான் தெருப்படலையைத்திறந்ததும், சொல்லி வைத்ததுபோல எனக்கு முன்னே வந்து மூஞ்சையைக் காட்டினான் மூங்கில் காட்டு முருகுப் பிள்ளை!

“சோக்குத்தான்... இண்டைக்கு இவன் பாவியின்ரை முழுவியளம்... அமர்க்களமாகத் தானிருக்கப்போகுது”

எனது உதடுகள் என்னையும் அறியாமல் முணு முணுத்தன. நீண்ட நாள்களுக்குப் பின்பு இன்று யாழ்ப்பாணம் போய் வரவேண்டிய முக்கிய தேவை. அதற்குள் இந்தச் 'சிவன் கோயில்ச் சாமான்' எனது கண்களில் விளித்து விட்டாதே. இவனது முகத்தைப் பார்த்து விட்டுப்போனால் போகின்ற காரியம் படு தோல்வியாக இருக்குமென்பது ஒருபுறம், சிலவேளைகளில் ஏதாவது இசக்குப் பிசக்காக நடந்து மேலும் பொல்லாப்புகளைத் தந்து கொண்டிருக்கும் என்பதும் ஊரறிந்த உண்மை. அவனுடைய முழுவியளத்தில் இதுவரை எவரும் வெற்றி கண்டதாக இதுவரையான ஊரின் சரித்திரத்தில் எதுவித பதிவுகளும் இல்லை. அப்படியொரு மூதேவி வால் காயம் அவனது முகத்தில்! முகமா அது? தாடி, மீசைகள் எல்லாம் எல்லைகளற்ற 'ஸ்ரெப்பீஸ்' புல்வெளியைப் போன்ற மறுதோற்றம். உடுத்தியிருக்கும் அந்த வேட்டியின் அடிப்படை நிறத்தை அந்த ஆண்டவனாலும் கண்டுபிடிக்க முடியாது. அழுக்கென்றால் அப்படியொரு அழுக்கு. பெற்றோல் ஊற்றி அந்த வேட்டியை எரிக்க முற்பட்டால் பெற்றோலுக்குத்தான் நட்டம் ஏற்படும். இத்தனை அம்சங்களைக் கொண்ட முருகுப் பிள்ளைக்கு யார் தான் இந்தப் பெயரைச் சூட்டி விட்டார் களோ? பேசாமல் முருங்கைப் பிள்ளை யென்று வைத்திருக்கலாம். இல்லையில்லை அதுவும் அபத்தம். முள் முருங்கை யென்றாலேயே அவனுக்கு அது பொருத்தமாயிருக்கும். சரி வெளிக்கிட்டது வெளிக்கிட்டதுதான். அவனின் முழுவியளம் முழுவி யளம்தான். இனி நடக்கப்போவது அத்தனைக்கும் அவனே காப்பு.

✦ ✦ ✦ ✦

பேருந்துத் தரிப்பிடத்துக்குப் போனதுதான் தாமதம் நான் முந்தி நீ முந்திப் போட்டியில் தனியார் பேருந்து தான் முந்தி வந்து நின்றது. அதற்குள் ஏறியபின்னர்தான் புரிந்தது நடத்துநர் ஒரு பெரும் கோபக்காரன். அவனுக்கு மூல வியாதிபோல எதாவது கீழ் வியாதி இருக்கும்போல! எனது நெஞ்சில் பிடித்துத் தள்ளோ தள்ளென்று தள்ளிக் கொண்டுபோய், சனத்துக்குள் முடக்கி விட்டான். பேருந்து வேகமெடுத்து ஓடிக்கொண்டிருந்தது. அதையும் முந்திக் கொண்டு எனது மனம் வெற்றிக் கம்பத்தைத் தொட்டு விடத் துடித்துக் கொண்டிருந்தது.

“கடவுளே! இனி யாழ்ப்பாணம் போயிறங்கி அடுத்த பஸ் பிடிச்சு, வேலணைக்குப் போய், அந்த ஆயுள்வேத வைத்தியர் அன்னராசாவைத் தேடிப்பிடிச்சு, என்ரை மனிசிக்கு இருமல் மருந்து வாங்க வேணும். கையோடை அந்த மிருக வைத்தியரைத் தேடிப்பிடிச்சு நாய்க்குட்டி வீமாவுக்கும் மருந்து வாங்கவேண்டும்”

எனது இந்தப் பயணத்தின் குறிக்கோள்கள் இவையே. மனைவி மங்களேஸ்வரிக்கு வயது ஐம்பது முடியப் போகிறது. இந்த இருமல் அவளைப்போட்டுப் படாத பாடு படுத்துகிறது. ஆரம்பத்தில் இது வெறும் செருமல் தான் என்றிருந்தால் இற்றைக்கு மூன்று மாதங்களுக்கு மேலாக அவளுக்கு இருமல் நீண்டு கொண்டேயிருக்கிறது. அக்கம் பக்கத்தினரின் நித்திரைக்கு எதிரியாகிவிட்டது மனையிவியின் இந்த இருமல். பக்கத்து வீட்டுப் பவளமக்கா, பொலிஸில் முறைப்பாடு கொடுக்கப் போவதாகப் பயமுறுத்தி வருகிறாள். அவர்களும் எத்தனை நாள்களுக்குத் தான் பொறுப்பார்கள்? அவர்கள்போக வீட்டுக்குள் இருக்கும் எனது நிலை? எனக்கும் நிம்மதியில்லாமல் போனது. இவளின் இருமல் என்ன சாதாரண் இருமலா?

இருமத் தொடங்கினால் கட்டாடி கணபதியின் காளிகோவில் உடுக்குச் சத்தம் போலவே கேட்கும். அந்தக் கோவிலில் உடுக்கு அடிப்பதற்கு ஆளில்லாவிட்டால் இவளைக் கொண்டு போய் விட்டுவிடலாம் என்று நான் நினைப்பதுண்டு. இங்கேயிருந்து இருமி எமக்கெல்லாம் தொந்தரவு தருவதை விட அங்கே போனால் கணபதிக்கு உடுக்கு அடிக்கும் கூலியாவது மிஞ்சுமே! அந்த ஆயுள்வேத வைத்தியரிடம் அவசரமாகச் சென்று இவளின் இருமலுக்கு நல்ல மருந்தை எடுத்து உடனடியாக இதைத் தடுத்தி நிறுத்தியாக வேண்டும். இது ஒரு புறமிருக்க வீட்டு நாய் வீமா மீது யார் கண் பட்டதோ தெரியவில்லை ஒரு வாராமாக அது உணவு தவிர்ப்புப் போராட்டம் செய்கிறது. வாலைத் தொங்கப் போட்டபடியே சோம்பிப் போய் நிற்கிறது. குரைப்பதையே மறந்துவிட்டது. பாவம் அதற்கும் மருந்து எடுத்தாக வேண்டும். இவை தான் இந்தப் பயணத்துக்கான அடி நாதங்கள்.



> “வீட்டுக் கோடிக்குள் நாய் குரைத்துக் கொண்டிருந்தது. விடாமல் குரைத்தது. மிருக வைத்தியரின் உத்தர வாதம் சரியானதுதான். எண்ணியபடியே கோடிப்பக்கம் போய்ப்பார்த்தேன். அது நாயல்ல மனைவி”

✦ ✦ ✦ ✦

பேருந்தின் வேகத்துடன் ஆரம்பித்த நாள் வேகமாகவே நகர்ந்தது. இருமல் வைத்தியரைச் சந்தித்து மனைவிக்கு நல்ல மருந்து வாங்கியாயிற்று. அதே போல மிருக வைத்தியரைச் சந்தித்து வீமாவுக்கும் நல்ல மருந்து வாங்கியாச்சுது. இரண்டு வேளை மருந்துடன் இருவரும் இயல்பு நிலைக்குத் திரும்பி விடுவர் என்பது மருத்துவர்களின் பரிந்துரை. நாய் வைத்தியர் நாராயண பிள்ளை தனது மருந்துக்கு உத்தரவாதமும் அளித்து அள்ளை கொள்ளையாகப் பணத்தையும் பிடுங்கியெடுத்தார். மனிசரின்ரை நோயை விட மிருகங்களுக்கு மருந்து எடுக்கிறதுக்கு அதிக பணம் இறைக்கவேண்டியிருந்தது.

எவ்வாறாயினும் போன காரியங்கள் இரண்டும் நிறைவு. இனி வீடுபோய்ச் சேர வேண்டியதுதான். பஸ்ஸில் ஏறியாயிற்று. பயணிகள் சற்று அதிகம் தான். இதையெல்லாம் பார்க்க முடியுமா? “எட என்ன சோக்கான பழைய பாட்டு” பஸ்சிஸ் ஏறியதும் மூளைக்குப் புத்துணர்ச்சி கிடைத்தது. சௌந்தரராஜன், சுசீலா, கோவிந்தராஜன் எண்டு அசல் பழைய பாட்டுகள். இதுகளைக் கேட்டு எவ்வளவு காலமாப் போச்சுது. என்னை மறந்து ரசித்துக் கொண்டிருந்தேன்.


“எல்லாம் சரி நான் வாங்கிக் கொண்டு போற மருந்துகள் இரண்டுமே 'பாணி' மருந்துகள் தான். ஒரு போத்திலுக்குப் பச்சை மூடி. மற்றதுக்குச் சிவப்பு மூடி. இப்ப பிரச்சினை என்ன வெண்டால், மனிசியின்ரை மருந்து எந்தப் போத்தல்? நாய் மருந்து எது? வைத்தியர்கள் சொல்லித் தந்தது எதுவும் ஞாபகத்தில் நிக்காமல் தொலைந்து போனது. சிவப்பு மூடி தான் இருமல் மருந்து... இல்லையில்லை பச்சை மூடி” சந்தேகத்துக்கு மத்தியில் ஒரு தெளிவு.

“கொண்டு வாருங்கோப்பா மருந்தை”

பஸ்சால் இறங்கும்போதே படலையடியில் நின்று மருந்துப் போத்தலைப் பறித்தெடுத்தால் மனைவி. அவளுடைய நோயின் வலி அவளுக்குத்தானே புரியும். அது தான் அவள் அவசரப்பட்டாள். இருந்தும் நான் எல்லாவற்றையும் விளக்கமாகக் கூறி, மருந்துப் போத்தல்களை அவளிடம் ஒப்படைத்தேன். எப்பிடியும் நாளைக்குக் காலமை மனிசின்ர இருமல் இல்லாமல் போய்விடும். அப்பிடித்தான் வைத்தியரும் சொன்னவர். பயணக் களைப்பில் அன்று நல்ல உறக்கம்.

நள்ளிரவு 12 மணியிருக்கும்.

வீட்டுக் கோடிக்குள் நாய் குரைத்துக் கொண்டிருந்தது. விடாமல் குரைத்தது. மிருக வைத்தியரின் உத்தரவாதம் சரியானதுதான். எண்ணியபடியே கோடிப்பக்கம் போய்ப்பார்த்தேன். அது நாயல்ல! மனைவி மங்களேஸ்வரி! ஓடியோடிக் குரைத்துக் கொண்டிருந்தாள். முற்றத்து மாமரத்தின் கீழ் வீமா அதே சோம்பலுடன் என்னைப் பரிதாபமாகப் பார்த்தது. எனக்குத் தலை சுற்றியது. எனது மறதியால் வந்த வினையை முழுவியளத்துக்கு வந்த முருகுப் பிள்ளை மீது போடுவதை விட எனக்கு வேறு என்ன வழி? ■



65

# சிறைக்கதவில் எத்தனை கம்பிகள்

தாஸ் மாஸ்ரர்

"நீ என்ன நினைத்தாய்?
மரியாதையாக நடக்காவிட்டால் அதற்கான ஏற்பாடுகளைச் சிறை அத்தியட்சகர் ஊடாகச் செய்கின்றேன்" என்று அவருக்குக் கடுமையாகப் பேசினேன். சிறைச்சசாலை அத்தியட்சகரைச் சந்திக்க வேண்டும், அதற்கான ஏற்பாடுகளைச் செய்து தாருங்கள் என்று பொறுப்பபாக இருந்த அதிகாரியிடம் கூறினேன். நடந்த சம்பவம் பற்றி அவருக்கு எதுவும் தெரியாதிருந்தது. அவர் விவரத்தை முதலில் கேட்டு அறிந்து கொண்டார். பின்னர் இதைப் பெரிதுபடுத்த வேண்டாமென என்னிடம் கேட்டுக் கொண்டார். "தமிழர் எதுவும் பேசாமல் இருப்பதைத் தான் எல்லோரும் விரும்புகிறீர்கள். அப்படி எல்லா விடயத்திலும் இருக்க முடியாது" என்று நான் கூறினேன். என்னுடன் பிரச்சினை யில் ஈடுபட்ட குறித்த அதிகாரியை, அந்த நேரம் சேவையில் இருந்த எல்லா அதிகாரிகளும் கடிந்து கொண்டார்கள்.

பொறுப்பதிகாரியாக இருந்தவர் பொதுவாக எல்லாக் கைதிகளிடமும் சுமூகமான உறவை வைத்திருப்பவர். அவர் நீண்ட நேரம் என்னுடன் உரையாற்றினார். தனக்காக இந்த விடயத்தைக் கைவிடுமாறும் இவ்வாறான விடயங்கள் இனிமேல் நடைபெறாத வகையில் பார்த்துக் கொள்வதாகவும் வினயமாகக் கேட்டுக் கொண்டார்.

இந்தச் சம்பவம் சிங்கள அச்சு கைதிகள் சிலருக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அவர்கள் விடயத்தில் இவ்வாறு ஒரு சம்பவம் நடந்து சிறைச்சாலை ஊழியருடன் முரண்பட்டால், சிறைச்சாலை ஊழியர்கள் மிருகத்தனமாக அச்சுக் கைதிகளைத் தாக்குவார்கள். நாம் அரசியல் கைதிகளாக இருப்பதாலும் குற்றம் தீர்க்கப்படாது தடுப்புக் காவலில் இருப்பதாலும் எமக்கு ஏதாவது பாதிப்பு ஏற்பட்டால் சிறைச்சாலை நிர்வாகம் பொறுப்புக் கூற வேண்டி இருப்பதாலும் எங்கள் விடயத்தில் சற்று மென்போக்கைக் கடைப்பிடித்தது சிறைச்சாலை நிர்வாகம். இந்தச் சம்பவத்தின் பின்னர் கருணாரத்ன என்ற அந்தச் சிறைச்சாலை ஊழியர் என்னைக் காணும் இடங்களில் தலையை மறுபக்கம் திருப்பியவாறு போய்விடுவார். பின்னாள்களில், அவரைக் காணும்போதெல்லாம் அங்குள்ள நண்பர்கள் "உன்ரை ஆள் வாறார்" என்று தான் கூறுவார்கள். காலப்போக்கில் தமிழ் அரசியல் கைதிகளுடன் அவர் மிகவும் பக்குவமாக நடந்து கொண்டதாகப் பின்னர் அறிந்து கொண்டேன்.

✿✿✿✿✿✿

16.8.2001ஆம் ஆண்டு அன்று நீதியமைச்சர் பேட்டிவீரக்கோன் போகம்பரைச் சிறைச்சாலைக்கு வருகை தந்தார். எனினும் 'டி' சிறப்புப் பகுதிக்கு அவர் வரவில்லை. கைதிகளை அறைகளுக்குள் பூட்டிய பின்பு பிரமுகர்கள் வெளியில் நின்றபடி அவர்களைப் பார்த்துக் கதைப்பது உண்டு. இவரது வருகையின்போது அவ்வாறும் நடக்கவில்லை. அவர் எங்களைச் சந்திக்கும்போது கண்டி மேல் நீதிமன்றில் நீண்ட தவணை போடப்படுகின்றது, அந்தத் தவணைக் காலத்தை குறைத்து எமது வழக்குகளைத் துரிதப்படுத்துவதற்கு ஆவண செய்யுமாறு கேட்பதற்கு எண்ணியிருந்தோம். அது சாத்தியப்படவில்லை. கைதி என்றால் 'உரிமை அற்றவன்' என்பதுதான் சிறைச்சாலைத் தரப்பினரின் அர்த்தம்.

17.8.2001ஆம் ஆண்டு அன்று பகல் பொழுதில் புத்தகம் எடுப்பவர்களை நூல் நிலையத்துக்கு வருமாறு கூப்பிட்டார்கள். எங்களில் 5 பேர் வரை போனோம். அங்கிருந்த நலன்புரி அதிகாரி எங்களைக் கண்டதும் புத்தகம் கொடுக்கும் ஊழியரிடம் 'கொட்டின்ர பொத் தென்ட பா' (புலிகளுக்குப் புத்தகம் கொடுக்க வேண்டாம்) என்று கூறினார். எங்கள் அனைவருக்கும் ஆத்திரம் தான் வந்தது. எங்களுள் ஒரு நண்பர் எங்களுக்குச் சொன்னர் "இது தான் நான் இந்த நாயளிட்ட வாறதில்லை, எங்களுக்கு முதல் நாடு தான் வேண்டும்" என்று... பூசாவில் இருந்து போகாம்பரைச் சிறைக்குக் கொண்டுவரப்படுகின்ற கைதிகள் திடீரென மறுபடியும் பூசாவுக்குக் கொண்டு செல்லப்படுவார்கள். புத்தகத்தையும் கொண்டு போய் விடுவார்கள். பூசாவில் இருந்து எப்போதாவது சிறைச்சாலை பஸ் போகாம்பரைக்கு வருவது உண்டு. அல்லது போகம்பரையில் இருந்து எப்போதாவது கைதிகளைப் பூசாவுக்கு அனுப்புவார்கள்.

அந்த நேரத்தில் புத்தகத்தை வாங்கி எடுப்பது அவ்வளவு இலகுவான விடயம் அல்ல. கைதியின் மன நிலையை உரியவாறு பேண வேண்டும் என்பதற்காகவே சிறைச்சாலை நிர்வாகம் புத்தகங்கள், மற்றும் விளையாட்டுப் பொருள்களை வழங்கி இருக்கிறது. ஆனாலும் பல சிறைகளில் அவற்றை நடைமுறைச் சாத்தியமாக்குவது பிரச்சினையாக இருக்கும். தற்போது இந்த நலன்புரி அதிகாரி இவ்வாறு கூறியதை, கட்டுநாயக்கா வானூர்தி நிலையத் தாக்குதலின் எதிரொலியாகவே நான் கருதுகிறேன்.

கைதிகளுக்குப் புத்தகம் வழங்கும் ஊழியர் புத்தகம் வழங்க மறுத்தால் கைதிகள் நலன்புரி அதிகாரிக்கு அறிவித்து அவர் மூலம் பெற்றுக் கொள்வது சிறைச்சாலை நடைமுறை. அந்த அதிகாரியின் கடமையே கைதிகளின் தேவைகளைக் கவனிப்பது தான். ஆனால் போகம்பரையில் அந்த அதிகாரியும் அதற்குத் தடையாக இருந்தார் என்பதுதான வினோதமானது.

✿✿✿✿✿✿✿

நாம் மீண்டும் 'டி' சிறப்புப் பகுதிக்கு வந்த போது அங்கு அச்சு கைதியாக இருந்த இராணுவ மேஜர் ஒருவர், "ஏன் புத்தகம் எடுக்க வில்லையா?" என்று கேட்டார். நான் நடந்ததைக் கூறினேன். "சிறைச்சாலை ஊழியர்களுக்குக் கைதிகளிடம் எவ்வாறு பழக வேண்டும் என்று எந்தப் பயிற்சியும் வழங்கப்படுவதில்லை. நாங்கள் ஓரிருவர் சேர்ந்து இந்த நிறுவனத்தை மாற்றி அமைக்க முடியாது இவர்களின் நடவடிக்கைகளால் தான்; கைதிகளின் தொகை அதிகரித்துச் செல்கிறது. குறைவதாக இல்லை' என்றார்.

நான் 2002ஆம் ஆண்டு மீண்டும் ஒரு தடவை போகம்பரைக்குக் கொண்டு செல்லப்பட்ட போது புத்தகம் வழங்கும் முறையை மாற்றி இருந்தார்கள். நிலந்த என்ற ஒரு கைதி 'டி' சிறப்புப் பகுதிக்குப் பொதுவான ஒரு காம்பிறா பாட்டியாக இருந்தார்.

அவர் பெரிய கடதாசிப் பெட்டிகளில் புத்த கங்களை அள்ளிக் கொண்டு வருவார். தமிழ்ப் புத்தகங்கள் பற்றி அவருக்கு எதுவும் தெரியாது. கையில் பட்டது சில புத்தகங்களை அள்ளி வருவார். புத்தகம் தேவையானவர்கள் அவரது அறையில் போய் வாங்க வேண்டும். சில வேளைக்ளில் தேவாரம், சமயம் போன்ற புத்தகங்களே அவரால் அதிகம் எடுத்து வரப்பட்டிருக்கும்.

(தொடரும்)

## மாற்றம்

தினமும் மாறும் உலகமிது
பாய்ந்து ஓடுகிறது நதி
சுழன்று கொண்டிருக்கிறது பூமி
மாற்றங்களுடன் அமைகின்றன பருவங்கள்
நாமும் மாற்றங்கள் காண விளைகிறோம்



சிவரம்யா

## உனக்காக...



உன் கூந்தல் சூட ரோஜா மலர்கிறது
உன் வதனம் காண நிலா பொழிகிறது
உன் ஆடை அசைய காற்று வீசுகிறது
உன் உள்ளம் மகிழ பட்சி இசைக்கிறது
எல்லாம் உனக்காக அன்பே உனக்கா...



# தென்கிழக்கு திசையில் இருந்து....

■ அனார்கலி

## உசார் உசார்...!

அரச தலைவர் தேர்தல் தொடர்பான விவகாரம் சூடுபிடித்துள்ள நிலையில் தென்கிழக்கிலுள்ள முஸ்லிம் அமைப்புக்கள், கட்சிகள் உஷாரடைந்துள்ளன. குறிப்பாக முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிகளுக்குச் சிம்மசொப்பனமாக முன்னணிக்கு வந்துள்ள ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு தேர்தல் தொடர்பிலான பேச்சுக்களைத் தற்சமயம் முக்கிய கட்சிகளுடன் ஆரம்பித்துள்ளது.

பொதுமக்கள் முன்னணியின் முக்கியஸ்தவர் பசில் ராஜபக்சவுடன் அண்மையில் முதற்கட்டப் பேச்சு நடத்திய ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு இந்த வாரம் பொதுமக்கள் முன்னணியுடன் பேச்சு நடத்தவிருக்கின்றது.

முஸ்லிம்களின் நலன் சார்ந்ததாகவே இத்தகைய பேச்சுக்கள் அமையுமென ஐக்கிய சமாதானக் கூட்ட மைப்பின் செயலர் நாயகம் எம்.ரி.ஹஸனலி தெரிவித்தார்.

மேலும் சில முஸ்லிம் அமைப்புகளும் பேச்சு எனும் போர்வையில் பேரம் பேசும் களத்தில் நிற்பதாகவும் தகவல்.

**தேர்தல் திருவிழா அமர்க்களமாகட்டும்.**



## ஒரே தினத்தில் பல லட்சங்கள்

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப்பிரதேசத்தைச்சேர்ந்தபல கிராமங்களில் கடந்த வாரம் அமோக மீன்பிடி இடம்பெற்றது. குறிப்பாகக்ரைவலைகடற்றொழிலாளர்களுக்கு ஒரே தினத்தில் லட்சங்கள் பெறுமதியான கடல் மீன்பிடி இடம்பெற்றமைகுறிப்பிடத்தக்கது. காரைதீவு, நிந்தவூர், கல்முனை,நீலவணைப்பிரதேசகரைவலை மீன்பிடியா ளர்க ளுக்கே இவ்வாறு ஒரே தினத்தில் பல லட்சம் ரூபாய்கள் பெறுமதியான 'பாரைக்குட்டி' எனப்படும் கடல் மீன்கள் பிடிபட்டன.

காரைதீவில் இவ்வாறு அமோக மீன்பிடிஇடம்பெற்றதினம்நிந்தவூரில்ஒருகரைவலைத்தோணிக்கே 10 லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடிபட்டதாகத்தெரிவிக்கப்படுகின்றது.

**அதிஷ்டம் அதிஷ்டம்
கடல் வங்கி திறந்தால்
இலட்சங்கள் தான் புரளும்.**

## வன்முறையற்ற தொடர்பாடல்

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையுடன் சொண்ட் நிறுவனம் அம்பாறை மாவட்டத்தில் 'வன்முறையற்ற தொடர்பாடல்' எனும் தலைப்பிலான இருநாள் பயிற்சி நெறி ஒன்றை நடத்தியது.

தேசிய சமாதானப் பேரவையின் சமயங்களுக்கூடான நல்லிணக்கம் எனும் செயற்றிட்டத்தின் கீழான இந்தப் பயிற்சி நெறியில் பேரவையின் அம்பாறை மாவட்டசர்வமதக்குழுப்பிரதிநிதிகள்உட்படப் உப குழுக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். அக்கரைப்பற்று மெங்கோ கார்டன் விடுதியில் இந்த இரண்டு நாள் பயிற்சிநெறிநடைபெற்றது.

**மலரட்டும் சமாதானம்!**



## கண்ணகி கலை இலக்கிய விழா

கண்ணகி கலை, இலக்கியக் கூடலின் ஒன்பதாவது வருட கண்ணகி கலை, இலக்கிய விழா இந்த முறை முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளார்பிறந்த காரைதீவில் நடைபெறவிருக்கின்றது.

கண்ணகி கலை இலக்கியக் கூடல் தலைவர் செங்கதிரோன் த.கோபாலகிருஷ்ணன் தலைமையில் விழாவுக்கான ஏற்பாட்டுக்கூட்டம், காரைதீவு கண்ணகி அம்மன் ஆலயமுன்றிலில் நடைபெற்றது. இதன்போது மேற்படி விழாக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற கல்வி அதிகாரி வெ. ஜெயநாதன் தெரிவு செய்யப்பட்டதுடன் விழாதொடர்பானதிட்டமிடல்களும் இடம்பெற்றன. எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 18,19,20ஆம் திகதிகளில் விழாவை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**தமிழ் மணம் கமழட்டும்**


## 'உவெஸ்லி–136'

கல்முனை மாநகருக்குப் பெருமை சேர்க்கும் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையின் (தேசிய பாடசாலை) 136ஆவது நிறுவுநர்தினப்பெருவிழா எதிர்வரும் 11ஆம் திகதி கோலாகலமாக நடைபெறவிருக்கின்றது.

பாடசாலை அதிபர் வீ.பிரபாகரன் தலைமையில் பாடசாலை நல்லதம்பி மண்டபத்தில் இந்தப் பெருவிழா நடைபெறவிருக்கின்றது.

நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின்திகாமடுள்ளமாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் முதன்மை அதிதியாகக் கலந்து கொள்வார். தென்கிழக்கில்பழம்பெரும்வரலாற்றுச்சாதனைகள் மிக்க இந்தப் பாடசாலையின்மேற்படிநிகழ்வையொட்டி 'உவெஸ்லி -136' எனும் சிறப்பு மலரும் வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் உட்படப் பல தமிழ் முஸ்லிம் பிரமுகர்கள் கற்ற பாடசாலை இது.

**புகழ் ஓங்கட்டும்**




## கொதிக்கிறார் அவர்....

கல்முனைவடக்கு உபபிரதேசசெயலகத்தரமுயர்த்தல் விடயம்தொடர்ந்துஇழுத்தடிக்கப்படுமானால்மக்களைத் திரட்டிக் காத்திரமான போராட்டக் களத்தில் குதிக்கப்போவதாக அகிலஇலங்கைஅரச பொது ஊயிர் சங்கத் தலைவர்எஸ்.லோகநாதன் தெரிவித்துள்ளார். வழங்கியவாக்குறுதிக்கானகாலஎல்லைஇறுதிக்கட்டத்தில் உள்ளதாகவும் இந்தத் தரமுயர்த்தல் விடயத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புஇழுத்தடிக்குமானால்இதற்கு எதிராகக் கல்முனை வாழ் தமிழ் மக்கள் கொதித்தெழுவரெனவும் அவர் எச்சரித்துள்ளார்.




**எத்தனை காலம்தான் ஏமாற்றுவார்
இந்த நாட்டிலே இந்த நாட்டிலே !**




'மௌனகுரு' படத்தின் மூலம் திரும்பிப் பார்க்க வைத்த இயக்குநர் சாந்தகுமார், அந்தப் படம் வெளியாகிக் கிட்டத்தட்ட 8 ஆண்டுகளுக்குப் பிறகு 'மகாமுனி'யுடன் களமிறங்கியுள்ளார்.

**கதை**

இந்தியாவின் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில் வசிக்கும் மகாதேவன் (ஆர்யா) வாகன ஓட்டுநராக வேலை செய்கிறார். உள்ளூர் அரசியல்வாதி முத்துராஜ் (இளவரசு) சொல்லும் சின்னச் சின்ன வேலைகளைச் சரியாகச் செய்து முடிக்கிறார். இதனால் குரு நாராயணன் (அருள்தாஸ்), ஆதி நாராயணன் (மதன் குமார்) ஆகிய சகோதரர்களின் பகைக்கு ஆளாகிறார். பகை பழிவாங்கும் படலமாக உருவெடுக்க, முதுகில் கத்திக்குத்துடன் உயிருக்குப் போராடும் ஆர்யா சிகிச்சைகாக மருத்துவரைச் சந்திக்கிறார்.

இந்தியரின் ஈரோடு மாவட்டத்தில் ஒரு கிராமத்தில் அம்மா ரோகிணியுடன் வசிக்கிறார் முனிராஜ் (மற்றைய ஆர்யா). அவருக்குப் பிரம்மச்சரியத்தைக் கடைபிடிப்பதே முதன்மைக் குறிக்கோள். கிராமத்துக்குக் குழந்தைகளுக்கு கல்வி கற்றுக் கொடுப்பது, உலகத் திரைப்படங்களைத் திரையிடுவது என்று அவர்கள் வளர்ச்சிக்கு வழிவகுக்கிறார். இவரைப் பார்த்து ஆச்சரியப்படும் தீபா (மஹிமா நம்பியார்) முனிராஜுடன் பழகுகிறார். சாதிப் பாகுபாடு பார்க்கும் தீபாவின் தந்தை ஜெயராமன் (ஜெயப்பிரகாஷ்) முனிராஜைக் கொலை செய்வதற்குத் திட்டமிடுகிறார். மகாதேவன், முனிராஜ் என்ற இருவரையும் கொலை செய்வதற்கு இருவேறு விதமான குழுவினர் காத்திருக்கின்றனர். இந்த நிலையில் மகாதேவன், முனிராஜின் நிலை என்ன, இவர்கள் இருவருக்கும் தொடர்பு உள்ளதா, மகாதேவனின் குடும்பப் பின்னணி என்ன, மகாதேவன் மனம் மாறினாரா ஆகிய கேள்விகளுக்குப் பதில் சொல்கிறது மீதிக் கதை.



**பாத்திரங்கள்**

இதுவரை ஆர்யா நடித்த படங்களில் நடிப்பில் மிகச் சிறந்த தரம் என்று 'மகாமுனி'யைச் சொல்லலாம். இரட்டைக் கதாபாத்திரங்களிலும் அவர் சிறப்பாக நடித்துள்ளார். மகாதேவன், முனிராஜ் ஆகிய இருவருமே புத்திசாலிகள் என்பது பொதுவான பண்பாக இருந்தாலும் முரட்டுக் கோபம், தன்னைக் கொல்ல நினைப்பவனை முந்தும் விவேகம், அரசியல்வாதியின் சொல்லுக்குக் கீழ்பணிதல், யாருக்கும் அஞ்சாமல் எதிர்த்து நிற்றல் ஆகியவற்றில் மகாதேவனாக நல்ல நடிப்பை வெளிப்படுத்துகிறார். மனைவி, குழந்தையின் நிலை கருதி இளவரசுவிடம் கெஞ்சும் இடத்திலும் துரோகம் செய்ததை உணர்ந்து பழிக்குப் பழி வாங்க ஆக்ரோஷத்தை வெளிப்படுத்தும்போதும் மனித உணர்வுகளைப் பக்குவமாகக் கடத்துகிறார்.

நிதானம், பொறுமை, அமைதி, அடிதடி என்றாலே என்னவென்று தெரியாத அப்பாவித்தனம், அருகில் இருப்பவர்களின் வஞ்சக மனம் புரியாத உள்ளம், பிறருக்கு உதவும் குணம், வீரம், சாதி குறித்து மாணவர்களுக்குப் புரியவைப்பது என்று முனிராஜ் கதாபாத்திரத்திலும் ஆர்யா வார்ப்பு. அவர் செய்யும் யோகாசனங்களும் நல்வழிப்படுத்துவதாகவே உள்ளன. இந்துஜா, மஹிமா நம்பியாரின் கதாபாத்திரங்கள் முழுமையடையவில்லை. பதற்றம், பயம், தவிப்பு, இயலாமை ஆகியவற்றை இந்துஜா நன்கு வெளிப்படுத்தியுள்ளார். தந்தையாக இருந்தாலும் தவறைத் தட்டிக்கேட்கும் துணிச்சலான கதாபாத்திரத்தில் மஹிமா நன்றாக நடித்துள்ளார். ஆனால், இருவரின் கதாபாத்தி ரங்களும் செயற்கையாகவே உள்ளன. பொலிஸ் அதிகாரியாக நடித்த ஜி.எம். சுந்தர், திருமூர்த்தியாக நடித்த 'சுப்பர் குட்' சுப்பிர மணி, கோபாலாக நடித்த யோகி ஆகியோர் சிறப்பாக நடித்துள்ளனர். இளவரசு பாத்திரம் உணர்ந்து நடித்துள்ளார். ரோகிணி, பாலாசிங், அருள்தாஸ், மதன்குமார், காளி வெங்கட், தீபா ஆகியோர் சில காட்சிகளில் வந்துபோனாலும் தடம் பதிக்கிறார்கள்.

**இசை ஒளிப்பதிவு, காட்சித் தொகுப்பு**

அருள் பத்மநாபனின் ஒளிப்பதிவும் தமனின் இசையும் படத்துக்குக் கூடுதல் பலம் சேர்க்கின்றன. சாபு ஜோசப்பின் படத்தொகுப்பில் நேர்த்தி பளிச்சிடுகிறது. பிரகாஷின் சண்டைக் காட்சிகள் யதார்த்தமாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

> மனித வாழ்வின் முரண்களைப் பேசியிருக்கும் அவர் அதைப் பதிவாக மட்டுமே விட்டுச் சென்றதில் கொஞ்சம் சறுக்கியுள்ளார்.

**பலம் - பலவீனம்**

மனித மனத்தில் இருக்கும் பேராசை, போட்டி, பொறாமை, வஞ்சம் ஆகிய குணங்களைக் கதாபாத்திரங்களின் வழியாகச் சொன்ன விதத்தில் முத்திரை பதிக்கிறார் இயக்குநர். மனித வாழ்வின் முரண்களைப் பேசியிருக்கும் அவர் அதைப் பதிவாக மட்டுமே விட்டுச் சென்றதில் கொஞ்சம் சறுக்கியுள்ளார். கருவேல மரங்களை அழிப்பதன் அவசியம், பிளாஸ்ரிக் ஒழிப்பு, சாதிப் பாகுபாடு, ஆங்கில மொழியில் படிக்கும் நிலை, போராட்டத்தின் போது பிரியாணிப் பாத்திரத்தைத் தூக்கிச் செல்வது, கம்பராமாயணம், பெரிய புராணம் யார் எழுதியது என்பது தெரியாமல் அரசியலில் நீடிக்க என்ன வழி என்று சமகால அரசியலை இயக்குநர் சாந்தகுமார் மிக இலாவகமாகத் திரைக்கதையில் சேர்த்திருக்கும் விதம் பாராட்டுக்குரியது. வசனங்கள் வழியாகவும் இயக்குநர் படத்தின் ஆதாரத்தை உணர்த்துகிறார். ஆனால், இதை இயக்குநர் சாந்தகுமார் கொஞ்சம் சுற்றிவளைத்துச் சொல்லியிருக்கிறார். நிதான கதியில் செல்லும் திரைக்கதை அதே நிலையில் தொடர்கிறது. இரட்டைக் கதாபாத்திரங்களின் எழுச்சி வீழ்ச்சி குறித்து போதுமான அளவில் சொல்லப்படவில்லை. அதுவே படத்தின் பாதகமான அம்சம்.

---

# 'ஜோஜோ றப்பிற்'

ஜேர்மனியச் சிறுவன் ஒருவனின் பார்வையிலிருந்து ஹிட்லரையும் உலகப் போரையும் நகைச்சுவையுடன் ஆராய்வதான வித்தியாசக் கதையுடன் 'ஜோஜோ றப்பிற்' என்ற இந்தத் திரைப்படம் வெளியாக இருக்கிறது.

**கதை**


இரண்டாம் உலகப்போர்க் காலத்து ஜேர்மானிய தேசத்தில் தந்தையை இழந்த ஜோஜோ என்ற பத்து வயதுச் சிறுவனுக்கு ஹிட்லர் என்றால் அதிக விருப்பம். தனது நினைவுகளில் மங்கியிருக்கும் அப்பா மீதும் அவன் அளவற்ற பிரியம் வைத்திருக்கிறான். இதர ஜேர்மன் குடிமக்களைப் போலவே சிறுவனும் கண்மூடித்தனமாகத் தேசப்பித்துப் பிடித்து அலைகிறான். ஆனால், அவனது அம்மாவோ நாசி எதிர்ப்புப் பெண்மணி. தனது தாய், வீட்டின் மறைவில் யூதச் சிறுமி ஒருத்திக்கு இரகசியமாக அடைக்கலம் வழங்கியிருப்பது சிறுவ னுக்குப் புரியாத புதிராக இருக்கிறது. இவற்றுடன் தனக்கு எழும் அன்றாடச் சங்கடங்கள் பலவற்றிலிருந்தும் மீள்வதற்காக ஒரு கற்பனைத் தோழனைச் சிறுவன் வரித்துக் கொள்கிறான்.

இழந்த தந்தையையும் ஆதர்சமான ஹிட்லரையும் குழைத்த கலவையாக அந்த நண்பன் உருவாகிறான். மிதமிஞ்சிய தேசப்பற்றுக்கு ஆளாகும் சிறுவன் ஜோஜோ, தொடர்ந்து மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் அவற்றுக்குத் துணையாகும் நகைச்சுவைக் ஹிட்லருமே 'ஜோஜோ றப்பிற்' திரைப்படத்தின் மீதிக் கதை.



**பாத்திரங்கள்**

நியூசிலாந்து பெல்ஜிய நாவலாசிரியரான கிறிஸ்டின் லாலென் எழுதிய 'கேஜிங் ஸ்கைஸ்' என்ற நாவலைத் தழுவி, 'ஜோஜோ றப்பிற்' படத்துக்கான திரைக்கதையை இயக்குநர் டைகா வைடிடி உருவாக்கியுள்ளார். அடிப்படையில் நகைச்சுவை நடிகரான வைடிடி, திரைப் படத்தில் இடம்பெறும் நையாண்டி தோற்றத்துக்கான ஹிட்லர் கதாபாத்திரத்தையும் ஏற்றுள்ளார். சிறுவனாக ரோமன் கிரிஃபின் டேவிஸும் அவனது தாயாக ஸ்கார்லெட் ஜோஹன்சனும் நடித்துள்ளனர். நேசத்தைப் புறக்கணித்து வெறுப்பை விதைக்கும் அரச இயந்தி ரத்தின் கண்ணிகள், அதன்படி அலைபாயும் குடிமக்கள், அவர்களின் போர்வெறி உள்ளிட்டவற்றைச் சிறுவனின் பார்வையிலிருந்து கிண்டல் செய்யவிருக்கும் இந்தப்படம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 18ஆம் திகதியன்று வெளியாகும் என்ற அறிவிக்கப்பட்டுள்ளது.




**கதை**

கட்டிடப் பொறியாளர் ஆதிக்கு (வைபவ்) மாலைக்கண் நோய். மாலை 6மணிக்க மெல் கண் தெரியாது. ஆறு மணி என்றால் எப்பாடுபட்டாவது வீட்டுக்கு வந்து சேர்ந்துவிடுவார். 5.30 மணிக்கே அதற்கான ஆயத்தப் பணிகளில் இறங்கிவிடு வார். அப்படி ஒரு மாலை வேளையில் கடற்கரையோரத்தில் வண்டியை நிறுத்தி விட்டுக் காற்று வாங்குகிறார். அந்த நேரத்தில் ஆளும் கட்சி அரசியல்வாதிக்கு (ஆர்.என்.ஆர். மனோகர்) எதிரான போராட்டம் கடற்கரையில் நடக்கிறது. மாணவிக ளுக்குப் பாலியல் வலை வீசி, அவர்களைத் தவறாக வழிநடத்தி, அரசியல்வாதிக்கு அடிபணியவைத்த பேராசிரியை விமலா ராணியைக் கைது செய்யக் கோரிய போராட்டம் அது. அங்கு வைபவ்வும் இருக்க, அவர்தான் போராட்டத்தின் தலைவன் என்று அரசியல்வாதியின் ஆள்கள் தவறாகப் புரிந்துகொள்கின்றனர்.


இதனால் பேராசிரியை விமலா ராணி கைது செய்யப்படுகிறார். எம்.எல்.ஏ சிறை செல்ல நேரிடுகிறது. இதனிடையே அந்தப் போராட்டத்தை தொலைக்காட்சியில் நேரலை செய்யும் செய்தியாளர் கிருத்திகா (பல்லக் லால்வாணி) வைபவ்வை ஒளிப்படம் எடுத்துப் போராட்டத் தலைவன் என்பதை மையமாக்கிச் செய்தியாக்குகிறார். இதனால் மிரட்டலுக்கு ஆளாகும் வைபவ், நேரடியாக தொலைக்காட்சி நிறுவனத்துக்குச் சென்று பிரச்சினையில் ஈடுபடுகையில் பல்லக் லால்வாணியைக் கண்டதும் காதல் வயப்படுகிறார். தனக்கு இருக்கும் பாதிப்பை மறைத்துக் காதலிக்கிறார். பின்னர் அரசியல்வாதியின் பழிவாங்கும் படலம் தொடர்கிறது. அதிலிருந்து வைபவ் தப்பித்தாரா, மாலைக்கண் நோய்ப் பாதிப்பை மறைத்துக் காதலியைக் கரம் பிடித்தாரா போன்ற கேள்விகளுக்கு நகைச்சுவையும், கேலியும், கிண்டலுமாகப் பதில் சொல்கிறது மீதிக்கதை.

> **வைபவ்வுக்கு மாலைக்கண் பிரச்சினை இருப்பதை வில்லன் குழு கடைசியில் தெரிந்து கொள்வது சிரிப்பு ரகம்**

**பாத்திரங்கள்**

அலட்டிக்கொள்ளாத நடிப்பு, சுய கலாய்ப்பு, தவறுகளைச் சரிசெய்ய முயல்வது எனப் படம் முழுதும் யதார்த்தமாக நடித்துள்ளார் வைபவ். பாவம், பரிதாபம் வராத அளவுக்கு இயல்பான இளைஞனைக் கண்முன் நிறுத்துகிறார். பல்லக் லால்வாணி வைபவ்வின் காதலியாகவும், அன்பை வெளிப்படுத்தும் சிறந்த தோழியாகவும் நல்ல நடிப்பை வழங்கியுள்ளார். நேசத்தை அவர் உணர்த்தும் விதம் அழகு.

சதீஷ் ஆங்காங்கே சிரிக்க வைக்கிறார். அவரைக் காட்டிலும் ராதாரவியும் இளவரசுவும் சிரிக்கச் செய்கிறார்கள். ஏ.ஜே.வைக் கலாய்க்கும் இடத்தில் இளவரசு தனித்து நிற்கிறார். ஸ்ரீரஞ்சனி, ராமர், ஆர்.என்.ஆர். மனோகரின் தம்பியாக நடித்த ஏ.ஜே.ஆகியோரும் நல்ல நடிப்பை வழங்கியுள்ளனர்.



**ஒளிப்பதிவு, இசை, காட்சித்தொகுப்பு**

பி.ஜி.முத்தையாவின் ஒளிப்பதிவு படத்துக்குப் பலம் சேர்க்கிறது. ஜிப்ரானின் பின்னணி இசை எடுபடுகிறது. பாடல்கள் மனதில் நிற்கவில்லை. காட்சித்தொகுப்பில் ஜோமின் இரண்டாம் பாதியின் இழுவையைக் கொஞ்சம் நீக்கிச் சரிசெய்திருக்கலாம்.

**பலம் பலவீனம்**

நகைச்சுவை என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டு இயக்குநர் சாச்சி இந்தப் படத்தை இயக்கியுள்ளார். அதில் ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளார். கடற்கரையில் நடக்கும் போராட்டத்தைக் காட்சிப்படுத்திய விதம் அபத்தமாகவே இருந்தது. மாலைக்கண் நோயால் பாதிக்கப்பட்ட வைபவ், அதை சரிசெய்துகொள்ள எந்த முயற்சியையும் மேற்கொள்ளாதது ஏன், அதுகுறித்து அவரது பெற்றோரோ, காதலியோ, நண்பர்களோ கவலைப்படாமல் இருப்பது நம்பும்படியாக இல்லை. ஆறு மணிக்கு மேல் மிகப்பெரிய அளவில் எந்தப் பிரச்சினையையும் வைபவ் சந்திக்காதது ஆச்சரியம். வைபவ்வுக்கு மாலைக்கண் பிரச்சினை இருப்பதை வில்லன் குழு கடைசியில் தெரிந்துகொள்வது சிரிப்பு ரகம். கல்லூரி மாணவிகளைப் பாலியல் தேவைக்குப் பயன்படுத்தும் விவகாரம் சமகால விவகாரம். அதை இவ்வாறு படத்தில் அணுகியிருப்பது அதன் தன்மையை நீர்த்துப்போகச் செய்கிறது.

---

## சண்டைகளால் தானோ சமரசம்?

மானியூர் ரட்னேஸ்



அழுக்குகளாக்கப்பட்ட ஆபாசமிக்க
எண்ண வளர்ப்புகளை
எப்படிச் சொல்ல?
மொழிகளால்
வெளிப்படுத்த முடியாத
உத்தரிப்புக்களை
எப்படிச் சித்திரிக்க...?
தேடல்களுக்குள்ளே
முற்றுப்புள்ளியற்ற
தொடர் வாக்கியங்களாய்
இடர்களே இன்னுமின்னும்
எசமானக் கடவுளரின்
எண்ணங்களுக்குள்
வரையறுக்கப்பட்ட எமது
வாழ்வு
ஸ்திரமற்ற உறவுகளோடு
இழி கூலமாய்
இருண்டு போகின்றன நாள்கள்
சுழற்சிப் பரிமாணத்தின்
சுகதுக்கத்தில்
துக்கம் மட்டுமே எமது பக்கம்...
சேதமாக்கப்படும் தேசக் குழிக்குள்
துருப்பிடித்துப் போகும்
துயரங்களைச் சுமந்தபடி
தோல்விகளில் தே(ர)யும்
எமது வாழ்வியல்
தெளிவுகளைத் தேடும் முயற்சியும்
பாழாக்கப்பட்டவையே- எமக்கு
பழக்கப்பட்டவையாக
மனிதர்கள்- சிலர்
மண்டைகளைக் கழற்றிவிட்ட
முண்டங்களாய்
முரசொலிக்கின்றனர் இனியும்
சண்டைகளால் தானாம்-ஒரு
சமரசம்

வ.துசாந்தன்

## பருவான் துயரம் !

மகேஸ்வரன் படைத்த மண் இது
மழலைகள் விளையாடிய மண்
மலர்கள் பூத்த மண்

மனைகள் கட்டவும் மண் பூமியில்
மதில் அமைக்கவும் மண்
மடு நிரப்பவும் மண்

மனிதர்களின் போராட்டம் அப்போ
மண்ணிலே போராட்டம்
மண்ணுக்கான போராட்டம்

மண்டியிடாத் தமிழர்கள் இப்போ
மண்ணுக்கும் அவலம்
மட்டு படுவானிலும் துயரம்...!


# ஹொங்கொங் போராட்டங்களும் தீர்வுகளும்



இரண்டு மாதங்களுக்கு மேலாகிவிட்டன. ஜுன் மாதம் 9ஆம் திகதி அன்று ஹொங்கொங் வீதிகளில் இலட்சக்கணக்கானோர் அணிவகுத்தனர். குற்றவாளிகளைச் சீனாவுக்கு நாடுகடத்த வகைசெய்யும் தீர்மானம் ஒன்றை அரசு முன்மொழிந்திருந்தது. இந்தத் தீர்மானத்தையே மக்கள் பேரணி எதிர்த்தது. ஹொங்கொங் அரசு தீர்மானத்தை நிறுத்தி வைப்பதாக அறிவித்தது. ஆனால், போராட்டக்காரர்கள் பலருக்கும் அந்த உறுதிமொழி மட்டும் போதுமானதாக இல்லை. தீர்மானத்தைத் திரும்பப்பெற வேண்டும், நிர்வாகத் தலைவர் பதவி விலக வேண்டும் என்று பல கோரிக்கைகள் அவர்களுக்குள் இருந்தன. எதிர்பாராத இடங்களில், எதிர்பாராத நேரத்தில் ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்தன. முதன்மை வீதிகளிலும், தொடருந்து நிலையங்களிலும், வானூர்தி நிலையத்திலும் போராட்டக்காரர்கள் பொலிஸாரை எதிர்கொண்டனர். காலம் செல்லச் செல்ல அவர்களது எண்ணிக்கை குறைந்திருந்தது. ஆனால், பலரும் அகிம்சையைக் கீழே போட்டுவிட்டனர்.

**வானூர்தி நிலையத்தில் போராட்டம்**

ஹொங்கொங் வானூர்தி நிலையம் உலகின் பரபரப்பான வானூர்தி நிலையங்களில் ஒன்று. போராட்டக்காரர்கள் வெளிநாட்டுப் பயணிகளின் கவனத்தை ஈர்ப்பதற்காக ஓகஸ்ட் மாதம் 9ஆம் திகதியன்று வானூர்தி நிலையத்தின் வருகை வளாகத்தில் கூடினர். ஆனால், அடுத்த சில தினங்களில் நடந்தவை அவர்களது நோக்கத்துக்கு நேரெதிராக இருந்தன. கோசங்களோடும் பதாகைகளோடும் அமைதி வழியில் தொடங்கிய ஆர்ப்பாட்டம், ஓகஸ்ட் மாதம் 13ஆம் திகதியன்று புறப்பாட்டுப் பயணிகளைத் தடுத்து நிறுத்துவது வரை போனது. ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதியன்று உளவாளிகள் என்று சந்தேகப்பட்ட இரண்டு சீனர்களின் கைகளைக் கட்டித் தாக்கவும் செய்தனர். நூற்றுக்கணக்கான வானூர்திச் சேவைகள் நிறுத்தப்பட்டன. செல்வந்த நாடான ஹொங்கொங்கின் பங்குச் சந்தை சரிந்தது. சட்டத்தின் மாட்சிமை பேணப்படுகிற நகரம் என்கிற பெயருக்குக் களங்கம் நேர்ந்தது.



**தலைமை இல்லாத போராட்டம்**

பிரிட்டிஷ் காலனியாதிக்கத்தின் கீழிருந்த ஹொங்கொங் 1997ஆம் ஆண்டு முதல் சீனாவின் ஒரு மாநிலமாக இயங்கிவருகிறது என்பதை நினைவுபடுத்திக்கொள்ளலாம். சீனாவின் பிற மாநிலங்களைப் போல் அல்லாமல், ஹொங்கொங் சுயாட்சி மிக்க மாநிலம். முதலாளித்துவம், பேச்சுச் சுதந்திரம், தனி நாணயம், தனி அரசமைப்புச் சட்டம், கட்டற்ற துறைமுகம் போன்றவை அதன் சில அடையாளங்கள். சீனாவின் தலையீடு அந்த அடையாளங்களைச் சிதைக்கும் என்று ஹொங்கொங் இளைஞர்கள் அஞ்சுகிறார்கள்... போராடுகிறார்கள். போராட்டத்தை முழுமையாகப் பிரதிநிதித்துவப் படுத்தும் தலைமை இல்லை. பல்வேறு குழுக்கள் சமூக வலைத்தளங்களின் மூலமாகத் தங்களை ஒருங்கிணைத்துப் போராடிவருகின்றனர். இந்த இளைஞர்களால் ஐந்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட் டன. அவை: நாடுகடத்தும் தீர்மானம் திரும்பப் பெறப்பட வேண்டும், நடுநிலையான குழு ஒன்று, போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் நடந்த கைகலப்புகளை விசாரிக்க வேண்டும், போராட்டத்தைக் கலவரம் என்று அழைக்கக் கூடாது, போராட்டக்காரர்கள் மீதான வழக்குகளை மீளப்பெற வேண்டும், இடைநிறுத்தப்பட்ட தேர்தல் சீர்திருத்தங்களைத் தொடங்க வேண்டும். இவற்றில் முதல் நான்கு கோரிக்கைகளைக் ஹொங்காங் அரசாலும் அதன் நிர்வாகத் தலைவர் கேரி லொமாலும் முன்னெடுக்க முடியும். கடைசிக் கோரிக்கைக்கு சீன அரசின் இசைவு வேண்டும். ஹொங்கொங்கின் சட்டமன்ற உறுப்பினர்களை மக்கள்தான் தெரிவு செய்கின்றனர். ஆயின் செயலாட்சித் தலைவரை மத்திய அரசுக்கு இணக்கமான சிறிய குழுதான் தெரிவு செய்கிறது. செயலாட்சித் தலைவரைத் தாங்கள் நேரடியாகத் தெரிவு செய்ய வேண்டும் என்பது பரந்துபட்ட மக்களின் விருப்பம். ஹொங்கொங் முழுமையான ஜனநாயக நாடன்று. அதற்காக, தங்களது குரலை உச்சத்தில் ஒலிக்கச் செய்வதில் ஹொங்கொங் மக்கள் தயங்கியதேயில்லை. மத்தியமாநில அரசுகள் அவர்களது ஜன நாயக வேட்கையைப் புரிந்துகொள்ள வேண்டும்.

**சரியும் பொருளாதாரம்**

போராட்டக்காரர்களின் கோரிக்கைகளில் மக்களின் வாழ்நிலை இடம்பெறவில்லை: ஆனால், போராட்டத்துக்கு அதுவும் ஓர் உந்து சக்திதான். தலைக்கு மேல் சொந்தமாக ஒரு கூரை என்பது உலகெங்கும் வாழும் மக்களின் கனவாகும்.

**போராட்டக்காரர்களின் கோரிக்கைகளில் மக்களின் வாழ்நிலை இடம்பெறவில்லை. ஆனால், போராட்டத்துக்கு அதுவும் ஓர் உந்து சக்திதான். தலைக்கு மேல் சொந்தமாக ஒரு கூரை என்பது உலகெங்கும் வாழும் மக்களின் கனவாகும். ஹொங்கொங்கில் இதை நனவாக்கிக்கொள்வது எளிதன்று.**

ஹொங்கொங்கில் இதை நனவாக்கிக்கொள்வது எளிதன்று. எல்லா நிலமும் அரசுக்குச் சொந்தமானது. பொது ஏலங்களின் மூலமாக தொழிலதிபர்கள், முதலாளிகள் இவற்றை வாங்கி அடுக்கங்களைக் கட்டுவார்கள். இவர்களில் ஐந்தாறு பேர்தான் மொத்தச் சந்தையையும் கட்டுப்படுத்துகிறார்கள். உலக அளவில் வீட்டு விலையும் வாடகையும் அதிகமான நகரங்களில் ஒன்று ஹொங்கொங். சாதாரண வேலைகளில் இருப்பவர்கள் வீடுகள் வாங்குவது மிகவும் கடினமாகிவிட்டது. கட்டுப்படியாகக்கூடிய விலையில் மக்களுக்கு வீடுகள் கிடைக்க வேண்டும். இதை வீட்டுவசதி அமைப்பால் செய்ய முடியும்.

ஹொங்கொங்கின் பொருளாதார நிலை சரிந்துகொண்டிருக்கிறது. இதை மனதில் கொண்டு நிதி அமைச்சர் பால் சான் ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி அன்று ஒரு சிறிய நிதி நிலை அறிக்கையை முன் வைத்தார். 150 பில்லியன் ஹொங்கொங் டொலர் மதிப்பிலான சலுகைகளை அறிவித்தார்.

வருமான வரிக் குறைப்பு, முதியவர்களுக்கும் ஊனமுற்றவர்களுக்கும் உதவித்தொகை அதிகரிப்பு, சிறுதொழில் முனைவோருக்குச் சலுகைகள், மருத்துவ ஒதுக்கீடுகள் முதலானவை இதில் அடங்கும். ஓர் அரசியல் பிரச்சினைக்குப் பொருளாதாரச் சலுகைகள் தீர்வாகிவிட முடியாது. எனில், இதை நல்லெண்ண சமிக்ஞையாக மக்கள் எடுத்துக்கொள்வார்கள் என்பது அரசின் எதிர்பார்ப்பாக இருக்கலாம்.

**இரு தரப்பும் இணையட்டும்**

ஹொங்கொங் கல்வியில் சிறந்த நாடு. அதன் பாதுகாப்பும் சட்டத்தின் மாட்சிமையும் பல்லாண்டு கால உழைப்பில் உருவானவை. அவற்றைப் பங்கப்படுத்தித் தாங்கள் எதையும் அடைந்துவிட முடியாது என்பதைப் போராடும் இளைஞர்கள் உணர வேண்டும். மக்களின் வாழ்நிலையையும் அரசியல் வேட்கையையும் உணர்ந்து செயலாற்றுவதற்கு அந்த நாட்டு அரசும் முன்வர வேண்டும். இதற்கு முன் 2003ஆம் ஆண்டில் ஹொங்கொங் ஓர் இக்கட்டை எதிர்கொண்டது. 'ஸார்ஸ்' எனும் முன்னர் எப்போதும் அறிந்திராத ஒரு தொற்றுநோய், நகரத்தில் சப்பாணியிட்டு அமர்ந்துகொண்டது. 'சுவாசிப்பது கூட சாவுக்குக் கதவு திறந்துவிடுமோ' என்று அஞ்சப்பட்ட அசாதாரண நிலைமை நிலவியது. இப்போதுபோலவே பல நாடுகள் ஹொங்கொங்கைத் தவிர்க்கச் சொல்லித் தமது குடிமக்களை அறிவுறுத்தின. இப்போதுபோலவே பங்குச் சந்தை பெரிய வீழ்ச்சியைச் சந்தித்தது. வணிகம், தொழில், சுற்றுலா அனைத்தும் பாதிக்கப்பட்டன.

ஆனால், மக்களும் அரசும் ஒற்றுமையாக நின்று அந்த நகரத்தை மீட்டெழுப்பினார்கள். அவர்கள் மீண்டும் ஒரு முறை அதைச் செய்துகாட்ட வேண்டும். இரண்டு தரப்புகளும் இணைந்து செயலாற்றுவதன் மூலமே அதைச் சாதிக்க முடியும்.

**நன்றி தி ஹிந்து**



# டைட்டானிக் கப்பல் தற்போது எப்படி உள்ளது?

அந்தக் காலத்தில் மிகப்பெரியதாக உருவாக்கப்பட்ட, இந்தப்பயணிகள்கப்பல் 1912ஆம் ஆண்டில் சவுத் தாம்ப்டனில் இருந்து நியூயோர்க் நோக்கித் தனது முதலாவது பயணத்தை மேற்கொண்ட போது, மிதக்கும் பனிப் பாறை மீது மோதி விபத்தில் சிக்கியது. அதில் இருந்த பயணிகள் 2ஆயிரத்து 200 பேர்மற்றும்கப்பல்பணியாளர்களில், ஆயிரத்து 500 க்கும் மேற்பட்டவர்கள் இறந்து போனார்கள்.


ஆழ் கடலுக்குள் மூழ்கியுள்ள டைட்டானிக் கப்பலைத் தேடிய போது, அந்தக் கப்பலின் சில பகுதிகள் மறைந்து வருவதை அறிய முடிந்தது. அது மூழ்கிக் கிட்டத்தட்ட 15 ஆண்டுகளில் முதன்முறையாக டைட்டானிக்கை தேடி கடலில் இறங்கியவர்கள், உடைந்த அந்தக் கப்பலின்பாகங்கள்வேகமாக சிதைந்து வருவதாகக் கூறியுள்ளனர். பன்னாட்டுக்ஆழ்கடல் ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஐந்து நீர்மூழ்கிப் பயணங்களின்போது, அத்திலாந்திக் கடலில் 3ஆயிரத்து 800 மீற்றர் ஆழத்தில் மூழ்கிக் கிடக்கும் அந்தக் கப்பலை ஆய்வு செய்துள்ளனர். உடைந்த கப்பலின் பாகங்கள் ஆச்சரியப்படத் தக்க அளவுக்கு நல்ல நிலையில் உள்ளதாகவும், கப்பலில் பொருத்தப்பட்ட சிறப்பு அமைப்புகள் கடலில் சிதைந்து போயுள்ளன என்றும் தெரிவித்தனர். அதிகாரிகள் தங்கும் பகுதியில் கப்பல் முகப்பு வலப்புறம் மிக மோசமாகச் சிதைந்து போயுள்ளது.


**வரலாற்றாளர் ஒருவரின் கருத்து**

ஆழ்கடலில் மூழ்கிய போது தாம் பார்த்த சில காட்சிகள் அதிர்ச்சிகரமானதாக இருந்தன என்று டைட்டானிக் வரலாற்றாளர் பார்க்ஸ் ஸ்டீபன்சன் என்பவர் கூறியுள்ளார். டைட்டானிக் பற்றி ஆர்வம் காட்டுபவர்களுக்குப்பிடித்தமானதுஅதனுடையமாலுமியின் குளியல் தொட்டி இப்போது அதைக் காணவில்லை என்கிறார் அவர். அந்தப் பக்கம் உள்ளதளத்துக்குமேலேகடல் மட்டத்துக்கு மேற்புறமாக அமைந்திருக்கும் அறைப் பகுதி முழுமையாகச் சரிந்து வருகிறது. அதனுடன் முக்கிய அறைகளும் அழிகின்றன. இந்தச் சிதைவு தொடர்ந்து கொண்டிருக்கப் போகிறது. டைட்டானிக் கப்பல் இயற்கையை நோக்கித் திரும்பிக் கொண்டிருக்கிறதுஎன்றுஅவர் மேலும் குறிப்பிடுகிறார்.

**கப்பலின் சிதைவுக்கு என்ன காரணம்**

வலுவான கடல் நீரோட்டம், உப்பு அரிப்பு மற்றும் உலோகத்தை அழிக்கும் பாக்டீரியாக்கள் ஆகியவை இந்தக் கப்பலைச் சிதைத்து வருகின்றன. டைட்டானிக்கப்பல்100ஆண்டுகளுக்கும் மேலாகக் கடல் நீரில் மூழ்கிக் கிடக்கிறது கனடாவில் நியூபவுண்ட் லேண்ட் கடற்கரையில் இருந்து 600 கிலோ மீற்றர் (370 மைல்கள்) தொலைவில் இது கடலில் கிடக்கிறது. மரியானா ஆழியின் அதிகபட்ச ஆழம் வரை சமீபத்தில் சென்ற அதே குழுவினர்தான்டைட்டானிக்கைத் தேடிய பயணத்திலும் ஈடுபட்டனர். 600மீற்றர் இடைவெளியில் இரண்டு பகுதிகளாகக் கிடக்கும் உடைந்த கப்பலின் பாகங்களைச் சுற்றி வழிநடத்திச் செல்வது சவாலான விடயம். அத்திலாந்திக்பெருங்கடலில் உள்ள மோசமான சூழ்நிலையும், வலுவான கீழ் நீரோட்டமும் இந்த நீர்மூழ்கிப்பயணத்தைச்சிரமமானதாக ஆக்குகின்றன. உடைந்த கப்பலுக்குள்குழுவினர்சிக்கிக்கொள்வதற்கான ஆபத்தும் அதிகம்.





**டைட்டானிக்கை தேடிய ஆய்வுப் பயணத்தின் வரலாறு**

1985 ஆம் ஆண்டில் டைட்டானிக் மூழ்கிய இடத்தை அமெரிக்க பிரெஞ்ச் குழுவினர் கண்டறிந்தனர். 1986ஆம் ஆண்டில் கப்பலின் உடைந்த பாகங்களை ஆல்வின் நீர்மூழ்கிக் கப்பல் ஆய்வு செய்தது. 1987ஆம் ஆண்டில் நடந்த முதலாவது மீட்புப் பயணத்தில் டைட்டானிக்கிலிருந்த ஆயிரத்து 800 வரையான கலைப் பொருள்கள் சேகரிக்கப்பட்டன. உடைந்த கப்பலுக்கு ஜேம்ஸ்கேமரூன் 1995ஆண்டில் பயணம் மேற்கொண்டார்அப்போதுஎடுத்த காட்சிகள் அவருடைய டைட்டானிக் திரைப்படத்தில் பயன்படுத்தப்பட்டன. 1998ஆம் ஆண்டில் முதலாவது சுற்றுலாவாசிகள் அங்கு மூழ்கிப் பயணம் செய்தனர். 1998ஆம் ஆண்டில் டைட்டானிக் கப்பல் கூட்டின் ஒரு பகுதி மேலே கொண்டு வரப்பட்டது.

2005ஆம் ஆண்டில் இரண்டு வீரர்களைக்கொண்டநீர்மூழ்கிகள் உடைந்த கப்பலுக்குச் சென்றன. 2010ஆம் ஆண்டில் தானியங்கி ரோபோக்கள் அந்த இடத்தை ஆய்வுசெய்து வரைபடம்தயாரித்தன. 2012ஆம் ஆண்டில் யுனெஸ்கோவால் உடைந்த கப்பல் பாதுகாக்கப்பட்டுள்ளது. 2019ஆம் ஆண்டில் டி.எஸ்.வி. லிமிட்டிங் பேக்டர் நீர்மூழ்கி ஐந்து முறை நீர்மூழ்கிப் பயணம் மேற்கொண்டது.கப்பல்சிதைவடைந்து வருதைச்சுட்டிக் காட்டியது.

நீரில் மூழ்கிய பயணங்களை, பின்னர்தயாரிக்கப்படவுள்ளஆவணப் படத்துக்காக அட்லாண்டிக் புரடக்சன்ஸ் நிறுவனத்தாரால் பதிவு செய்யப் பட்டுள்ளன. காட்சிக்ளைப் படம் எடுப்பதுடன், இந்த ஆய்வுப்பயணத்தில் உள்ள விஞ்ஞானிகள், உடைந்த கப்பலில் வாழும் உயிரினங்களைப் பற்றி ஆய்வு மேற்கொண்டுள்ளனர். உறையவைக்கும்சூழ்நிலைகளில், கும்மிருட்டான நீரில், அதி தீவிரமான அழுத்தத்திலும்அங்கேஉயிரினங்கள் வாழ்கின்றன. டைட்டானிக் சிதைவதற்கு இதுவும் ஒரு காரணம் என்று நியூகேசில் பல்கலைக்கழகத்தில் இருந்து இந்த ஆய்வுப் பயணத்தில் இடம் பெற்றுள்ள விஞ்ஞானி கிளாரே பிட்ஜ் சிம்மன்ஸ்கூறியுள்ளார். உடைந்த கப்பலில்நுண்கிருமிகள்உள்ளன. அவை தான் உடைந்த பாகத்தில் உள்ள இரும்பையும் உண்கின்றன. அதனால் துருவேற்ற கட்டமைப்பை உருவாக்குகின்றன.

அது உலோகத்தின் பலவீனமான நிலையாகக் கருதப்படுகிறது'' என்று அந்தப் பெண் விஞ்ஞானி கூறுகிறார். 1996ஆம் ஆண்டு ஆய்வுப் பயணம் சென்ற போது படம்பிடிக்கப்பட்டமாலுமியின்குளியல் தொட்டியை இப்போது காணவில்லை. உடைந்த பாகங்களில் துருவேறிய நிலையில் தொங்கிக் கொண்டிருக்கும் இந்த அமைப்புகள்மிகவும்பலவீனமானவையாக இருப்பதால், ஏதும் இடையூறுகள் ஏற்பட்டால் முற்றிலும் நொருங்கிச் சரியக் கூடியவையாக உள்ளன. அத்திலாந்திக் கடலில் வெவ்வேறு வகையான உலோகங்கள் எப்படி அரிப்புக்கு ஆட்பட்டிருக்கின்றன என்பது பற்றி விஞ்ஞானிகள் ஆய்வுசெய்துவருகிறார்கள். டைட்டானிக் இன்னும் எவ்வளவு காலத்துக்கு இருக்கும்என்பதைமதிப்பிடுகிறார்கள். உடைந்த கப்பல் இப்போது"எப்படி இருக்கிறது என்பதை ஆழத்துக்குச் சென்று ஆவணப்படுத்த வேண்டியது முக்கியம் என்று கிரீன்விச்சில் உள்ள தேசிய கடல் சார்அருங்காட்சியகத்தைச்சேர்ந்த ராபர்ட் பிளித் கூறுகிறார். டைட்டானிக் பேரழிவுக்கு சாட்சியாக இப்போது இருப்பது இந்த உடைந்த கப்பல்தான்"என்றுஅவர்குறிப்பிடுகிறார்.

நன்றி: பி.பி.சி.தமிழ்



# இந்த வாரம்

**08.09.2019 முதல் 14.09.2019 வரை**

*உங்களுக்கு எப்படி?*



## மேடம்

சுக்கிரன், ராகு, சந்திரன் வியத்தகு நற்பலன் தருவர். உங்கள் செயல்களில் மனிதாபிமானம் நிறைந்திருக்கும். விலகிச் சென்றவரும் விரும்பி அன்பு பாராட்டுவர். தாயின் அன்பு, ஆசி ஊக்கம் தரும். பூர்வ சொத்தில் ஓரளவு வருமானம் கிடைக்கும். புத்திரரின் மனதில் தெளிவும் அறிவுக்கூர்மையும் ஏற்படும். பணக்கடன் செலுத்துவீர்கள். மனைவியின் கருத்தில் உள்ள நியாயங்களை உணர்ந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி வளர்ச்சி உருவாகும். பணியாளர்களுக்கு அதிர்ஷ்டவசமாக சலுகை கிடைக்கும். பெண்கள் உறவினர் குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த உதவுவர். மாணவர்கள் அக்கறையுடன் படித்து அதிக மதிப்பெண் பெறுவர்.

## இடபம்

சுக்கிரன், புதன், குரு, சந்திரன் நற்பலன் வழங்குவர். பணிகளில் மனப்பூர்வமாக ஈடுபடுவீர்கள். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சமூக நிகழ்வு இனிய படிப்பினையை தரும். வாகனத்தின் பயன்பாடு அதிகரிக்கும். புத்திரர் விரும்பிய பொருள் கேட்டு பிடிவாதம் செய்வர். விவகாரங்களில் சமரச தீர்வு கிடைக்கும். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். மனைவி குடும்ப நலன் மேம்பட உதவிகரமாக இருப்பார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்காக சில மாற்றம் செய்வீர்கள். மாண வர்களுக்கு புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும்..

## மிதுனம்

செவ்வாய், சுக்கிரன், சூரியன் தாராள நற்பலன் தருவர். உங்கள் நல்ல குணத்தை நண்பர் பாராட்டுவார். பேச்சு, செயலில் நிதானம் நிறைந்திருக்கும். குடும்பத் தேவை தாராள பணச்செலவில் நிறைவேறும். புத்திரரின்நற்செயல்பெற்றோருக்குபெருமைசேர்க்கும். நோய் தொந்தரவு குறைந்து உடல் ஆரோக்கியம் பெறும். மனைவி உறவினர்களை உபசரித்து நற்பெயர் பெறுவார். தொழிலில் அபரிமிதமான வளர்ச்சியும் பணவரவும்உண்டு.பணியாளர்களுக்குசலுகை கிடைக்கும். பணம் சேமிக்கவும் அனுகூலமுண்டு. பெண்கள் புத்தாடை, நகை வாங்குவர். மாணவர்கள் படிப்பில் நல்லதேர்ச்சி பெறுவர்.

## கடகம்

சுக்கிரன், குரு, சனீஸ்வரர், கேது ராஜயோக பலன் வழங்குவர். சமூக நிகழ்வுஇனியஅனுபவம்தரும்.நற்செயல்களுக்கானபலன்கிடைக்கும்.புதியவீடு,வாகனம் வாங்க நல்யோகமுண்டு. புத்திரர் பெற்றோரின் சொல்லைஏற்றுசெயல்படுவர்.இஷ்டதெய்வஅருள்பலம் துணை நிற்கும். குடும்பத்தில் சுபநிகழ்வு ஏற்படும். நோய் தொந்தரவு குறைந்து உடல் ஆரோக்கியம் மேம்படும். மனைவியின் அன்பான ஆலோசனையை ஏற்று கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பு அதிகரிக்கும். பணியாளர்கள் பணியிட சூழல் உணர்ந்து பணி புரிவர். மாணவர்கள் படிப்பில் சிறந்து நண்பருக்கும் உதவுவர்.

## சிங்கம்

ராகு, சுக்கிரன், சந்திரனால் நன்மை உண்டாகும். மனதில் புதிய உத்வேகம் பிறக்கும். உடன்பிறந்தவர் அன்பு, பாசத்துடன் உதவுவர். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர் பெற்றோர் வார்த்தையை தயக்கமுடன் ஏற்று கொள்வர். சொத்து, ஆவணம் பிறர் பொறுப்பில் தர வேண்டாம். எதிரியால் உருவான தொல்லையை சமயோசிதமாக சரி செய்யுங்கள். மனைவி குடும்ப நலன் பேணி காத்திடுவார். தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் கால அவகாசத்தில் பணி இலக்கை நிறைவேற்றுவர். மாணவர்கள் படிப்பில் கூடுதல் கவனம் வேண்டும்..

## கன்னி

சுக்கிரன், சந்திரன், ஓரளவு நற்பலன்களை தருவர். தந்தை வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். திட்டமிட்ட பணிகள் ஓரளவு நிறைவேறும். வாகனத்தின் பயன்பாடு அளவுடன் இருக்கும். புத்திரரின் படிப்பு, வேலையில் தாமதம் ஏற்படலாம். உடல் ஆரோக்கியத்தை பேணி காத்திட வேண்டும். மனைவியின் சொல்லும், செயலும் நம்பிக்கையை தரும். தொழில், வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் இதமான அணுகுமுறையால் ஓரளவு சலுகை பெறுவர். பெண்கள் நகை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம். மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் கொள்வர்.

## துலாம்

பெரும்பான்மை கிரகங்களால் அளப்பரிய நன்மை ஏற்படும். நண்பர் மற்றும் உறவினர் உதவுவர். மனதில் தைரியம் வளரும். தாமதமான பணிகளை புதிய உத்தியால் சிறப்பாக நிறைவேற்றுவீர்கள். வாழ்வியல் நடைமுறை திருப்திகரமாகும். வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். வெளியூர் பயணம் இனிய அனுபவம் தரும். புத்திரர் விரும்பி கேட்ட பொருள் வாங்கி தருவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்து லாபம் அதிகரிக்கும். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்புடன் கலைகளும் பயில்வர்.

## விருச்சிகம்

சூரியன், புதன், சந்திரன் அனுகூல பலன் தருவர். உங்கள் பேச்சில் வசீகரம் இருக்கும். சிறு பணியிலும் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். உறவினர்களிடம் கூடுதல் அன்பு, பாசம் வளரும். வாகனத்தின் பயன்பாடு அதிகரிக்கும். புத்திரரின் செயல் சிறப்பாக உருவாக உதவுவீர்கள். நண்பருக்கு கடனாக கொடுத்த பணம் திரும்ப கிடைக்கும். மனைவியின் அன்பு, பாசம் மனதில் நெகிழ்ச்சியை தரும். தொழில், வியாபாரம் செழித்து ஆதாய பணவரவு கிடைக்கும். குடும்ப தேவை பெருமளவில் நிறைவேறும். பணியாளர்கள் விரும்பிய பணியிட மாற்றம் பெறலாம். பெண்கள் உறவினர் குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த உதவுவர்.

## தனுசு

சுக்கிரன், சந்திரன் ஓரளவு நற்பலன் தருவர். புதிய திட்டம் செயல்படுத்துவீர்கள். அன்புக்கு உரியவரின் உதவி ஊக்கம் தரும். பணப்பரிவர்த்தனை சீராகும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர் பெற்றோரின் வழிகாட்டுதலை ஏற்று செயல்படுவர். பூர்வ சொத்து பராமரிப்பில் நம்பகமானவர்களை பணியமர்த்தவும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மனைவி கருத்திணக்கமுடன் நடந்து கொள்வார். புதிய வாடிக்கையாளர்களின் ஆதரவில் தொழில், வியாபாரம் செழித்து வளரும். பணியாளர்கள் அதிக வேலை வாய்ப்பை ஏற்று கொள்வர். மாணவர்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டுதல் ஊக்கம் தரும்.

## மகரம்

குரு, ராகு, புதன், சுக்கிரன், சந்திரனால் அளப்பரிய நன்மை கிடைக்கும். செயல்களில் உற்சாகம் பரிமளிக்கும். அன்புக்குரியவர் பாராட்டுவர். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி வளரும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கி தருவீர்கள். விவகாரங்களில் சுமூக தீர்வு கிடைக்கும். வெளியூர் பயணம் எதிர்ப்புகளை பூர்த்தி செய்யும். நோய் தொந்தரவு குறைந்து உடல் ஆரோக்கியம் பெறும். மனைவி வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம் செழித்து பணம் சேமிப்பாகும். பணியாளர் கூடுதல் தொழில் நுட்பம் அறிந்து கொள்வர். மாணவர்கள் படிப்பு தவிர பிற விவாதம் பேச வேண்டாம்.

## கும்பம்

கேது, சனீஸ்வரர், சந்திரன் அனுகூல பலன் தருவர். மனதில் உற்சாகம் பிறக்கும். முக்கியமான பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள்.

தாய்வழி உறவினர் உதவி செயலை குறை சொல்ல வேண்டாம். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர் பெற்றோரின் சொல்லை ஏற்பதில் தயக்கம் கொள்வர். பூர்வ சொத்தில் அளவான பணவரவு கிடைக்கும். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். மனைவியிடம் உறவினர் குடும்ப விஷயம் பேச வேண்டாம். தொழில், வியாபாரம் செழித்திட சில மாற்றம் செய்வீர்கள். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்றவும்.

## மீனம்

செவ்வாய், சூரியன், புதன், குரு அதிர்ஷ்ட பலன் தருவர். பழகுப்வர்களிடம் சூழல் உணர்ந்து பேசுவீர்கள். செயல்களில் அளப்பரிய நன்மை கிடைக்கும். குடும்ப தேவை பெருமளவில் பூர்த்தியாகும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரரின் படிப்பு மற்றும் அறிவாற்றல் மேம்படும். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவி அதிக அன்பு, பாசம் கொள்வார். வெளியூர் பயணம் இனிய அனுபவம் தரும். அரசு சார்ந்த உதவி கிடைக்கும். தொழிலில் பணவரவு செழித்து அபிவிருத்தி பணி செய்வீர்கள். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோக பொருட்கள் வாங்குவர். மாணவர்கள் நன்றாக படித்து பரிசு, பாராட்டு பெறுவர்.



# தன்னம்பிக்கை தான் அழகு

**- சாய் பல்லவி**

மலையாளத்தில் 'பிரேமம்' என்ற ஒரு படத்திலேயே முன்னணி கதாநாயகிகளுக்கு இணையாகப் பிரபலமான சாய்பல்லவி தமிழ், தெலுங்கில் பெரிய கதாநாயகர்களுடன் ஜோடி சேர்ந்து நடித்துள்ளார். இப்போது 2 தெலுங்கு படங்கள் கைவசம் உள்ளன. அவர் அளித்த செவ்வி வருமாறு: "மனிதனுக்கு அழகை கொடுப்பது தன்னம்பிக்கை. எனக்கு அது நிறையவே இருக்கிறது.

முதல் படத்திலேயே ரசிகர்கள் மத்தியில் பிரபலமாகி விட்டேன். ஒவ்வொரு படத்தில் நடிக்கும்போதும் எனது கதாபாத்திரங்கள் ரசிகர்கள் மனதை எப்படி கொள்ளையடிக்கும் என்றுதான் யோசிப்பேன். படத்தில் நடித்து திரைக்கு வந்த பிறகு வெற்றி பெற்றதா? அல்லது தோல்வி அடைந்ததா? என்று சிந்தித்துக் கொண்டு இருக்கமாட்டேன். படங்களில் நடிக்கும் முன்பு கதாபாத்திரங்கள் ரசிகர்களுக்கு பிடிக்குமா? பிடிக்காதா? என்று ஆலோசிப்பேன். நடிக்க ஆரம்பித்த பிறகு மானசீகமான உறவை கதாபாத்திரங்களோடு ஏற்படுத்திக்கொள்வேன். அதுதான் எனது நடிப்பை பிரமாதமாக மாற்றி விடுகிறது. இவ்வாறு சாய் பல்லவி கூறினார்.

# மனித வாழ்க்கை சுமையின்றி இருக்க...

பிறப்பும் இறப்பும் வாழ்க்கையின் இரு பக்கங்கள். இதனிடையே எத்தனையோ மாற்றங்கள் தோன்றுகின்றன. பிறந்தோம், வளர்ந்தோம், உழைத்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்று இந்த மனித வாழ்க்கை ஒரு சக்கரம்போல சுழலுகிறது. ஒரேபாதையில் ஓடிக்கொண்டிருக்கும் வாழ்க்கைச் சக்கரம் திடீரென்று மாற்றங்களைச் சந்திக்க நேரிடும்போது தடுமாறுகிறது. இந்தத் தடுமாற்றத்தை நீக்கி மனப் பக்குவத்தோடு மாற்றங்களை ஏற்றுக் கொண்டு திறமையாக வாழ்க்கைச் சக்கரத்தை தடம் புரளாமல் ஓட்டும் மனிதன், வாழ்க்கையைச் செம்மையாகப் புரிந்து கொண்டு வாழ்கிறான் என்று சொல்லலாம்.

வாழ்க்கையைக் காலத்தோடு ஒப்பிடும்போது வாழ்க்கை அவ்வளவு முக்கியமானதாகத் தோன்றவில்லை. எத்தனையோ காலங்கள் ஓடிவிட்டன. இன்னும் எத்தனையோ காலங்கள் ஓடவேண்டும். பிறப்புக்கும் இறப்புக்கும் இடையேயுள்ள காலத்தில் இந்த மனிதனின் வாழ்க்கை எத்தனை வகையில் மாறுபடுகின்றன. மனிதன் ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு அனுபவத்தைப் பெறுகிறான். இந்த அனுபவம் அவனுக்கு மட்டுமன்றி மற்றவர்களுக்கும் பாடமாக அமைந்து விடுகிறது.

இந்த இரண்டு காலச் சக்கரங்களுக்கிடையே மனிதன் அகம்பாவம், கோபம், கெட்ட அதிர்வலைகள் போன்ற குணங்களுக்கு அடிமையாகிறான். அகம்பாவம் மனிதனின் சுயரூபத்தை அழித்து அவனை தனிமையாக்குகிறது. தான் என்ற எண்ணம் கொண்ட மனிதன் என்றும் வாழ்ந்ததில்லை என்ற பாடலின் வரிகள் இன்றும் நினைவுக்கு வருகின்றன. அகம்பாவத்தால் மனிதன் மகிழ்ச்சியைத் தொலைக்கிறான். வாழ்க்கையில் நிகழும் சம்பவங்களில் இனியதாகவும் இருக்கிறது. கெட்டதாகவும் நடக்கிறது. இரண்டையும் மனிதன் ஒன்றாக எடுத்துக்கொண்டு வாழ்க்கையை சாதாரணமாக வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். வாழ்க்கையில் எப்போதும் மகிழ்ச்சியான சம்பவங்கள் மட்டும் நிகழ்ந்து கொண்டிருந்தால் வாழ்க்கை அவ்வளவு சுவையாகத் தோன்றாது. அவ்வப்போது பிரச்சினைகளும் தோன்றினால்தான் வாழ்க்கையில் அதனைச் சமாளிக்கும் தன்மையும் மனிதனுக்குள்ளே பிறக்கும். காலத்தோடு தோன்றும் மாற்றங்களை மனிதன் மனப்பக்குவத்தோடு, மனம் திறந்து ஏற்றுக் கொண்டு வாழ வேண்டும். ஒரே மாதிரியான வாழ்க்கையினால் மனிதன் அவ்வப்போது சலிப்படைகிறான். இதனால் அவ்வப்போது மனிதன் அதற்கேற்ற மாற்றங்களை உருவாக்கிக் கொள்வதுடன் வாழ்க்கையில் வரும் எந்த மாற்றங்களையும் வரவேற்கப் பழகிக்கொள்ளவேண்டும். மாற்றம்தான் ஏமாற்றத்தைத் தவிர்க்கும். இந்த மனித வாழ்க்கையும் சுமையில்லாமல் சுகமாய்த் தோன்றும்.

நடக்கக் கற்றுக் கொடுத்தவன்;
ஒரு நாள் வீழ்ந்ததையும் கண்ணுற்றோம்
போய் வருக...






வாழ்வதற்கு மட்டுமல்ல...



சில நேரங்களில் வாழ்ந்து காட்டுவதற்காகவும் சொந்த வீடுகள் கட்டப்படுகின்றன...!

## ருவீற்ஸ்

எவ்வளவு பேசினாலும் கடைசியில் ஆரம்பித்த இடத்திலேயே இடறியபடி இருப்பதற்குப் பெயர்தான் விவாதம்!

அம்மியில் அரைப்பது ஒரு கலை என்றால்... அரைத்ததை கீழே விழாமல் வழித்தெடுப்பது ஒரு கலை.

ஒவ்வொரு தனிமனித வாழ்க்கையும் அவர்களுடைய கைரேகை போலவே பிரத்தியேகமானது...

நகர வாழ்க்கையில் ஆரோக்கியம் கெடுகிறது. கூடவே அதற்கு நல்ல வைத்தியமும் கிடைக்கிறது!




நீ யாரிடம் உன் ரகசியங்களைச் சொல்கிறாயோ
அவரிடம் உன் சுதந்திரத்தை இழப்பாய்!






சப்பாணி @manipmp

பழக்கத்தில் 'நல்ல பழக்கம்',
'கெட்ட பழக்கம்' என்று இல்லை.
'விடக்கூடிய பழக்கம்',
'விடமுடியாத பழக்கம்'
இப்படி இரண்டுதான்.

# குழிப் பணியாரம்



**தேவையானவை பொருள்கள்**

பச்சை அரிசி, புழுங்கலரிசி - தலா ஒரு கோப்பை
உளுந்து - அரைக் கோப்பை
ஜவ்வரிசி - கால் கோப்பை
வெந்தயம் - ஒரு தேக்கரண்டி
வெங்காயம் - ஒன்று
பச்சை மிளகாய் - 3
கடுகு, உளுத்தம்பருப்பு - தலா அரை தேக்கரண்டி
தேங்காய் துருவல் - 4 தேக்கரண்டி
கறிவேப்பிலை - சிறிதளவு
எண்ணெய், உப்பு - தேவையான அளவு

**செய்முறை:**

பச்சை அரிசி மற்றும் புழுங்கலரிசி, உளுந்து, வெந்தயம் ஆகியவற்றை ஒன்றாக ஊற விடவும். 2 மணி நேரம் கழித்து நைஸாக அரைக்கவும். அரைக்கும்போது, 10 நிமிடம் ஊற வைத்த ஜவ்வரிசியை மாவுடன் சேர்த்து அரைக்கவும். உப்பு சேர்த்துக் கலக்கி, 5 அல்லது 6 மணி நேரம் புளிக்கவிடவும்.

வெங்காயம், பச்சை மிளகாயைப் பொடியாக நறுக்கவும். சட்டியில் எண்ணெய் சூடாக்கி கடுகு, உளுத்தம்பருப்பு, கறிவேப்பிலை தாளித்து, வெங்காயம், பச்சை மிளகாய், தேங்காய் துருவல் சேர்த்து வதக்கி மாவில் சேர்க்கவும்.

குழிப் பணியாரச் சட்டியைச் சூடாக்கி, சிறிது எண்ணெய் விட்டு, மாவை குழிகளில் ஊற்றி, இரு புறமும் வேகவிட்டு எடுத்தால், சுவையான குழி பணியாரம் தயார்.

# பட்டுப் போன்ற மிருதுவான பாதங்களுக்கு



- பாலில் தோய்த்தெடுத்த பஞ்சு கொண்டு நகங்களில் தேய்த்து வந்தால் நகம் உடையாமலும், மினுமினுப்பாகவும் இருக்கும்.
- குளிப்பதற்குமுன் கஸ்தூரி மஞ்சளுடன் வெண்ணெயைக் கலந்து நன்றாகத் தேய்த்து வந்தால் சொரசொரப்பான பாதமும் மிருதுவாகி விடும்.
- வெதுவெதுப்பான நீர் நிறைந்த பெரிய பாத்திரத்தில் ஷாம்பூ , உப்பு மற்றும் ஒரு எலுமிச்சம்பழத்தின் சாறை விட்டு அந்த தண்ணீரில் சில நிமிடங்கள் பாதங்களை அமிழ்த்தி வைத்து ப்யூமிக் கல்லால் தேய்க்க வேண்டும். பிறகு குளிர்ந்த நீரால் கழுவி நன்றாக துடைத்து விடவும்.
- சிறிது கற்றாழை ஜெல்லுடன் கடலை மாவைக் கலந்து மிக்ஸியில் அரைத்து 2 நாள்களுக்கு ஒருமுறை உள்ளங்கால், பாதம், கணுக்கால் முழுவதும் தேய்த்துக் கழுவ, காயத்தால் ஏற்பட்ட தழும்புகள், கருமை மறைந்து சருமம் இயல்பான நிறத்துக்கு மாறும்.
- நான்கு துளி விளக்கெண்ணெயை உள்ளங்கையில் எடுத்துக்கொண்டு நன்றாக சூடு பறக்க தேய்த்து, 2 பாதங்களிலும் தேய்த்து வர பாதம் மினுமினுப்பாக மாறும்.
- மாதம் இருமுறை வெள்ளை எள்ளை அரைத்து, பாதம், நகங்களில் பத்துபோல் போட்டு கழுவவும். இது நகத்தின் இடுக்குகளில் படிந்துள்ள மண், அழுக்குகளை அகற்றி நல்ல பளபளப்பை கொடுப்பதுடன் வெடிப்பு வராமலும் பாதுகாக்கும்.
- காலணிகளையும் சரியான அளவில் போட வேண்டும். தரமரனதாகவும் செளகரியமானதாக வாங்கி அணியும்போது, பாதம் கருத்துப் போகாமல் இயல்பாய் இருக்கும்.
- பாதம், உள்ளங்கால் வறண்டு இருந்தால் 4 சொட்டு கிளிசரின், 4 சொட்டு எலுமிச்சைச்சாறை கலந்து தூங்கச் செல்லும்போது நகம், விரல்கள், பாதம் முழுவதும் தடவி, காய்ந்தவுடன் காலுறை அணிந்து உறங்கவும்.

# சப்பாத்திக் கள்ளி

சப்பாத்திக் கள்ளி பழத்தில் இருக்கும் உயர் தரமான நார்ச் சத்தால் உடலில் இருக்கும் தேவையற்ற கொழுப்புகளைக் கரைத்து வெளியேற்றி உடல் பருமனை குறைக்கிறது.

நாகதாளி எனப்படும் சப்பாத்திக் கள்ளியில் கல்சியம், பொட்டசியம், பொஸ்பரஸ், மக்னீசியம் சத்துக்களும் உயர்தரமான நார்சத்தும் நிறைந்துள்ளது. மேலும் இதில் விற்றமின் B மிகவும் அதிகமாக உள்ளது.

வறண்ட நிலங்களில் காணப்படும் சப்பாத்தில் கள்ளியில் வெயிலினால் ஏற்படும் உடல்சோர்வை போக்கவும், உஷ்ணத்தைக் குறைக்கவும், இந்தச் சப்பாத்திக் கள்ளி உதவுகிறது.

நாகதாளிப் பழத்தைச் சாப்பிட்டு வந்தால் குரல்வளை, பித்தப்பை, மலக்குடல் சார்ந்த அனைத்து குறைபாடுகளும் நீங்கும். காச இருமல், இரத்தம் கக்குதலும் தீரும்.


மிகச்சிறந்த நோய் எதிர்ப்பு மூலிகையாகத் திகழும் சப்பாத்திக் கள்ளி, குருதியில் வெள்ளை அணுக்கள் உற்பத்தியாக பெரிதும் உதவிபுரியும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக, மனிதர்களை அச்சுறுத்தும் புற்று நோயைப் போக்கும் மருந்தாகவும், அவை வராமல் தடுக்கவும் ஒரு மெய்க்காப்பாளனாக விளங்குகிறது சப்பாத்திக்கள்ளி.

ஞாபக மறதி எனப்படும் அம்ஸைமர் நோய்க்கு இது மருந்தாக பயன்படுத்தலாம். இந்த பழத்தை தொடர்ந்து எடுத்துகொள்ள கண் பார்வை கூர்மையாகும்.

சித்த மருத்துவத்தில் இதனை தேநீர் நீராக செய்து குடித்துவந்தால், உடல் குறையும் நீரிழிவு நோயும் கட்டுபடுகிறது.



# வெங்காயத்தை பச்சையாக சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள்



வெங்காயத்தில் பல்வேறு சத்துக்கள் நிறைந்துள்ளன. இந்த வெங்காயத்தைப் பச்சையாகத் தினமும் சாப்பிடுவதால் பல்வேறு நன்மைகள் கிடைக்கின்றன. பல்வேறு காரணங்களால் உஷ்ணம் அதிகரிக்கும் போது வெங்காயம் உடல் உஷ்ணத்தைச் சமனப்படுத்துகிறது. நாடித் துடிப்பைச் சீராக வைத்திருக்க உதவும் ஆற்றலும் வெங்காயத்துக்கு உண்டு.

சாதாரணமாகத் தலைவலிக்கு வெங்காயத்தை நசுக்கி முகர்ந்தால் உடனே குணம் தெரியும். வெங்காயத்தைப் பாதியாக நறுக்கி தேள், குளவி போன்ற விச ஜந்துக்கள் கடித்த இடத்தில் அழுத்தித் தேய்த்தால் வலி குறையும்.

பொதுவான இருமலுக்கு வெங்காயச் சாற்றை மோருடன் கலந்து குடிக்க குணமாகும். முதுமைப் பருவத்தில் தோன்றுகிற கடுமையான இருமலுக்கு வெங்காயத்தை வதக்கி வெல்லம் கலந்து சாப்பிட குணம் தெரியும்.

மூளையின் ஆற்றலை வலுப்படுத்தும் சக்தி வெங்காயத்துக்கு இருக்கிறது. அது நல்ல உடல் தேற்றும் டானிக்காகவும் திகழ்கிறது.

ஆகவே தினமும் வெங்காயத்தை சூப்பாகச் செய்து அடிக்கடி சாப்பிடலாம். இரவு தூங்குவதற்கு முன்பு ஒரு கோப்பை வெங்காய சூப் சாப்பிடுவது மிகவும் நல்லது. வெங்காயத்தை வேகவைத்து தேன், கற்கண்டு சேர்த்துச் சாப்பிடலாம்.

பற்களில் குறிப்பாக ஈறு பகுதிகளில் வீக்கம் கண்டு சீழ் வடிவதுண்டு. அப்போது வலியும் எரிச்சலும் கடுமையாக இருக்கும். இதற்கு சுடுநீரில் வெங்காயச் சாற்றைக் கொண்டு வாய் கொப்பளிக்கலாம். பஞ்சில் நனைத்து பாதிக்கப்பட்ட பற்களில் நன்றாகத் தடவி விடலாம்.

தோல் மற்றும் தலைமுடியின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவும். நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதோடு ஒவ்வாமை பிரச்சினைக்கும் முற்றுப்புள்ளி வைக்கின்றது.

வெங்காயத்தில் கொழுப்புச் சத்து மிக மிகக் குறைவு. அதனால் உடல் பருமனைக் குறைத்துக்கொள்ள விரும்புவோர் உணவில் வெங்காயத்தைத் தாராளமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

குருதி விருத்திக்கும் குருதிச் சுத்தத்துக்கு வெங்காயம் மிகவும் உதவிகரமாக இருக்கிறது. அதனால் உடல் அழகு ஏற்படுகிறது. உணவோடு வெங்காயத்தைச் சேர்த்துக் கொள்ளும்போது அந்த உணவு வெகு எளிதில் ஜீரணமாக வெங்காயம் உதவுகிறது.



# ஊர் சுற்றும் தேவாங்கு

■ நாவலூரான் வ.ஜசிந்தன்

ஆலமர இடுக்கில்
ஆற அமர உட்கார்ந்து
தேவர்கள் குறி சொல்லும்
தேவாங்கின் பயணமிது

மெல்ல எழுந்து
மெதுவாக அடிவைத்து
கொல்லைப் புறம் வழியாக
கோவில் தெரு செல்கிறது

நகர்கிறது பொழுது
நள்ளிரவோ பன்னிரண்டு
நடுத்தெருவின் கரையோரம்
நடுநடுங்கி ஓர் உருவம்

கல் மனம் கொண்டு
கடந்து அது செல்கையிலே
மணல்வீட்டின் திண்ணையிலே
மங்கை ஒருத்தி உறங்குகிறாள்

கண்ணிரண்டும் ஒளிகொள்ள
காதிரெண்டும் ஒலிமெல்ல
கணவன் - மனைவியின்
காதல் கதை மறுகுடிலில்

சொல்ல வார்த்தையற்ற
சோகக் கதையுமுண்டு
ஏழைக் குடியவனின்
எதிரொலியாய்ச் சலசலப்பு

இருளின் மறுவடிவம்
இன்னும் பலவுமுண்டு
இறுகிய மனதோடு அது
இடைநடுவே திரும்பியது

மனிதர்கள் பல வடிவம் அதில்
மானுடர்கள் சிலவடிவம்
ஓரிரவு சுற்றி வந்தால்
ஓராயிரம் நீயறிவாய்.




# விண்ணப்பம்

■ சிவரம்யா

உனக்கொரு விண்ணப்பம்...
என் இதயம் வேண்டுகிறது
தகுதிகள் பல உண்டு
அனுபவங்கள் மிகுதியாய் உள்ளன
வாழ்வில் முன்னேற உறுதி உண்டு
வேறு திறமைகள் இருப்பது சிறப்பு
ஆசைகள் நூறு உண்டு
எனக்கொரு சந்தர்ப்பம்
தயவுடன் வேண்டும்
இங்ஙனம்
கனவுக் காதலன்

## சொற்சிலம்பம் போட்டி இல: 586



அனுப்புபவர் பெயர்:..................................................

முழுமையான தபால் விலாசம்: ..................................

..........................................................................

கையொப்பம்:..........................................................

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தி யில் பொது உளச் சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப் படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ் டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 584
இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) சபதம் (4)எமது (7) குலம் (8) யாத்திரை (9) புகழ்தல் (11) தகராறு (14) லைலா (15) வலி (16)சரி (17)சாதல் (19) புதிய (20)காரம் (21)நண்பன் (22)தும்பிக்கை (23)தினை

### மேலிருந்து கீழ்

(1) சகுந்தலை (2) பல (3) தம்புரா (4) எத்தன் (5)மதில்(6) துரை (10) கறுவல் (12) கலாசாரம் (13) பெரியன்னை (16) சதிபதி (18) தம்பி (19)புண் (20)காது (21)நகை

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.586**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (18.09.2019 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.586 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 22.09.2019 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்ட சாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

### இடமிருந்து வலம்

1. ஐம்பெரும் காப்பியங்களுக்குள் ஒன்று
7. அரசன்
8. விழி
9. காடு
12. புனித இடம்
13. உடை
14. பிரசாரப் பேச்சு
17. நிறைதல்
19. தாழ்ப்பம்
20. ஒரு பாத்திரம்
21. பழங்கால ஆயுதம்
22. பத்துக்கு அடுத்தது

### மேலிருந்து கீழ்

1. கர்ப்பம் தரித்து ஆறாம் மாதம் செய்யும் சடங்கு
2. மென் அல்ல
3. மாலை கட்டு ஒரு பூவகை
4. சிறிய
5. விடாய்
6. மனிதன் ஆசை வைக்கும் பொருள்களுள் ஒன்று
10. வயிற்றில் குழந்தையைச் சுமப்பவள்
11. பதில்
13. விட்டத்தின் அரைவாசி
15. ஒரு குடிவகை
16. ஆடு,மாடு மேய்வது இதை
17. உங்களையே விடாது தொடர்வது
18. ஆண் பன்றி
19. வெப்பத்தால் நீர் மாறுவது இப்படி
20. விண்

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 584 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பிய வர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
கே. இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோவிலடி,
வட்டுக்கோட்டை.

**2 ஆம் பரிசு**
எம். ஆரோக்கியநாதன்,
தபாலகம்,
மன்னார்.

**3 ஆம் பரிசு**
க. தையல்நாயகி,
இந்திரகிரி,
வதிரி,கரவெட்டி.

**4 ஆம் பரிசு**
றொ. ஆன்லிஷா,
மே/பா. ஜே.றொபின்சன்,
4ஆம் கட்டை, ஆனைக்கோட்டை.

**5 ஆம் பரிசு**
சதுர்ஜா அருள்லிங்கம்,
இல.364/B, சாந்தசோலைவீதி,
தம்பனைச் சோலை,
வவுனியா.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

## பாராட்டுப் பெறுவோர்

ச. வசந்தராணி,
பண்டித்தாழ்வு,
காரைநகர்.

தமிழினி பிறிம்றூபன்,
இல.43/1 மணல்தறை வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

ச. கலைஜன்,
முள்ளானை பிள்ளையார்,
கோவிலடி இளவாலை.

**சொற்சிலம்பம் போட்டி 584 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

நித்திய சுகம் 436

உடலே கோயில்

சி.சிவன்சுதன்

# நீரிழிவு உள்ளவர்களுக்கு சுவையான உணவுமுறை

நீரிழிவு உள்ளவர்கள் உண்ணக்கூடிய ஆரோக்கியமான உணவு வகைகள் உண்மையிலே அனைவருக்குமே பொருத்தமான தெரிவாக அமைந்துள்ளன. இந்த உணவு வகைகள் சுவை நிறைந்தனவாக சமையல் செய்து உண்பது மனதுக்கும் உடலுக்கும் புத்தூக்கத்தை கொடுத்து மனிதனின் ஆரோக்கியத்தை வளர்க்க உறுதுணையாக அமையும்.


**சுவையாக எவற்றை உண்ண முடியும்?**

முட்டை, பால், கோழி இறைச்சி, மீன், இறால், தயிர், மோர் போன்றவை அதிக புரதத்தையும் விற்றமின்கள் மற்றும் கனியுப்புக்களையும் கொண்டவை. இவற்றை உங்களுக்கு பிடித்த சுவையான வடிவத்தில் தயார் செய்து உண்ண முடியும். சமையலின் பொழுது வாசனைத் திரவியங்கள் போதியளவு உறைப்பு, புளி, மஞ்சள், இஞ்சி, சீரக வகைகள், வெந்தயம், மல்லி போன்றவற்றை வேண்டியளவில் சேர்த்துக்கொள்ள முடியும். இவை உடல் நலத்துக்கு நன்மை பயப்பவையாக அமைவதுடன் உணவின் சுவையையும் அதிகரிக்க உதவுகின்றன.

மரக்கறி வகைகளை தெரிவு செய்யும்போது வெவ்வேறு வர்ணங்களில் மாறிமாறி தெரிவு செய்ய வேண்டும். அப்பொழுது தான் எல்லா வகையான ஊட்டச் சத்துக்களும் எமக்குக் கிடைக்கும். பூசணி, கரட், பீற்றூட், முள்ளங்கி உட்பட்ட அனைத்து வகையான மரக்கறி வகைகளையும் பயன்படுத்த முடியும். நீரிழிவு நிலை உள்ளவர்கள் பழவகைகளை உண்ண முடியாது என்ற ஒரு தப்பபிப்பிராயம் நிலவுகின்றது. இது முற்றிலும் தவறானது. அன்னாசி, விளாம்பழம், பப்பாசிப்பழம், கொய்யாப்பழம், ஜம்புபழம், வாழைப்பழம், வத்தகப்பழம், தோடம்பழம், மாதுளம்பழம், நாவற்பழம் போன்ற பழவகைகள் சுவையும் ஊட்டச்சத்துக்களும் நிறைந்தவை. இவற்றை போதிய அளவில் உண்ண முடியும்.

பழங்கள் உண்ணும்பொழுது குளுக்கோஸின் அளவு சற்று அதிகரித்தாலும் கூட இவற்றை உண்ணுவதால் ஏற்படும் அனுகூலங்கள் பல மடங்கு அதிகமாகும். பழச்சாறுகளில் வெல்லத்தின் செறிவு அதிகமாகும். நார்த்தன்மை குறைவாகவும் இருப்பதுடன் பசியை கட்டுப்படுத்தும் வீதமும் குறைவாக இருக்கின்றது. எனவே பழங்களை பழச்சாறாக மாற்றி குடிப்பதிலும் பார்க்க பழங்காக உண்பது சிறந்ததாகும்.

கச்சான், கடலை, மரமுந்திரிகை (கயூ) பொட்டுக்கடலை போன்றவை உடல் ஆரோக்கியத்தை வளர்க்க உதவும்.



> “நீரிழிவு நிலை உள்ளவர்கள் பழவகைகளை உண்ண முடியாது என்ற ஒரு தப்பபிப்பிராயம் நிலவுகின்றது. இது முற்றிலும் தவறானது. அன்னாசி, விளாம்பழம், பப்பாசிப்பழம், கொய்யாப்பழம், ஜம்புபழம், வாழைப்பழம், வத்தகப்பழம், தோடம்பழம், மாதுளம்பழம், நாவற்பழம் போன்ற பழவகைகள் சுவையும் ஊட்டச்சத்துக்களும் நிறைந்தவை. இவற்றை போதிய அளவில் உண்ண முடியும்.

விட்டு இறங்கும் சந்தர்ப்பத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. உயிரிழந்த நபர் சாரதியுடன் பேசிவிட்டு இறங்குகின்ற சந்தர்ப்பத்தில் சாரதி வாகனத்தை செலுத்தியுள்ளார். இதன்போதே அதனுள் சிக்குண்டு அவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

டிப்பர் வாகனத்தின் மூலம் உயிரிழந்தவரின் வீட்டுக்கு மண் பறிக்கப்பட்டு வந்துள்ளது.

விபத்தில் முரசுமோட்டை ஐயன்கோவிலடி பகுதியை சேர்ந்த அல்வின் அனுரா என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். டிப்பர் வாகனச் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சடலம் கிளிநொச்சி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. விபத்து இடம்பெற்றமை தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ.5,6)

# மானிப்பாயில்...

பியை உடைத்து உட்சென்ற கும்பல் வீட்டில் இருந்தவர்களை கூரிய ஆயுதங்களால் தாக்கிவிட்டு பணம் மற்றும் நகை என்பவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளது.

60 வயதுடைய வயோதிபப் பெண்ணின் காலில் கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். மற்றொரு பெண்ணை, கோடாரியை ஒத்த ஆயுதத்தால் தலையில் தாக்கி காயப்படுத்தியுள்ளனர். காயமடைந்த இரு பெண்களும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வீட்டைச் சல்லடைபோட்டுத் தேடிய கொள்ளையர்கள் 50 ஆயிரம் ரூபாவையும், எட்டுப் பவுண் நகையையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். மானிப்பாய் பொலிஸார் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கொள்ளையர்கள் வீட்டில் விட்டுச் சென்ற கையுறையை மணந்த மோப்ப நாய், கொள்ளை இடம்பெற்ற வீட்டிலிருந்து 300 மீற்றர் தொலைவிலுள்ள வீட்டில் சென்று நின்றுள்ளது. இருப்பினும் அந்த வீட்டில் அந்தத் தருணத்தில் யாரும் இருக்கவில்லை.

(ஒ.5,26)

## மரண அறிவித்தல்

### திருமதி ஈஸ்வரி பஞ்சாட்சரம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை- உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம்)



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஈஸ்வரி பஞ்சாட்சரம் (07.09.2019) சனிக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அல்லமாப்பிரபு பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அருணாசலம் இரத்தினம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஆசிரியமணி அருணாசலம் பஞ்சாட்சரத்தின் (ஓய்வுபெற்ற அதிபர்) ஆருயிர் மனைவியும் காலஞ்சென்றவர்களான பரமசாமி.

இரத்தினம் மற்றும் நித்தியானந்தன். சதானந்தன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் வாசுகி (அதிபர். உரும்பிராய் சந்திரோதய வித்தி யாலயம்). சிவகலை (முன்னாள் ஆசிரியை, யாழ்.இராமநாதன் கல்லூரி). கணேசன் (கோட்டக்கல்விப்பணிப்பாளர். சண்டிலிப்பாய்). அம்பிகை (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும் மன்மதராசா (ஆசிரியர். யாழ்.நவாலி மகாவித்தியாலயம்). கிருபாகரன் (ஓய்வுபெற்ற மாவட்ட விளை யாட்டு அதிகாரி. கல்வி கலாசார பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம்). அகல்யா (ஆசிரியை, ஊரெழு கணேசா வித்தியாலயம்). சுரேஸ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான நடராசா. சிவப்பிரகாசம். அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் புராதனி. அபிலக்ஷன், விபூசன். வைசிகன். நிகேசிகா. விஷ்ணு. மீனாட்சி. தீர்த்தன். ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.09.2019) திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி வீதி,
ஒஸ்காலேன் அருகாமை
உரும்பிராய் தெற்கு. உரும்பிராய்

தகவல்
குடும்பத்தினர்
076 578 7488

**வாடகைக்கு**
யாழ். ரயில்வே நிலையத்திற்கு அண்மையாக அத்தியடி புதிய வீதியில் வீடாகவோ. அலுவலமாகவோ பாவிக்கக்கூடிய 1300 சதுரஅடி விஸ்தீரணமுள்ள வீடு 4பரப்பு காணியுடன் (Car Parking Facilities Included) வாடகைக்கு உள்ளது.
தொடர்பு:- 076 824 6113

## கண்ணீர் புஷ்பங்கள்



அமரர் நியாய சிரோமணி கி. சுப்பிரமண்ய சாஸ்திரிகளின் பாரியாரும் எமது சம்மந்தியாருமான

**ஸ்ரீமதி கமலாதேவி சுப்பிரமண்ய சாஸ்திரி**

களின் மறைவு எம்மை துயரில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் பிரிவால் வாடும் குடும்பத்தவர்களுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறுவதோடு அவரின் ஆத்மா சிவகாமி அம்பாள் சமேத சிதம்பர நடராஜப் பெருமானின் திருவடி நிழலையடைய வேண்டுமென அம்பிகையைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி

சிவஸ்ரீ. ச. மஹேஸ்வரக்குருக்கள் குடும்பத்தார்கள்
கந்தரோடை, மானிப்பாய்

# முன்பள்ளிக் கல்வியை மெருகூட்ட வேண்டும்

## மாகாணக் கல்வி அமைச்சின் நிர்வாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

கொடிகாமம், செப். 8

இலங்கைமுழுவதற்குமானமுன்பள்ளிக்கல்விமுறைமைப் பாடத் திட்டம் தயாரிக்கப்பட்டு இப்பொழுதும் இருக்கின்றது. அது மெருகூட்டப்பட்டு, சீராக்கப்பட்டு, தமிழில் பொறிக்கப்படவேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் நிர்வாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா. கந்ததாசன் தெரிவித்தார்.

தென்மராட்சி வலயமட்ட முன்பள்ளி மழலைகள் விளையாட்டு விழா சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரண்டு வாரங்களுக்கு முன்பதாக முன்பள்ளி தொடர்பான செயலமர்வு ஒன்றிலேகலந்துகொண்டேன். அதிலே பல சுவாரஸ்யங்கள் இடம்பெற்றன. முதலாவதாகவடக்கு மாகாணத்தில் மட்டுமே முன்பள்ளி ஆசிரியர்களுக்குபெருந்தொகைப் பணம் வழங்கப்படுகின்றது. சம்பளமாக கிழக்கு மாகாணத்தில் மூவாயிரம் ரூபாவும் மற்றும் இரண்டு மாகாணங்களில் 2 ஆயிரத்து 500 ரூபா வும் ஏனைய மாகாணங்களில் பெற்றோர்களின் முழுப்பங்களிப்பிலும்தான்சம்பளம்வழங்கப்படுகின்றது.

அரசால் சம்பளம் வழங்கப்படுவதில்லை. அந்த வகையில் வடக்கு மாகாணம் முன்னணியில் நிற்கிறது. முன்பள்ளிகளும் எமது கல்வி முறைமைக்



குள்ளேகொண்டுவரப்பட வேண்டும். பிள்ளையின் கல்வி இரண்டரை வயதிலேயே தொடங்கி விடுகிறது. இரண்டரை வயதிலேயே அரசு அதனைப் பொறுப்பேற்க வேண்டும். முன்பள்ளிஅரசமயமாக்கப்படல் வேண்டும். முன்பள்ளி ஆசிரியைகளுக்கு உரிய பயிற்சி வழங்கப்பட வேண்டும். பெற்றோர்களின் பங்களிப்பு ஒத்துழைப்புகளுடன் முன்பள்ளி கல்வியிலேமாணவர்கள்உரிய முறையில் சரியாக ஈடுபடுத்தப்படவேண்டும்என்பது தொனிப் பொருளாகக்காணப்படுகின்றது.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா பயிற்சி நெறிகளைப் முழுமைசெய்தவர்களுக்கான சம்பளங்கள் உரியவாறாகத் திட்டமிடப்பட்டு வழங்கப்பட வேண்டும் என்பதுதீர்மானமாகமேற்கொள்ளப்பட்டது. அந்த வகையில் காலத்துக்கு ஏற்ப மாறிக்கொண்டு வருகின்றது - என்றார்.

தென்மராட்சிவலயக்கல்விப் பணிப்பாளர் த. கிருபாகரன்உரையாற்றுகையில்தெரிவித்ததாவது:

முன்பள்ளிஆசிரியர்கள் மிகவும்அர்ப்பணிப்பாகச் செயற்படுகின்றனர். அவர்களுக்குவழங்கப்படும் ஊதியம் மிக மிகக் குறைவு என்றாலும், அவர்கள் அதைப்பற்றிச் சிந்திக்காமல் தங்களிடம் வந்த பிள்ளைகளை சொந்தப்பிள்ளைகளாகக் கருதி நடத்துகின்றனர். இங்கு குழுச் செயற்பாடு தான் இடம் பெற்றது. குழுச்செயற்பாட்டில் ஒன்றாகக்கூடி தங்களுடைய கருத்துக்களை ஏனையவர்களுடன்சகோதரமாக நண்பர்களாக சேர்ந்து இயங்குகின்றமையை இங்கு ஏற்படுத்தியிருக்கிறார்கள்-என்றார். (து-159)

## கற்றல் வள நிலைய திறப்பு விழா

கொடிகாமம், செப். 8

'அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' எனும் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் கொடிகாமம் திருநாவுக்கரசுஆரம்பப்பாடசாலையில் அமைக்கப்பட்ட புதிய இரண்டு மாடிக் கட்டட ஆரம்ப கற்றல் வள நிலை யத் திறப்பு விழா நாளைமறுதினம்திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும்.

அதிபர் திருமதி புஸ்பராணி மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மைவிருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிவலயக்கல்விப் பணிப்பாளர் த. கிருபாகரன், மதிப்புறு விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபையின் உபதவிசாளர் செ. மயூரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (க-159)

## மைதானத்தில் அடித்துக் கொலை: வழக்கு ஒக். 18 அன்று ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப். 8

வட்டுக்கோட்டைபிக்னல்மைதானத்தில் இளம்குடும்பத் தலைவர் ஒருவர்கொலைசெய்யப்பட்டமைதொடர்பாக 6 பேருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பத்திரிகை மீதான விசாரணைகளை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 18ஆம் திகதி வரை ஒத்திவைத்து, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

எதிரிகள் தரப்பால் விண்ணப்பம் செய்யப்பட்டதற்கு அமைய பெரும் குற்றத் தகவல் புத்தகங்கள் இரண்டில் இடைச்செருகல்கள், புனைவுகள் இடம்பெற்றுள்ளதா? என்பதுதொடர்பில்விளக்கமானபதில்களைஅறிக்கை வடிவில் தாமதமின்றி வழங்க வேண்டும் என்று அரச இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு உத்தரவிட்டு, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் கட்டளையிட்டார்.

அதற்காக பெரும் குற்ற தகவல் புத்தகங்கள் இரண்டும் மன்றின் பொறுப்புக்கு எடுக்கப்பட்டு, வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் ஊடாக முத்திரை (சீல்) இடப்பட்டு அதை அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கவும், அதற்கான உரிய அறிவுறுத்தல்கடிதங்களைவழங்கவும், பதிவாளருக்கு அறிவுறுத்தல் வழங்கிய மேல் நீதிமன்றம், இரசாயனப் பகுப்பாய்வு நடவடிக்கைகள் தொடர்பில் சிறப்புக் கவனம் செலுத்தி மிக விரைவாக ஆய்வறிக்கையை மன்றுக்குப் பெற்றுச் சமர்ப்பிக்க வேண்டும் என்று வட்டுக்கோட்டைபொலிஸ்நிலையபொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டது.

வட்டுக்கோட்டையாழ்ப்பாணக்கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையில் நடந்த ராஜன் கதிர்காமர் வெற்றிக்கிண்ணத்துக்கான 50 ஓவர்கள் துடுப்பாட்ட போட்டி 2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதி வட்டுக்கோட்டை பிக்னல் மைதானத்தில் இடம்பெற்றது.

இந்தப் போட்டில் இருதரப்பினருக்கு இடையே முறுகல் ஏற்பட்டு, அது கைகலப்பாக மாறியது. கைகலப்பில் யாழ்ப்பாணம் பிரதான வீதியைச் சேர்ந்தவரும் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவனுமான ஜெயரட்ணம் டினோசன் அமலன் (வயது-24) என்னும் ஒரு பிள்ளையின் தந்தை உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தையடுத்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் 9 பேர் வரை சரணடைந்தனர். மல்லாகம் நீதிமன்றில் சுருக்கமுறையற்ற விசாரணை இடம்பெற்றது. அதையடுத்து 6 பேருக்கு எதிராக கொலைக் குற்றச்சாட்டின் கீழான குற்றப்பத்திரிகை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சட்ட மா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டது. கடந்த 5ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை தொடர் விளக்கத்துக்கு மேல் நீதிமன்றம் திகதியிட்டிருந்தது. கடந்த வியாழக்கிழமை விளக்கத்துக்காக வழக்கு அழைக்கப்பட்டது.

வழக்குத் தொடுநர் சார்பில் அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் மன்றில் முன்னிலையானார். முதலாவது எதிரிக்காக அரச தலைவர் சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரனும், இரண்டாவது எதிரி சார்பில் நளின் ஏனைய எதிரிகளுக்காகசட்டத்தரணிகள்வி. திருக்குமரன், கே. சுகாஷ் ஆகியோரும் முன்னிலையானார்கள்.

எதிரிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், "இந்தவழக்கில்நியாயமானவிளக்கம் இடம்பெறவேண்டும். வழக்கின் முதல் ஆதாரமான தகவல் புத்தகத்தில் இடைச் செருகல்கள், புனைவுகள் இடம்பெற்றுள்ளன. அவற்றைவிளக்கத்துக்குமுன்னதாகஆய்வுக்குட்படுத்தப்பட்டுஉறுதிப்படுத்தப்படவேண்டும்" என்றுவிண்ணப்பம் செய்தனர்.

வழக்குத்தொடுநர் சார்பில்முன்னிலையான அரசசட்டவாதி மாதினி விக்னேஸ்வரன், எதிரிகள் தரப்புச் சட்டத்தரணிகளின் விண்ணப்பத்தைகடுமையாகஆட்சேபித்ததுடன்நியாயமானவிளக்கம்இடம்பெறுவதற்குமாறான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று மன்றுரைத்தார்.

இரு தரப்பு விண்ணப்பங்களையும் ஆராய்ந்து நியாயமான விளக்கம் இடம்பெறுவதை உறுதி செய்யும் வகையில் எதிரிகள் தரப்புச் சட்டத்தரணிகளின் விண்ணப்பத்துக்கு அனுமதியளித்து கட்டளை வழங்கியது. (எ-37)

## மரண அறிவித்தல்

பிறப்பு 23 . 03 . 1946



இறப்பு 06 . 09 . 2019

### கந்தையா கெங்கநாதன்

**(ஓய்வுபெற்ற நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்)**

கல்வியங்காடு, விநாயகர் வீதி, நல்லூர் வடக்கைப்பிறப்பிடமாகவும் முரசுமோட்டை 3 ஆம் யூனிற்றை வசிப்பிடமாகவும் தற்போது வவுனியாவில் வசித்துவந்தவருமான கந்தையா கெங்கநாதன் (ஓய்வுபெற்ற நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்) 06.09.2019 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா பொன்னம்மா தம்பதிகளின்அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கனகலிங்கம் நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் புஸ்பராணியின் அன்புக்கணவரும் தயாளசீலன், தர்சினி, சறோஜினி, சுபாஜினி, தர்மசீலன், ஆகியோரின் பாசமிக்க தந்தையும் லக்சனா, காலஞ்சென்ற ஜெயம் மற்றும் நாதன், மோகன், காயத்திரி ஆகியோரின் அன்பு மாமனும் கிஷானா, டிருஜன், சுபீசனா, விருஜன், லவ்யன், சாரங்கன், யாதவி, மதுமிதா, நர்மிதா, ஜவின் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, இராசையா, மயில்வாகனம், சிவக்கொழுந்து இராசேந்திரம் மற்றும் மனோன்மணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற நாகமுத்து மற்றும் நாகம்மா காலஞ் சென்ற ஜானகியம்மா மற்றும் மனோன்மணி, நீலாயதாட்சி காலஞ்சென்ற குஞ்சிதபாதம் மற்றும் தவமணி, பாலசுப்பிரமணியம், கௌரி, விமலாதேவி, கனகாம்பிகை ஈஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் குணரட்ணம், கனகம்மா, சந்திரசேகரம், தம்பிநாதன், ஞானச்சந்திரன், படியலிங்கம் ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2019) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் திருநாவற்குளம் வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 02.00 மணியளவில் பூதவுடல் பத்தினியார் மகிழங்குளம் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். **தகவல் : குடும்பத்தினர்**

திருநாவற்குளம், வவுனியா

புஸ்பராணி - 0094778244208, தயா- 0041787664887
தர்சினி - 0012895523594, சறோ - 00358415405153
சுபா- 0016479641772, கண்ணன் - 00447473161100

## முன்வைத்த...

ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர் சஜித் பிரேமதாசவுக்கும் ஆதரவு வழங்கும் ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு சுகததாச உள்ளக அரங்கில் நேற்று இடம் பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளராக நான் களமிறங்க வேண்டும் என்று தற்போது அடிமட்டத்தில் இருந்து ஆதரவு குரல் எழும்பியுள்ளது. அரச தலைவர் வேட்பாளராக களமிறங்கும் அனைத்து தகுதிகளும் எனக்கு உண்டு. அரச தலைவர் வேட்பாளர் தொடர்பில் இதர கட்சிகளின் தீர்மானங்கள் அவர்களின் தனிப்பட்ட தீர்மானமாகும். ஆனால் அரசியல் களத்தில் நாட்டு மக்களுக்கு உண்மை நிலவரங்கள் எடுத்துரைக்கப்பட வேண்டும்.

அரசியல் மற்றும் மக்கள் சேவைகளில் இருந்து மிக தொலைவில் உள்ளவர்களே இன்று மக்களாணையை பெற முயற்சிக்கின்றார்கள். ஆனால் நான் அவ்வாறு அல்ல., எனது தந்தையார் முன்னாள் அரச தலைவர் ரணசிங்க பிரேமதாச கட்சிக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் சேவையாற்றி உயிர் தியாகம் செய்தார். அவர் வழியிலே நானும் அரசியல் பணியைத் தொடர்ந்துள்ளேன். பல்லாயிரக் கணக்கான மக்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்களின் அரசியல் தீர்மானங்கள் ஒருமித்து காணப்படும் போது கட்சித் தலைமைத்துவம் மக்களின் குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களின் அரசியல் அபிப்பிராயங்களை செயற்படுத்துவதில் தயக்கம் காட்டும் பின்னணியை அறிய முடியவில்லை.

மக்களின் அரசியல் தீர்மானமே நெறிப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகவே நாடு தழுவிய ரீதியில் தொடர் மக்கள் சந்திப்புக்கள் இடம்பெறுகின்றன. ஐக்கிய தேசியக் கட்சியை பலவீனப்படுத்தி அதிகாரத்துக்கு வரும் நோக்கம் ஒருபோதும் கிடையாது. இன்று பலருக்கு யதார்த்த அரசியல் நிலமையும், கடந்து வந்த அரசியல் பாதைகளும் மறக்கப்பட்டுள்ளன.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் அரசமைப்புக்கு முரணாக ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டமை யாவரும் அறிந்ததே. நெருக்கடி வேளையில் பலமுறை தலைமை அமைச்சர் பதவியை பெற்றுக் கொள்ளுமாறு அரச தலைவர் குறிப்பிட்ட போது.நான் மறுத்தேன். அதற்கு காரணம் தலைமை அமைச்சர் பதவிக்கு நான் தகைமையற்றவன் என்ற அர்த்தத்தில் அல்ல. அந்தப்பதவியைபெற்றுக்கொள்ள கூடாது என்பதே ஆகும். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பெரும்பான்மை ஆதரவுடனே தெரிவு செய்யப்பட்டார். ஆகவே அவரே அந்தப் பதவியை வகிக்க வேண்டும்.

குறுக்கு வழியிலோ சூழ்ச்சியினாலோ ஒருபோதும் அதிகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் கிடையாது. மக்களின் ஆதரவு முழுமையாக காணப்படுகின்றது. மக்களாணையின் ஊடாகவே உயர் பதவியைப் பெறுவேன். இதில் எவ்வித மாற்றமும் கிடையாது. தற்போது முன்னெடுத்துள்ள இப்போராட்டத்தில் இருந்து சிறிதேனும் பின்வாங்க மாட்டேன்.

2015ஆம் ஆண்டு நாட்டில் பேச்சு சுதந்திரம், அரசியல் சுதந்திரம் உள்ளிட்ட அடிப்படை உரிமைகள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் நல்லாட்சியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டும் இந்நிலைமையே தொடரும். ஐக்கிய தேசியக்கட்சி நாட்டு மக்களுக்கு சிறந்த அபிவிருத்திகளையே தொடர்ந்து முன்னெடுக்கும் - என்றார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவை எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் வேட்பாளராக பெயரிடவேண்டும் என்று அந்தக் கட்சியின் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களால் ஏகமனதான தீர்மானமும் இதன்போது நிறைவேற்றப்பட்டுள்ளது. (ஒ.5,31)

## ரணிலை...

வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் மாநகர சபை எவ்வாறு அழிக்கப்பட்டது என்பது வரலாற்றில் பதியப்பட வேண்டிய விடயம். நூலகம் ஓர் இரவில் தீக்கிரையானது. ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்திலேயே இது நடந்தது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சராக இருந்த காலப் பகுதியிலேயே அவருடைய சகாக்களால் இது தீக்கிரையாக்கப்பட்டது. மாநகர சபைக் கட்டடமானது, கோட்டையில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினரால் எறிகணை விழுந்து தகர்க்கப்பட்டது. இவ்வாறு அழிக்கப்பட்டவற்றை, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஆகியோர் இணைந்து மீளக் கட்டுவது வடக்கு மக்களுக்கு, யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களுக்கு மட்டுமன்றி இலங்கையில் வாழும் அனைத்து மக்களுக்கும் ஒரு முக்கியமான செய்தி. இனி மேலும் இவ்வாறான சம்பவங்கள் நடக்காது என்பதுதான் அந்தச் செய்தி.

இவ்வாறான சம்பவங்கள் மீள நிகழாமல் இருப்பதற்கு நாட்டில் அரசியல் உறுதிப்பாடு இருக்கவேண்டும். வெறும் பௌதிக அபிவிருத்தி அதனை உறுதிப்படுத்தாது. அதற்கான முன்னெடுப்புக்களும் செய்யப்படுகின்றன. அவை உறுதி செய்யப்படவில்லை. பின்னடிக்காது அவை முன்னெடுக்கப்பட வேண்டும்.

எமது மக்கள் கொன்று குவிக்கப்படாத, எமது சொத்துக்கள் சேதப்படுத்தப்படாதவாறு, தமிழ் மக்கள் தனித்து வாழ்வதற்கான அரசியல் அத்திபாரம் போடப்பட வேண்டும். அதனை இந்த முக்கிய தருணத்தில், தமிழ் மக்களின் பிரதிநிதியாகச் சொல்லவேண்டிய கட்டாயம் உள்ளது.

யாழ்ப்பாண தமிழ் மக்களின் கலாசாரம் எந்தளவுக்கு முக்கியமானதென்பதை தலைமை அமைச்சர் நன்கு அறிவார். இந்தப் பகுதியில் ஏற்படும் அபிவிருத்திப் பணிகளுக்கு அவர் சிறப்பு முக்கியத்துவம் கொடுப்பதை மெச்சவேண்டும். அதற்கு நன்றி செலுத்தவேண்டும் - என்றார். (ஒ.5,21,105,106)

## வெளிவாரிப்...

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு, ஜெட்விங் விடுதியில் மதிய போசனம் வழங்கப்பட்டது. இதன்போதே, வெளிவாரிப் பட்டதாரிகளின் பிரதிநிதிகளுடன் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சந்திப்பை மேற்கொண்டார்.

தமது கோரிக்கைகள் தொடர்பில் தலைமை அமைச்சரிடம் பட்டதாரிகள் மனுவைக் கையளித்தனர். இந்த முறை நியமனத்தின்போது வெளிவாரிப் பட்டதாரிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதால், 2016ஆம் ஆண்டு வரையில் பட்டம் பெற்ற வெளிவாரிப் பட்டதாரிகளுக்கு உடனடியாக நியமனம் வழங்கவேண்டும். அதேபோன்று, எச்.என்.டி.ஏ. பட்டதாரிகள் தாக்கல் செய்த வழக்கில், அவர்களுக்கு நியமனம் வழங்கவேண்டும் என்று கடந்த காலத்தில் நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. இதனைப் போன்று ஏனைய வெளிவாரிப் பட்டதாரிகளையும் உள்வாங்க வேண்டும் என்று கோரினார்கள்.

இதற்குப் பதிலளித்த தலைமை அமைச்சர், இரண்டாம் கட்டமாக ஒரு தொகுதிப் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது. அதில் வெளிவாரிப் பட்டதாரிகளும் உள்ளடக்கப்படுவார்கள். அதன் பின்னர் எஞ்சியோர் தொடர்பில் கவனம் செலுத்தப்படும்- என்றார். (ஒ.5,105)

## வடக்கில்...

ரணவக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை மண்டபத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு மாநகர சபை மைதானத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பான மாநகர மண்டப கட்டடம் அரசியல் நோக்கம் கொண்டு அபிவிருத்தி செய்யப்படவில்லை. அதில் எவ்வித குறுகிய சிந்தனைகளும் இல்லை. நாம் ஆட்சிக்கு வந்தது முதல் அபிவிருத்தியை நோக்காக கொண்டு செயற்பட்டு வருகின்றோம். இந்தக் கட்டடத்தை அமைக்க வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க முன்னர் நான் இங்கு வந்திருந்தேன். இங்குள்ள அதிகாரிகள் அனைவரையும் இணைத்து அவர்களின் கருத்துகள் அபிப்பிராயங்கள் எல்லாம் கேட்டே இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. எமது நாடு கடந்த காலங்களில் பல இன்னல்களைச் சந்தித்தது. நாட்டில் கிளர்ச்சி, உள்நாட்டு போர் காரணமாக பல பாதிப்புகளை சந்தித்தோம். வடக்கில் மட்டும் மக்கள் கொல்லப்படவில்லை. தெற்கிலும் 60 ஆயிரம் இளையோர் கொல்லப்பட்டனர். இந்த பாதிப்புக்களால் தமிழர்கள் அதிகமாக கனடாவிலும் சிங்களவர்கள் அதிகமாக ஆஸ்திரேலியாவுக்கும் புலம் பெயர்ந்து வாழ்கின்றனர்.

நாட்டில் உள்ளவர்கள் புலபெயர் நாடுகளுக்கு தப்பித்துச் செல்லாது இங்கு வாழக் கூடிய சூழலை உருவாக்க வேண்டும். மக்கள் அனைவரும் நல்லிணக்கத்துடன் ஒற்றுமையாக வாழ வழி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதற்கு நடைமுறை சாத்தியமான விடயங்களை முன்னெடுக்க வேண்டும் - என்றார். (ஒ.5,105)

## தேர்தல்...

மாநகர சபை மண்டபம் வெறுமனே சின்னமாக இருக்காது, எமது அடிப்படை அரசியல் சிந்தனைகளை மாற்றக் கூடிய வகையில் அமைய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாநகர மண்டபத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு மாநகர சபை மைதானத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாங்கள் விழுந்து போன ஒரு தேசத்தின் விளிம்பில் இருக்கிறோம். மீளக் கட்டியெழுப்பவேண்டிய பெரிய பொறுப்பு எங்களுக்கு உள்ளது. பேச்சுக்களைக் குறைத்து கடுமையாக உழைக்கவேண்டும் என்று காலமும் கடவுளும் எங்களுக்கு கட்டளையிட்டுள்ளார்கள். யாழ்ப்பாண மாநகர சபை என்ற இடம், எங்கள் அண்மைக் கால வரலாற்றிலே ஒருநாளும் மறக்கக் கூடாத, மறக்க முடியாத ஒரு வரலாற்றை சிலநேரங்களில் கண்ணீராலும், சிலநேரங்களில் குருதியாலும் எழுதிச் சென்றிருக்கிறது என்றே நாங்கள் எல்லோரும் அறிவோம்.

இந்த புதிய கட்டடம் உருவாக்குவது சில வேளைகளிலே ஒருதிசை திருப்பம். எங்களுடைய அரசியலிலும், சமூகத்திலும், எங்களுடைய எண்ணங்களிலும் இருக்க வேண்டிய, இருக்கக்கூடிய ஒரு திசைமாற்றம் என்று நான் கருதுகிறேன். மாநகர சபை 1892ஆம் ஆண்டு உருவாக்கியது என்றுதான் விக்கிப்பீடியா கூறுகிறது. எனக்குத் தெரியவில்லை அது. ஆனால், இப்போதிருக்கிற மாநகர சபை 1949 ஆண்டு உருவாக்கப்பட்டது என்று சொல்லப்படுகிறது. இலங்கை சுதந்திரம் பெற்று ஒரு வருடகாலத்துக்குள் யாழ்ப்பாண மாநகர சபை உருவாக்கியுள்ளது.

எங்கள் அண்மைக் காலத்திலே இருந்த அரசியல், வன்முறையான அரசியலுக்கு மாறுவதற்கு, மாறிய நாள் கூட இந்த மாநகர சபையின் மாநகர பிதாவின் படுகொலையால்தான் என்பதையும் ஞாபகப் படுத்திக்கொள்ளவேண்டும்.

கட்டடத்தை யார் வேண்டுமானாலும் கட்டி விடலாம், பணம் இருந்தால் அதை சுலபமாகவே கட்டலாம். ஆனால், ஜனநாயத்தைக் கட்டிவிடமுடியாது. அது அவளவு சுலபம் அல்ல. வெறுமனே இந்தக் கட்டடத்தை கட்டி முடிப்பதுடன் மட்டுமல்லாது வடக்கு மாகாண மக்களுக்கு அதிலும் குறிப்பாக யாழ்ப்பாண மக்களுக்கு ஜனநாயகத்தை கட்டியெழுப்பும் கேந்திர நிலையமாக யாழ். மாநகர சபை மண்டபம் அமைய வேண்டும் -என்றார். (ஒ.5,21)

## நகர...

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை மண்டபத்துக்கு அடிக்கல் நட்ட பின்னர் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாநகர முதல்வர் ஆனோல்ட் இல்லாதுவிட்டால், இந்தக் கட்டடம் அமைந்திருக்காது. அவர் பல தடவைகள் நிதியைக் கோரினார். குடைச்சல் கொடுத்துக் கொண்டேயிருந்தார். அவரைப் போன்றவர்கள்தான் எமக்குத் தேவை.

போர் காரணமாகவே மாநகரம் சிதைவடைந்தது. இதனை மறுசீரமைக்க 1987ஆம் ஆண்டும், 2002ஆம் ஆண்டும்நாம்முயற்சிகளை முன்னெடுத்தோம். போர்க் காலத்தில் வடக்கு- கிழக்கு மாகாணங்களிலுள்ள மாவட்டங்கள் அழிவடைந்திருந்தன. யாழ்ப்பாணத்தை அபிவிருத்தி செய்யவேண்டும் என்று நாங்கள் ஆட்சி பீடமேறிய 2015ஆம் ஆண்டே முடிவு செய்தோம். யாழ்ப்பாணம் தமிழர்களின் கலாசாரம். நல்லூர் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. இந்தக் கட்டடத்தையும், மாநகரையும் நாங்கள் கட்டி எழுப்புவோம். நகர மண்டபத்தையடுத்து சந்தைக் கட்டடமும் அமைக்கப்படும்.

பலாலி வானூர்தி நிலையம், பன்னாட்டு வானூர்தி நிலையமாக அபிவிருத்தி செய்யப்படுகின்றது. தற்போது இந்தியாவுடன் சேவைகள் இடம்பெறும். பின்னர் பன்னாட்டு வானூர்தி தளமாக அது மாறும். சுற்றுலாப் பயணிகளை தீவகத்துக்கு ஈர்க்கும் முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன. காங்கேசன்துறைதுறைமுகமும் அபிவிருத்தி செய்யப்படும். பூநகரிப் பிரதேசமும் பெரியளவு அபிவிருத்தியைக் காணவுள்ளது.

இந்தப் அபிவிருத்திப் பணிகளுக்கான தனியான நிதியத்தை உருவாக்கவுள்ளோம். இதற்கு குறைந்தது 100 பில்லியன் ரூபாய்களாவது இருக்கவேண்டும். யாழ்ப்பாணத்தைக் கட்டியெழுப்புவேன். இதற்குப் பாதகமான போதையை கட்டுப்படுத்த வேண்டும். இதற்காக மீன்பிடியை கரையோரத்திலிருந்து ஆழ்கடலுக்கு கொண்டுசெல்ல நாம் திட்டமிட்டுள்ளோம். அதற்கு ஒத்துழைக்கவேண்டும். உங்கள் நேசக் கரத்துடன் யாழ்ப்பாணத்தை மீளக் கட்டியெழுப்புவோம்- என்றார். (ஒ.5,21,105)

உயரம் பாய்தல் போட்டியில்


# யதுர்சன் சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றார்

யாழ்ப்பாணம்,செப்.8
வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்படும் வடக்கு மாகாண மெய்வன்மைப் போட்டியில் ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் சார்பில் கலந்து கொண்ட யதுர்சன் புதிய சாதனையுடன் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்படும் வடக்கு மாகாண மெய்வன்மைப் போட்டி இடம்பெற்று வருகின்றது. நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் சார்பில் கலந்துகொண்ட யதுர்சன் 1.92 மீற்றர் தூரம் பாய்ந்து புதிய சாதனையைப் படைத்ததோடு, தங்கப் பதக்கத்தையும் கைப்பற்றினார்.

2018ஆம் ஆண்டு வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட வடக்கு மாகாண மெய்வன்மைப் போட்டியில் ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய நவீன் ராஜ், யாழ்ப்பாணம் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய யதுர்சன் ஆகியோர் 1.91 மீற்றர் தூரம் பாய்ந்து சாதனையொன்றை நிலைநாட்டியிருந்தனர். இந்தச் சாதனையை மீண்டும் யதுர்சன் முறியடித்து புதிய சாதனையைப் படைத்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் சார்பில் கலந்து கொண்ட என். சுபீஜன் 1.82 மீற்றர் தூரம் பாய்ந்து வெள்ளிப்பதக்கத்தையும், மன்னார் மாவட்டத்தின் சார்பில் கலந்து கொண்ட ஜீ.ஜேக்கப் 1.78 மீற்றர் தூரம் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (23)




10 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில்

# கிந்துசன் சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றார்

யாழ்ப்பாணம்,செப்.8
வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்படும் வடக்கு மாகாண மெய்வன்மைப் போட்டியில் ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் வவுனியா மாவட்டத்தின் சார்பில் கலந்து கொண்ட கிந்துசன் புதிய சாதனையுடன் தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்படும் வடக்கு மாகாண மெய்வன்மைப் போட்டி இடம்பெற்று வருகின்றது.

நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்ற ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் வவுனியா மாவட்டத்தின் சார்பில் கலந்து கொண்ட கிந்துசன் 33 நிமிடம் 57 செக்கன் 09 வினாடிகளிவ் ஓடி முடித்து 6 வருடங்களின் பின்னர் இந்தப் புதிய சாதனைப் படைத்தார். அத்துடன் தங்கப் பதக்கத்தையும் கைப்பற்றினார். 2013ஆம் ஆண்டு வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட வடக்கு மாகாண மெய்வன்மைப் போட்டியில் முல்லைத்தீவு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய தேவராசா 34 நிமிடம் 04 செக்கன் 6 வினாடிகளில் ஓடி முடித்து நிலை நாட்டிய சாதனையை இவர் முறியடித்தார்.

வவுனியா மாவட்டத்தின் சார்பில் கலந்து கொண்ட நிசோபன் 36 நிமிடம் 24 செக்கன் 7 வினாடிகளில் ஓடி முடித்து வெள்ளிப்பதக்கத்தையும், வவுனியா மாவட்டத்தின் சார்பில் கலந்துகொண்ட கனகரெத்தினம் 37 நிமிடம் 49 செக்கன் 7 வினாடிகளில் ஓடி முடித்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (23)



# நேதாஜி அணி வெற்றி

யாழ்ப்பாணம், செப்.8
வல்வை தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்கு பற்றும் சுழல் கிண்ண கால்பந்தாட்டச்சுற்றுத் தொடரில் நேதாஜி அணி வெற்றி பெற்றது.

நேற்று இடம் பெற்ற ஆட்டத்தில் நேதாஜி அணியை எதிர்த்து உதயசூரியன் அணி மோதியது. ஆட்ட நேரமுடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் நேதாஜி அணி வெற்றி பெற்றது. (23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,செப்.8
மன்னார் சுப்பர் லீக் ரி-20 துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் தாழ்வுபாடு விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இதில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் பந்தர்ஸ் அணியை எதிர்த்து மன்னார் றைடர்ஸ் அணி மோதவுள்ளது. பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் சுப்பர் கிங்ஸ் அணியை எதிர்த்து மன்னார் பைரட்ஸ் அணி மோதவுள்ளது. (23)

---

யாழ்ப்பாணம், செப்.8
மன்னார் கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் எடிசன் சுற்றுக் கிண்ணத்துக்கான அணிக்கு 11 வீரர்கள் பங்கு பற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமகின்றன.

இதில் அடம்பன் பிரதேச சபை மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பெரிய பண்டி விரிச்சான் மரிய கொறற்றி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நானாட்டான் டயமன்ஸ் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. நானாட்டான் பிரதேச செயலக மைதானத்தில் பி.ப. 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பொன்தீவு கண்டல் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிறு கண்டல் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

பூப்பந்தாட்டத் தொடரில்

# றஜீவ், குகதர்சன் இணை தங்கப் பதக்கம் வென்றனர்

யாழ்ப்பாணம்,செப்.8
உகலத் தமிழர் பூப்பந்தாட்ட பேரவையால் நடத்தப்பட்ட வடக்கு -கிழக்கு மாகாண ரீதியிலான பூப்பந்தாட்டத் தொடரில் 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான இரட்டையர் ஆட்டத்தில் றஜீவ், குகதர்சன் இணை தங்கப்பதக்கம் வென்றது.

கடந்த வாரம் கிளிநொச்சி உள்ளகரங்கில் இடம்பெற்ற 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான இரட்டையர் ஆட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றிய றஜீவ், குகதர்சன் இணையை எதிர்த்து யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றிய காண்டீபன், அன்ரனி இணை மோதியது. இதில் முதல் இரு செற் ஆட்டத்தை யாழ்ப்பாண மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய றஜீவ், குகதர்சன் இணை 21:12, 21:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி வெற்றி பெற்றது. (23)

## வளர்மதி – அன்னை அரையிறுதியில் மோதல்

யாழ்ப்பாணம்,செப்.8
யாழ்.கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட அங்கத்துவக்கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டம் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதில் அச்செழு வளர்மதி விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவற்குழி அன்னை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)





அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடர்

# நடால் - மெத்வதேவ் இறுதியில் மோதல்

அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடரில், ரபேல் நடால் மற்றும் மெத்வதேவ் ஆகியோர் இறுதிப்போட்டிக்கு முன்னேறினர்.



அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடர் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது. நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு அரையிறுதிப் போட்டியில் ஸ்பெயின் நாட்டின் நட்சத்திர வீரர் ரபேல் நடால், இத்தாலியின் மேட்டியோ பிரிட்டினியை எதிர்கொண்டார். விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நடால் 7:6, 6:4, 6:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதிக்கு முன்னேறினார். இவர் அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் போட்டியில் 5ஆவது முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

மற்றுமொரு அரையிறுதி ஆட்டத்தில் ரஷ்ய வீரர் மெத்வதேவ், பல்கேரிய வீரர் திமித்ரோவை 7:6, 6:4, 6:3 என்ற செற் கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்று இறுதிக்கு முன்னேறினார்.

இறுதிப் போட்டி நாளை நடைபெற உள்ளது. இதில் நடால், மெத்வதேவ் பலப்பரீட்சை நடத்த உள்ளனர்.



# செரீனா - பியான்கா இறுதியில் பலப்பரீட்சை

அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடரில் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிச் சுற்றில் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ், கனடாவின் பியான்கா ஆண்ட்ரெஸ்வும் மோதுகின்றனர்.

அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடர் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. நேற்று முன்தினம் இடம்பெற்ற பெண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் கனடாவின் பியான்கா ஆண்ட்ரெஸ்கு, சுவிட்சர்லாந்தின் பெலின்டா பென்சிக்கை எதிர்த்து விளையாடினார். இதில் பியான்கா ஆண்ட்ரெஸ்கு 7:6, 7:5 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

இதன் மூலம் கிராண்ட் ஸ்லாம் போட்டி இறுதி சுற்றில் கால்பதித்த 2ஆவது கனடா வீராங்கனை என்ற பெருமையை பெற்றார் பியான்கா ஆண்ட்ரெஸ்கு. இதற்கு முன்னர் கடந்த 2014ஆம் ஆண்டு விம்பிள்டன் தொடரில் கனடாவைச் சேர்ந்த பவுச்சார்டு இறுதி சுற்றுக்கு முன்னேறியிருந்தார்.

இறுதி சுற்றில் பியான்கா ஆண்ட்ரெஸ்கு 23 முறை கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்ற அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸை எதிர்கொள்கின்றார். செரீனா வில்லியம்ஸ் தனது அரையிறுதி சுற்றில் உக்ரைன் நாட்டு வீராங்கனை எலினா ஸ்விட்டோலினாவை 6:3, 6:1 என்ற நேர் செற் கணக்கில் எளிதாக வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியிருந்தார்.

இறுதிப் போட்டி இன்று நடைபெற உள்ளது. இதில் செரீனா, பியான்கா பலப்பரீட்சை நடத்த உள்ளனர்.

## மலிங்கவுக்கு குவியும் பாராட்டுக்கள்

நியூசிலாந்துக்கு எதிரான மூன்றாவது ரி-20 போட்டியில் இலங்கை அணித் தலைவர் லசித் மலிங்கவின் பந்துவீச்சை பலரும் பாராட்டியுள்ளனர்.

நியூசிலாந்து அணி இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. டெஸ்ட், ரி-20 போட்டிகளில் விளையாடி வருகின்றது. டெஸ்ட் போட்டி 1:1 என்ற நிலையில் சமநிலையில் முடிவடைந்தது. ரி-20 போட்டியை நியூசிலாந்து அணி 2:1 என்ற நிலையில் கைப்பற்றியிருந்தாலும். இறுதிப் போட்டியில் நியூசிலாந்து அணியை இலங்கை அணி பந்து வீச்சாளர் மலிங்க புரட்டிப் போட்டிருந்தார். அவர் ஒரு பந்துப் பரிமாற்றத்தில் 4 பந்துகளில் 4 இலக்குகளைச் சாய்த்தார். மொத்தமாக இறுதிப் போட்டியில் அவர் 5 இலக்குகளைக் கைப்பற்றி அணியின் வெற்றிக்கு வித்திட்டதோடு சாதனைகளையும் நிகழ்த்தியிருந்தார். இதற்குப் பாராட்டு தெரிவிக்கும் வகையில் ருவிற்றரில் விளையாட்டு வீரர்கள் பலரும் அவருக்கு பாராட்டு தெரிவித்துள்ளனர்.

அந்த வகையில், இந்திய அணி வேகப்பபந்து வீச்சாளர் பும்ரா, வரலாற்றை உருவாக்கும் லசித் மலிங்க அற்புதமான பந்து வீச்சை வீசியுள்ளார்- என்றார்.

லசித்மலிங்க மேலும் மேலும் சிறந்த பந்து வீச்சாளராக மாறிவருகின்றார் என பர்வேஸ் மகரூவ் தெரிவித்தார்.

இந்திய அணியின் முன்னாள் வீரர் முகமட் கைவ் தெரிவிக்கையில்; நான்கு இலக்குகளை நான்கு பந்துகளில் வீழ்த்தி இரண்டாவது தடவையாக இந்த சாதனையை நம்பமுடியவில்லை - என்றார்.

வயது என்பது வெறும் எண் மாத்திரமே என்று ரசல் ஆர்னோல்ட் தெரிவித்தார்.





தட்டு எறிதலில்

## பிரகாஸ்ராஜ் தங்கம் வென்றார்

யாழ்ப்பாணம், செப். 8

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்படும் வடக்கு மாகாண மெய்வன்மைப் போட்டியில் ஆண்களுக்கான தட்டு எறிதல் போட்டியில் யாழ்ப்பாண மாவட்டத்தின் சார்பில் கலந்துகொண்ட எஸ். பிரகாஸ்ராஜ் புதிய சாதனையுடன் தங்கப்பதக்கம் வென்றார்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்படும் வடக்கு மாகாண மெய்வன்மைப் போட்டி இடம்பெற்றுவருகின்றது. நேற்று சனிக்கிழமை இடம் பெற்ற ஆண்களுக்கான தட்டு எறிதல் போட்டியில் யாழ்ப்பாண மாவட்டத்தின் சார்பில் கலந்து கொண்ட பிரகாஸ்ராஜ் 40.35 மீற்றர் தூரம் எறிந்து புதிய சாதனையைப் படைத்ததோடு தங்கப் பதக்கத்தையும் கைப்பற்றினார்.

கடந்த 2012ஆம் ஆண்டு வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட வடக்கு மாகாண மெய்வன்மைப் போட்டியில் ஆண்களுக்கான தட்டு எறிதல் போட்டியில் யாழ்ப்பாணம் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய கரிகரன் 39. 13 மீற்றர் தூரம் எறிந்து சாதனைபடைத்தமை குறிப்பிடத்தக்கது. அந்தச் சாதனையை தற்போது பிரகாஸ்ராஜ் முறியடித்துள்ளார். யாப்பாண மாவட்டத்தின் சார்பில் கலந்து கொண்ட எஸ். மிதுன்ராஜ் 36.35 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும், யாழ்ப்பாண மாவட்டத்தின் சார்பில் கலந்து கொண்ட யதார்த்தனன் 33.99 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (23)

## காலிறுதியாட்டம் இன்று

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்துப்படும் தலைவர் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதியாட்டங்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இதில் முற்பகல் 10மணிக்கு இடம்பெறும் முதலாவது காலிறுதியாட்டத்தில் தாவடி காளி அம்பாள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கலைவாணி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

முற்பகல் 11 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது காலிறுதியாட்டத்தில் அண்ணா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மகாத்மா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் மூன்றாவது காலிறுதியாட்டத்தில் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மாவத்தை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் 4ஆவது காலிறுதியாட்டத்தில் நவாலி சென். பீற்றேஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விளான் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

## ஸ்மித்துக்கு சச்சின் பாராட்டு

ஆஷஸ் தொடரில் இரட்டை சதம் அடித்த ஆஸ்திரேலிய வீரர் ஸ்மித்துக்கு சச்சின் பாராட்டு தெரிவித்துள்ளார். ஆஷஸ் தொடரில் இரண்டாவது நாள் ஆட்டத்தில், 319 பந்துகளைச் சந்தித்த ஸ்மித் 24 நான்கு ஓட்டங்கள், 2 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 211 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார்.

பந்தை சேதப்படுத்திய சர்ச்சையிலிருந்து மீண்டு, அணிக்குத் திரும்பி வந்துள்ள ஸ்மித், தனது சிறப்பான பங்களிப்பை ஒவ்வொரு போட்டியிலும் அளித்து வருகிறார். ஆஷஸ் போட்டியிலும் ஸ்மித், இங்கிலாந்துக்கு எதிராக வலுவான ஓட்டக் குவிப்பை வழங்கக் காரணமாகி இருக்கிறார். இந்த நிலையில் ஸ்மித்தின் இரட்டை சதத்தை இந்திய அணியின் முன்னாள் வீரர் சச்சின் பாராட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்;

சிக்கலான விளையாட்டு முறை. ஆனால், ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட மனநிலை. நம்பமுடியாத மறுபிரவேசம் ஸ்மித் - என்றார்.

## தவறவிடப்பட்டுள்ளது

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த தவநேஸ்வரன் தபேசன் ஆகியவரின் Pc XXXX எனும் இலக்கமுடைய வாகன புத்தகம், கச்சேரிக்கும் சுண்டுக்குளிக்கும் இடையில் தவறவிடப் பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். (தகுந்த சன்மானம் வழங்கப்படும்)

**076 275 3016**

## ENGLISH LANGUAGE CENTRE

**IELTS Classes புதிய பிரிவு**

**Spoken with Grammar**

**Grade: 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள் For English Medium**

**Group Classes Grade: 6 - 11**

**Start : 14.09.2019 Sat and Sun (மட்டும்)**

53, Sivakurunathar Lane. Brown Rd. T.P. 077 798 9830

(cs.27883) (13.17)

## பணியாளர்கள் தேவை

**வரவேற்பாளர்கள்**
(வேலை தேடும் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை)

**கணினி வடிவமைப்பாளர்கள் (Graphic Designer)**

**அல்பம் கட்டுனர் (Album Binder)**

**அலுவலக உதவியாளர்கள்**

வேலை பழகி வேலை செய்பவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**மூர்த்தி டிஜிற்றல்**
62/20 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
**077 224 7428**

## வேலையாள் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் வியாபார ஸ்தாபனம் ஒன்றுக்கு அப்பகுதிக்கு அண்மையில் உள்ளவர்கள், வயதெல்லை 19 - 23 வரை மற்றும் க.பொ.த உயர்தரம் சித்தியடைந்த ஆண்கள் மட்டும் கணினி தரவுகள் பதிவதற்கு எதிர்பார்க்கப் படுகின்றார்கள்.

**அடிப்படைச் சம்பளம் - 18,000/=**

தொடர்புகொள்ளவேண்டிய நேரம் காலை 9.00 - 11.00 வரை.

**077 663 6384**

(CS 27879)(04.17)

## விற்பனைக்குண்டு

பற்றி மோட்டார் சைக்கிள் விற்பனைக்குள்ளது.
**வசந்திஜா மின்பொருள் விற்பனை நிலையம், சுன்னாகம்**

**077 669 1268**

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 30 வயது நிரம்பிய சூரிய செவ்வாய் கொண்ட மணமகனுக்கு மணமகள் தேவை.

**077 517 7575**

## விற்பனைக்குண்டு

புதிய செம்மணி வீதி, கல்வியங்காட்டில் 2 பரப்புக் காணியுடன் கூடிய வீடும்.
**Hunk Black Colour 150.CC**
மோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு.

**077 071 1758, 076 658 6443**

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி சந்திக்கு அருகில் சிறிய குடும்பம் / வேலைபார்க்கும், கல்வி கற்கும் பெண்களுக்கு வீடு வாடகைக்கு உண்டு.

**077 616 1750**

## பணியாள் தேவை

யாழ்ப்பாணம், பிறவுண் வீதியில் உள்ள வீடு ஒன்றுக்கு துப்புரவு செய்வதற்கு பணியாள் ஒருவர் தேவை. வேலைநேரம் 4.00 மணித்தியாலம். காலைவேளையில் சம்பளம் 400/ ஒருமணி நேரத்துக்கு 100/= வீதம் வந்து போகக்கூடியவர்கள் தேவை. ஆண் அல்லது பெண்.

**077 711 1999**

## Graphic Designer தேவை

ஆஸ்திரேலிய நிறுவனம் ஒன்றின் யாழ்.பிறவுண் வீதியிலுள்ள அலுவலகத்துக்கு **Graphic Designer** தேவை. **Photo Shop** இல் சிறந்த அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும். இரண்டு வருடத்துக்கு மேல் வேலை அனுபவம் விரும்பத்தக்கது. Word Press தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். **ஆரம்ப சம்பளம் 40,000/-**

**077 711 1444**

## வாடகைக்கு

கிளிநகரில் சகல வசதிகளும் கொண்ட (வாகனத்தரிப்பிடம், சிறுவர் பொழுதுபோக்கு அம்சம்) ஹொட்டல் வாடகைக்கு விடப்படும்.

**077 545 6420**

## விற்பனைக்கு உண்டு

WP PA XXXX எனும் இலக்கமுள்ள Toyota Crew Cab வாகனம் ஒன்று விற்பனைக்கு உண்டு.
**விலாசம் : சங்கரப்பிள்ளைவீதி, மானிப்பாய்.**

**021 225 5625/077 935 2372**

(CS 27802)(04.17)

## வீடு வாடகைக்கு

கோண்டாவில் சந்தியை அண்மித்த பலாலி பிரதான வீதிக்கு அருகாமையில் நல்ல சூழலில் அமைந்துள்ள சகல வசதிகளுடன் இணைந்த குளியலறையுடன் 04 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும். NGO. அரச வேலை குடும்பத்தினர் விரும்பத்தக்கது.

**தொடர்பு : 077 635 3562**

(CS 27811) (04.17)

## Spoken English / Sinhala (Personal / Group)

**A/L எழுதிய மாணவர்களே!**
**ஆங்கிலம் / சிங்களம் சரளமாகப் பேசுவது உங்கள் விருப்பமா?**

- **குறுகிய காலம் ( 30 Hours)**
- **இலகுவான கற்பித்தல்**

**அழையுங்கள்**

**077 640 8622**

## சிறுநீரகம் தேவை

B+ அல்லது O+ வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை. கொடையாளிகள் விரும்பினால் உடனடியாக பின்வரும் இலக்கத்தை

தொடர்புகொள்ளவும்
**078 765 0530**

## ES Printers

357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் இடம்...

# British Way® English Academy

உங்கள் வாழ்க்கைக்கும் வயதுக்கும் பொருத்தமான விதத்தில் பாடநெறி எங்கள் வசம்




### 02 மாத கால ஆங்கில சான்றிதழ் பாடநெறி
**02 MONTH ENGLISH COURSE**

கிரேக்க மொழியைப் போல ஆங்கிலம் எதுவுமே தெரியாது என ஓரிடங்களில் தடைப்படும் போது கவலையாக உள்ளதா? எப்படியாவது மற்றவர்களை சேரவேண்டும், ஓரிடத்திற்குச் சென்று கதைத்து விளங்கிக்கொள்ள வேண்டும் என்று நீங்களும் நினைப்பவரா? அவ்வாறெனில் உங்களுக்கான தகுந்த பாடநெறி இதுவாகும்.

### 03 மாத ஆங்கில டிப்ளோமா
**03 MONTH ENGLISH DIPLOMA**

எதாவது இடத்தில் நீங்கள் ஆங்கிலத்தை தவற விட்டுள்ளீர்களா? உங்களால் ஆங்கிலத்தை பிடிக்க முடியவில்லையா? எங்களுடன் 3 மாதம் இணையுங்கள். ஆங்கிலத்தில் எந்த நிலையில் இருந்தாலும் நாங்கள் உங்களை ஆங்கிலம் கதைக்க வைப்போம்

வாரத்தில் 05 நாட்கள் படி, 03 மாதங்கள்.
காலை 8.00மணி முதல் மாலை 4.00 வரை

பாடநெறி ஆரம்பம் | புரட்டாதி 16

### 02 மாத கால ஆங்கில டிப்ளோமா
**02 MONTH ENGLISH DIPLOMA**

ஆங்கிலத்தை கதைக்க முடியாது ஆனால் பிறர் கதைப்பது உங்களுக்கு புரியும்! GRAMMER ம் உங்களால் முடியும். அப்படியாயின் ஆங்கிலம் கதைக்க முடியுதா? நீங்கள் நினைப்பது என்ன? அப்படியாயின் வாருங்கள் எங்களிடம் நாங்கள் உங்களை ஆங்கிலம் கதைக்க வழிவகுத்துத் தருவோம்.

வாரத்தில் 5 நாட்கள் படி, 02 மாதங்கள்.
காலை 8.00 மணி முதல் மாலை 4.00 வரை

பாடநெறி ஆரம்பம் | புரட்டாதி 16

- வார இறுதி பாடநெறி
- இரவுப் பாடநெறி
- சிறுவர்களுக்கான பாடநெறி
- ஆங்கிலமும் தகவல் தொழிநுட்பம்
- IELTS பாடநெறி

எமது அனைத்து மாணவர்களும் ஆங்கிலத்தை சரளமாக கதைப்பதற்கான உத்தரவாதம் எம்மிடமிருந்து மட்டுமே

LINCOLN · THAMES COLLEGE · BRITISH · CTH · AOU · UNIVERSITY OF CAMBRIDGE · abe · TOEIC

துரித அழைப்பிற்கு BRITISH WAY ENGLISH ACADEMY

**021 221 4170**

உலகின் தலைசிறந்த ஆங்கில பயிற்சிப்பட்டறையாக 7TH WORLD SCIENTIFIC CONGRESS இனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது...

No 15, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.09.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.